

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம்

ஆண்டறிக்கை

2021

நோக்கு

கற்பித்தல், கற்றல் மற்றும்
ஆராய்ச்சி ஊடாக
அறிவின் எல்லைகளை
முன்நகர்த்தி
கணினிக் கல்வியில்,
உலகளாவிய
தலைமைத்துவத்தைப் பெற்றிருத்தல்

பணி

கணினி கற்கைகளை மேம்படுத்தி முன்னேற்றுதல்,
உலகளாவிய மூலோபாய கூட்டணிகளை
வளர்த்தல்,
பல்துறை ஆராய்ச்சியை ஊக்குவித்தல்,
தொழில்நெறிசார் திறன்கள்,
தலைமைத்துவப் பண்புகள் மற்றும்
நேர்மைத்திறனுடன்
சமூகப் பொறுப்புள்ள தொழில்வல்லுனர்களை
உருவாக்குதல்
பிராந்தியத்தில் அறிவு மையம்
என்ற நாட்டின் நிலைமைக்குப் பங்களித்தல்

பணிப்பாளரின் மீளாய்வு



மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் நான் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் ஆண்டறிக்கை 2021 இனைச் சமர்ப்பிக்கின்றேன். கணினி கற்றல் மற்றும் கற்பித்தலில் ஒரு சால்புமிகு மத்திய நிலையமாகத் திகழ்வனையே பிரதான இலக்காகக் கொண்ட கொ.ப.க.க., இந்த அறிக்கையில் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பட்டதாரி மற்றும் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்களின் அடைவுகள் அத்துடன் எதிர்கொள்ளப்பட்ட சவால்களை தருகின்றது. கணினிக் கற்பித்தல் மற்றும் கற்றலில் ஒரு சால்புமிகு மத்திய நிலையமாக, அதனையே அதன் நோக்காகக் கொண்ட கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடம், இந்த அறிக்கையில் 2021 ஆண்டில் நடாத்தப்பட்ட இளங்கலை, பட்டப் பின், முதுகலை, மற்றும் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் பொது நிருவாக நடவடிக்கைகளில் அதன் அடைவுகள் அத்துடன் எதிர்கொண்ட சவால்கள் ஆகியவற்றினைத் தருகின்றது. சுருக்கமாகக் கூறின் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்தின் வரலாற்றில், 2021 ஆம் ஆண்டு மிகவும் சவாலானதொரு ஆண்டாக இருந்தது, ஏனெனில் அனைத்து நடவடிக்கைகளின் கலாச்சாரமும் நாட்டில் நிலவிய கோவிட்-19 பெருந்தொற்று சூழ்நிலை காரணமாக ஒரு புதிய செயற்பாட்டு முறைக்கு சடுதியாக மாறியது. அனேகமாக அனைத்து நடவடிக்கைகளும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது, பல்வேறு நடவடிக்கைகளை இரத்துச் செய்வதற்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் செயற்பாட்டின் நிபந்தனைகளைப் பொறுத்து விரை திறமுடைய முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்ற நிர்பந்திக்கப்பட்டோம். எவ்வாறாயினும், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடம் இயங்கலை முறை ஊடாடல் ஊடாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதன் திறன் காரணமாக அதிர்ஸ்டவசமாகத் தப்பிப் பிழைத்தது. எமது நடவடிக்கைகளின் பெரும்பான்மையின் 80% விட அதிகமானவற்றை ஒரு புதிய வழமையான சூழலில் எம்மால் அடையக்கூடியதாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தெரிவுச் செயல்முறையின் ஊடாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்பினைப் பெற்ற 347 உள்ளக இளங்கலை மாணவர்கள் தமது முதலாம் ஆண்டு கல்விசார் நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கினர். அதுவே கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூட வரலாற்றில் மிகப் பாரிய உள்ளெடுப்பாக இருந்தது, மேலும் மாணவர்கள் அரையாண்டுப் பரீட்சைகள் தவிர அவர்களின் கல்வி நடவடிக்கைகளை இயங்கலை முறையில் தொடர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் 1157 இளங்கலை மாணவர்களுக்காக கணினி விஞ்ஞான கற்கைநெறிகளை வழங்கியது. அனைத்துச் சிரமங்களின் மத்தியில், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் ஆண்டின் இறுதியில் கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் முறைமைகளில் 267 பட்டதாரிகளை உருவாக்க முடிந்தது, மேலும் அந்த மாணவர்களில் 90% அதிகமானவர்கள் அவர்களின் பட்டமளிப்பிற்கு முன்னதாகவே வேலை வாய்பினைப் பெற்று பணிக்கமர்த்தப்பட்டு இருந்தனர். பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக, கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடம்

பாதீட்டு மூலதன நிதியினைப் பெற்றிருக்கவில்லை ஆனால் 2022 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்ட ஒரு சில நடவடிக்கைகளைத் தவிர திட்டமிடப்பட்ட பல நடவடிக்கைகளை முகாமை செய்யக்கூடியதாகவிருந்தது. மறுபுறத்தில், பெருந் தொற்று சூழ்நிலை பல்வேறு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் எமது சுதந்திரத்தினைக் மட்டுப்படுத்தியது.

கணினிக் கல்விக்கு பாரிய கேள்வி இருப்பதனால், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் அதன் மிகவும் முக்கிய தேசிய சேவையாகிய தகவல் தொழில்நுட்பத்தில் இளங்கலை மாணி (த.தொ.இ.) வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துகின்ற பணியினைத் தொடர்ந்தது, அதற்காக 2021 ஆம் ஆண்டில் 2158 புதிய மாணவர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவதற்கான வாய்பினைப் பெற்றனர், இருந்தபோதிலும், பெருந் தொற்று சூழ்நிலை காரணமாகவும் உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் அந்த நிகழ்ச்சித்திட்டம் எட்டு மாதங்கள் தாமதமாகியது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் த.தொ.இ. நிகழ்ச்சித்திட்டத்திற்கான அனைத்து அரையாண்டுப் பரீட்சைகளையும் 2021 ஆம் ஆண்டு பெப்பிரவரி மற்றும் மார்ச்சு மாதங்களில் நடாத்தக் கூடியதாக இருந்தது, மேலும் தாமதமாகிய அனைத்து கல்விசார் நடவடிக்கைகளும் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாத்ததிற்கு முன்னதாக பூர்த்தியாக்கப்பட்டன. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் இறுதியாண்டு மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிடக் கூடியதாக இருந்ததுடன், அதி கூடிய எண்ணிக்கையான பட்டதாரிகளான, 350 மாணவர்கள், த.தொ.இ. பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அதே நேரத்தில், 575 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் டிப்புளோமாவினையும், 312 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் உயர் டிப்புளோமாவினையும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெற்றுக் கொண்டனர்.

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாததில் முதுகலை பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக அனுமதிப் பரீட்சை ஒன்றினை நடாத்தக் கூடியதாக இருந்தது, மேலும் செயற்பாட்டின் இயங்கலை முறை ஊடாக செயல்முறையைப் பூர்த்தியாக்கியதுடன் புதிய தொகுதியின் 280 மாணவர்கள் அவர்களின் கல்விசார் நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத் தொடக்கத்தில் ஆரம்பித்தனர். குறுகிய கால வழமை நிலைமையில், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் இளங்கலை மற்றும் பட்டப் பின் மாணவர்களுக்கான நேரில் தோற்றும் பரீட்சைகளையும் வளாகத்தினுள் 2021 மே மாதத்திற்கு முன்னதாக நடாத்த முடிந்தது, மேலும் கோவிட்-19 பெருந் தொற்றின் திடீர் அலையொன்றின் காரணமாக முதுகலைப் பரீட்ச்சைகளை அது பூரத்தியாக்கத் தவறியது. ஆகையால், இயங்கலை இணையவழியூடாக தூண்டப்பட்ட பரீட்சைகள் முதுகலை பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நடாத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னதாக முதுகலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பெறுபேறுகளை வெளியிடக் கூடியதாகவிருந்தது.

மீண்டும் வரும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான அரசாங்க ஒதுக்கீட்டின் பற்றாக்குறை காரணமாக நிறுவனத்தின் நிலைத்திருப்பிற்கு பட்டப் பின் மற்றும்

விரிவாக்க கற்கைநெறிகளில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ஒரு கணிசமான பங்களிப்பினை வழங்கியிருந்தது. கோவிட்-19 பெருந் தொற்றுச் சூழ்நிலை காரணமாக கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் சில நடவடிக்கைளைத் தாமதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த போதிலும் வழமையான செயற்பாட்டு மட்டத்திற்கு நெருக்கமாக தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தினைப் பேணியது. கொழும்புப் பல்கலைக்கழக கல்விக்கூடப் பணியாளர்களின் வீட்டிலிருந்தே இணையவழியூடாகத் தமது கடமைகளைத் தொடர்ந்து பணியாற்றக் கூடிய திறனும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டுமானமுமே இந்த இயலுமைக்கான முக்கிய காரணமாகவிருந்தன.

மாணவர் நலன்புரி உதவிகள் (புலமைப்பரில்கள் மற்றும் கடன் வசதிகள்) இயங்கலையூடான இணையவழிக் கற்றல் கற்றல் காலப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த போதிலும், புறப் பாடவிதான நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல்வேறு பௌதீக நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன அல்லது செல்லுபடியற்றதாக்கப்பட்டன. மறு புறத்தில், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இரு தரப்பினருக்காகவும் இணையவழியூடான பல்வேறு இயங்கலை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. துரதிஷ்டவசமாக, வெளிசெல்லும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு பணியாளர்களுக்கான பௌதிக நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இரத்துச் செய்யப்பட்டன. ஷூம்- செயலி சார்ந்த இயங்கலை இயங்குதளம் முறையான கூட்டங்களை நடாத்துவதற்கும் அத்துடன் இயங்கலை ஒன்றுகூடல்கள் பணியாளர்கள் அத்துடன் மாணவர்களின் ஊக்கத்தினை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

பெருந் தொற்று சூழ்நிலை அனைத்து உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் பாதித்தது, மேலும் அது 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதில் ஒரு கணிசமான தாமதத்தினை உருவாக்கின. செயற்பாட்டுப் பிரச்சினைகள் காரணமாக உட்கட்டுமான அபிவிருத்தியின் சில திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் கூட 2022 ஆம் ஆண்டிற்குப் பிற்போடப்பட்டன. அனைத்து அரசாங்கப் பாதீடு ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறாதிருந்த போதிலும், அந்தச் சூழ்நிலை செயற்பாடுகள் மீது கணிசமான தாக்கமெதனையும் ஏற்படுத்தியிருக்கவில்லை ஏனெனில், கல்விசார் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரதானமாக இயங்கலையூடான இணையவழியில் மேற்கொள்ளப்பட்டன. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் கடந்த கால மேம்பாடு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்பாடுகளின் நிலைபேற்றிற்கு ஒரு சொத்தாகவிருந்தது, ஏனெனில் நிறுவனத்தின் உயிர்நாடிக்கு இணையவழி இயங்கலைத் தொடர்பாடல் முதுகெலும்பாகவிருந்தது. எவ்வாறாயினும், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் உயர்ந்து வரும் கேள்வியினை சமாளிப்பதற்கு தகவல் உட்கட்டமைப்பின் நிலைபேற்றினைப் பேணும் பொருட்டு பல பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை நாங்கள் உணர்கின்றோம்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பெருந் தொற்று சூழ்நிலை பாதித்திருந்த போதிலும், முன்னேற்றத்தில் கணிசமான எதிர்மறையான தாக்கமெதுவும் இருந்திருக்கவில்லை ஏனெனில் கல்விசார் பணியாளர்கள் 2021 ஆம் ஆண்டு காலப்

பகுதியில் 65 மாநாட்டு மற்றும் பருவகால இதழ்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பிரசுரித்திருந்தனர். வருடாந்த ICTer மாநாடு ஒரு முற்றுமுழுதானதொரு கலப்பு மாநாடாக ஒழுங்கு செய்யப்பட்டது, மேலும் அது அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு

புதிய அநுபவமாக இருந்தது. அதே சமயத்தில், அந்த மாநாடு வேறு பலருக்கும் ஒரு இலவசமான கல்விசார் நிகழ்வாகவிருந்தது ஏனெனில் அனைத்து சமர்பிப்புகளும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் யூடியூப் அலைவரிசையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. அதேவேளை, ICTer பருவ இதழும் கூட 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மூன்று பிரசுரங்களை வெளியிட்டிருந்தது.

மூலதன அபிவிருத்திக்கான அரசாங்க மானியம் அடக்கமானதாக இருந்தபோதிலும் (60 மில்லியன்), கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் மீண்டும் வரும் செலவினங்களுக்காக (392 மில்லியன்) போதுமான நிதியினைப் பெற்றிருந்தது. பெருந் தொற்றுச் சூழ்நிலை காரணமாக, எம்மால் பல மீண்டும் வரும் செலவினங்களின் செலவினைக் குறைக்கூடியதாக இருந்ததுடன் அது மொத்தத் தேவைகளின் மீண்டும் வரும் செலவினத்தை (81%) முகாமை செய்வதற்கு எமக்கு வசதியளித்தது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் அதன் பிறப்பாக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மேலதிகமாக மூலதன அபிவிருத்திக்கு 13 மில்லியனும் மீண்டும் வரும் செலவினத்திற்கு 90 மில்லியனும் செலவிட்டது. கடந்த சில ஆண்டு காலப் பகுதியில், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் செலவுகளை ஈடுகட்டுவதற்கு அதன் ஒதுக்கங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தது ஏனெனில் அரசாங்க மானியம் அத்துடன் பிறப்பாக்கப்பட்ட வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் பற்றாக்குறையான நிதியிடல் காரணமாக அதன் ஒதுக்கங்களில் இருந்து 46 மில்லியனைச் செலவிட நிர்ப்பந்திக்கப்பட்டது மேலும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் ஒதுக்கங்களிலிருந்து கடந்த மூன்று வருட காலப் பகுதியில் (2020-2018) 199.58 மில்லியனை திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செலவிட்டிருந்தது.

இறுதியாக, இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பேரவை, மூதவை, துணைவேந்தர், முகாமைத்துவச் சபை, கல்விக் குழு, கற்கைகள் சபைகள், மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் அனைத்துப் பிற பணியாளர்களுக்கும் பல சவால்களைச் சந்தித்த 2021 ஆண்டினை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் பிறிதொரு நினைவுகூரத்தக்க ஆண்டாக உருவாக்கியமைக்காக எனது நன்றினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அதனை 2022 ஆம் ஆண்டில் வாய்ப்புகளாக மாற்ற முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் பேராசிரியர் கே. பி. ஹெவாகமகே
கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடம்

இலக்குகள்

1. கணினியில் கற்பித்தல் மற்றும் கற்றலில் ஒரு சால்புமிகு மையமாகத் திகழ்தல் **[கல்வி]**

2. பல்துறை ஆராய்ச்சியினை வலியுறுத்துகின்ற அதேவேளை கணித்தலில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவித்தல் [**ஆராய்ச்சி**]

3. மாணவர்கள்/ பணியாளர்களின் தரங்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் தொழில்முறைசார் நெறியினை மேம்படுத்துதல் [**தரம்**]

4. பௌதிக வளங்கள் மற்றும் மனித மூலதனத்தின் ஊடாக மிகவும் உயர்வான உற்பத்தித் திறனுக்காக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் [**அபிவிருத்தி**]

5. நல் ஆளுகை மூலம் நிறுவனத்தின் நன்மதிப்பை மேம்படுத்துதல் (**ஆளுகை**)

6. சமூகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டிற்குப் பங்களித்தல் [**பொறுப்பு**]

உள்ளடக்கம்

நோக்கு i

பணி i

பணிப்பாளரின் மீளாய்வு ii

இலக்குகள் vi

உள்ளடக்கம் vii

கணினிக் கல்விக்கூடம் பற்றி மேலோட்டம் xi

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் நிறுவனக் கட்டமைப்பு - 2021 xi

ஒரே பார்வையில் - கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் (2017-2021) XIII

1. **ஆளுகை** 3

1.1 *கொ.ப.க.க. இன் அலுலவர்கள்* 3

1.2 *அதிகார சபைகள்* 4

1.2.1 முகாமைத்திவச் சபை (மு.ச.) 4

1.2.2 நிதி மற்றும் முகாமைத்துவக் குழு (நி.மு.கு) 6

1.2.3 கணக்காய்வுக் குழு (க.கு) 6

1.2.4 கல்விக் குழு 7

1.2.5 கற்கை சபைகள் 9

1.2.5.1 உள்ளக இளங்கலை மாணி பட்டங்கள் கற்கைகள் சபை (க.ச./உ.இ.ப.) 9

1.2.5.2 ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் சபை (க.ச./ஆ.உ.ப.) 11

1.2.5.3 வெளிவாரி மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் சபை (க.ச.-வெ.வி.நி.) 13

1.2.6 கற்கைத் துறைகள் 14

1.2.6.1 கணினியியல் மற்றும் நுண்ணறிவு முறைமைகள் துறை (க.நு.மு.) 14

1.2.6.2 தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் தொழில்நுட்பங்கள் துறை (தொ.ஊ.தொ) 15

1.2.6.3 தகவல் முறைமைகள் பொறியியல் துறை (த.மு.பொ.) 15

1.2.7 நிலையங்கள் 15

2. **கல்வி** 27

2.1 *இளங்கலைமாணி கல்வி* 27

2.1.1 உள்ள இளங்கலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 27

2.1.2 கல்வி ஆண்டு – 2018/2019 மற்றும் மாணவர் சேர்க்கை 28

2.1.3 பரீட்சையில் மாணவர் செயலாற்றல் 30

2.1.4 தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பு இடப்படுத்தல் 31

2.1.5 இளமாணி மாணவர் நலன்புரி 32
2.1.5.1 இளமாணி மாணவர் நலன்புரி 32
2.1.6 கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் 39
2.1.7 மாணவர் செயற்பாடுகள் 40
2.1.8 மாணவர் அடைவுகள் 41
2.1.8.1 பாடவிதானம் சாராத நடவடிக்கைகள் 41
2.1.9 பட்டமளிப்பு விழா 2021 41
2.1.10 இளமாணி பட்டதாரி விருதுகள் 44
2.1.11 வேலைவாய்ப்புத்திறன் 45
2.2 *பட்டப் பின் கற்கைகள்* 46
2.2.1 முதமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் 46
2.2.1.1 முதுமாணிப் பட்டங்கள் 46
2.2.1.2 மாணவர் சேர்ப்பு 48
2.2.1.3 பணியாளர் பங்கேற்பு 49
2.2.1.4 முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டமளிப்பு 49
2.2.1.5 முதுமாணி நிகழ்ச்சித்திட்ட மேம்பாடு 51
2.2.1.6 ஆராய்ச்சிப் பட்டங்கள் - தத்துவ முதுமாணி மற்றும் தத்துவக் கலாநிதி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 51
2.3 வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கற் கற்கைநெறிகள் 53
2.3.1 தகவல் தொழில்நுட்ப இளமாணி (வெளிவாரி) பட்ட நிகழ்ச்சித்திட்டம் 53
2.3.1.1 மாணவர் செயலாற்றல் – 2021 53
2.3.1.2 த.தொ.இ. போதனை நிறுவனங்கள் 54
2.3.1.3 த.தொ.இ. வெளிவாரி பட்ட பட்டமளிப்பு மற்றும் டிப்புளோமா விருதுகள் 55
2.3.1.4 பட்டமளிப்பு விழா விருதுகள் 56
2.3.1.5 வோலைவாய்புத் திறன் 56
2.3.2 விரிவாக்க கற்கைநெறிகள் 56
2.3.3 இயங்கலை விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் 58
2.3.4 வெளிநாட்டு மாணவர்கள் 59
3. ஆராய்ச்சி 63
3.1 *ஆராய்ச்சி, கண்டுபிடிப்புக்கள், மற்றும் வெளியீடு* 63
3.1.1 இளமாணிப் பட்ட மட்டத்திலான ஆராய்ச்சித் திட்டங்கள் 63
3.1.2 முதுமாணி பட்ட மட்ட திட்டங்கள் 64
3.1.3 ஆராய்ச்சிப் பட்டங்களின் திட்டங்கள் 65

3.1.4 நிதியிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் 65
3.1.4.1 உள்ளக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் 65
3.1.4.2 வெளியார்த் தரப்பினர்களால் நிதியிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் 67
3.1.5 பட்டப்பின் நிகழ்ச்சித்திடம் ஊடாக ஆராய்ச்சிக்கான ஒதுக்கம் மற்றும் பயன்பாடு 68
3.1.6 கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்தில் ஆராய்ச்சிக் குழுக்கள் 69
3.1.7 ஆராய்ச்சி வெளியீடுகளும் விருதுகளும் 72
3.1.7.1 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆராய்ச்சிக்கான விருதுகள் 73
3.1.7.2 கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடப் பணியாளர்களினால் நிகழ்த்தப்பட்ட முக்கிய/ அழைக்கப்பட்ட உரைகள் 74
3.1.7.3 கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்திற்கு வருகை தரும் ஆராய்ச்சியாளர்கள் 75
3.1.8 சர்வதேச மாநாடு - ICTER 2021 76
3.1.9 சர்வசே இதழ் – ICTER 80
3.1.10.1 இதழ் வெளியீடுகள் - 2021 82
3.1.10.2 மாநாட்டு வெளியீடு – 2021 85
4. மனித வளங்கள் - கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிகள் 93
4.1 *கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்தின் ஆளணி* 93
4.2 ***கொ.ப.க.க. பணியாளர்களின் ஒட்டுமொத்த தோற்றம்*** 95
4.3 ***கொ.ப.க.க. பணியாளர்களின் அங்கீகாரம்*** 96
4.4 ***பணியாளர் குழாம் அபிவிருத்தி மற்றும் பயிற்சி*** 97
4.4.1 மருத்துவ உதவித் திட்டம் 98
4.4.2 கொ.ப.க.க. இன் நலன்புரிச் சங்கம் 99
5. நிறுவனம்சார் மேம்பாடு 103
5.1 *தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரம்* 103
5.2 *உள்கட்டுமான அபிவிருத்தி* 106
5.2.1 மூலதனத் திட்டங்கள் – 2021 106
5.3 *நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அபிவிருத்தி* 109
5.4 2021 *ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (நி.அ.இ.) கொ.ப.க.க. இன் பங்களிப்பு* 115
5.4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (நி.அ.இ.) 115
5.4.2 2021 ஆம் ஆண்டிற்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான (நி-.அ.இ.) கொ.ப.க.க. இன் பங்களிப்பு 115
6. நிதி 127

6. நிதி 129

6.1 *மீண்டும் வரும் செலவினம்* 129

6.2 *மூலதன செலவினம்* 130

6.3 *ஆலோசனை மற்றும் ஆராய்ச்சித் திட்டங்கள் (வெளிவாரியாக நிதியளிக்கப்பட்டது)*.. 131

6.4 *நிதி ஆதரவு மற்றும் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தின் பகுப்பாய்வு*..... 132

6.4.1 நிதிசார் செயலாற்றல் பகுப்பாய்வுகள் 133

6.4.2 இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி விவரங்களின் பகுப்பாய்வு..... 133

6.4.3 நிதி நிலை அறிக்கை..... 134

6.4.4 நிதி செயலாற்றல் அறிக்கை 136

6.4.5 *பங்குலாபத்திலான மாற்றங்கள் பற்றிய அறிக்கை*..... 138

6.4.6 பணப்புழக்க (காசுப் பாய்வு) அறிக்கை..... 140

7. கொ.ப.க.க. இன் சிறப்பம்சங்கள் 2021 – புலப்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள் 193

7.1 *மாதாந்த சிறப்பம்சங்கள் - செயற்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்* 193

8. கணக்கோய்வு அறிக்வக 2021 205

கணினிக் கல்விக்கூடம் பற்றி மேலோட்டம்

கொழும்புப் பல்லைக்கழக கணினி கல்விக்கூடம் (கொ.பக.க.க.) [http://www.ucsc.cmb.ac.lk] ஒரு உயர் கற்கை நிறுவனமாக கணினி தொழில்நுட்ப நிறுவனம் (க.தொ.நி.) மற்றும் கணினி விஞ்ஞானத் துறை (க.வி.து.) ஆகியவற்றை இணைத்து 1995 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்த) சட்டத்திற்கு அமைய இறுதியாகத் திருத்தப்பட்ட வாறு 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 24 அ(1) கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் மூலம் 2002 செப்தெம்பர் மாதம் 1ஆம் திகதி, கணினி விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் உயர் கல்வியை வழங்கி, ஊக்குவித்து, மேம்படுத்தும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டது. இது கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள் ஒரு உயர் கல்வி நிறுவனமாக நாட்டினுள் கணினி கற்கைகளை மேம்படுத்தி, ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது, அத்துடன் கணினியில் ஒரு சர்வதேச அறிவு மத்திய நிலையமாகவும் உள்ளது. கொ.ப.க.க. க்கு நிதி சுய அதிகாரம் வழங்கப்பட்டு அதன் செயற்பாடுகள் 2002 நவம்பர் 15 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தில் (GZT NO. 1262/32) விபரிக்கப்பட்டிருப்பதுடன் அது எண்ணியல் தடயவியலுக்கான மத்திய நிலையத்தை உள்ளடக்குவதற்கு 2011 ஜூலை 22 ஆந் திகதி திருத்தப்பட்டது (GZT NO. 1715/32).

கொ.ப.க.க. இன் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் முறையே மூன்று (03) கல்வித் துறைகளைக் கொண்டிருக்கின்றது;

கணினியியல் மற்றும் நுண்ணறிவு முறைமைகள் துறை (க.நு.மு.-CIS)
தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் துறை (தொ.ஊ.தொ.-CMT)
தகவல் முறைமைகள் பொறியியற் துறை (த.மு.பொ.-ISE)

கொ.ப.க.க. இன் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் 06 நிலையங்களைக் கொண்டிருக்கின்றது:


உயர் எண்ணியல் பல்லூடக நிலையம் (உ.எ.ப.தொ.நி.-ADMTC);
கணினி சேவைகள் நிலையம் (க.சே.நி.-CSC);
வெளிவாரி பட்டங்கள் நிலையம் (வெ.ப.நி.-EDC);
E-கற்றல் நிலையம் (இ-க.நி.-e LC);
தொழில்முறைசார் அபிவிருத்தி நிலையம் (தொ.அ.நி.-PDC);
எண்ணியல் தடயவியலுக்கான நிலையம் (எ.த.நி.-CDF)

இந்த துறைகள் மற்றும் நிலையங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் பிறிதொரு பகுதியில் அளிக்கப்பட்டிருக்கின்றது.

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் நிறுவனக் கட்டமைப்பு - 2021

கட்டளைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் நடைமுறைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில், நிறுவனத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கொ.ப.க.க. இன் நிறுவனக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பின்வரும் வரைடத்தில் தரப்பட்ட படிநிலைகளுக்கு இணங்க அதிகாரத்தின் ஓட்டம் மற்றும் பணியாளர்களின் ஒதுக்கீடு ஒருங்கிணைப்பட்டு உள்ளன.

University of Colombo School of Computing – Organizational Structure



ஒரே பார்வையில் - கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக் கூடத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் ***(2017-2021)***

		2021	2020	2019	2018	2017
கல்வி (சேர்த்துக்கொள்ளப்பட்டது/ பட்டம்பெற்றது)						
உள்ளக இளங்கலைப் பட்டதாரிகள்	அனைத்தும்	997	929	899	857	809
	அனுமதி	347	293	297	301	261
	வெளியேறியது	267	250	237	244	193
விஞ்ஞானப் பட்டதாரிகள்		1157	972	1043	924	1060
தகவல் தொழில்நுட்பத்தில் டிப்புளோமா (த.தொ.டி.) (வெளிவாரி)	அனைத்தும்	2933	2649	2373	1975	2109
	அனுமதி	2158	2416	2142	1461	1631
	வெளியேறியது	575	651	436	337	403
தகவல் தொழில்நுட்பத்தில் உயர் டிப்புளோமா (த.தொ.உ.டி.) (வெளிவாரி)	அனைத்தும்	1128	1804	1634	1240	1259
	அனுமதி	1361	1548	1365	463	511
	வெளியேறியது	313	274	120	110	151
தகவல் தொழில்நுட்பத்தில் இளங்கலை மாணி (த.தொ.இ.மா.) (வெளிவாரி)	அனைத்தும்	1034	1248	862	1230	1282
	அனுமதி	987	1142	795	187	233
	வெளியேறியது	350	284	177	133	217
பட்டப் பின் பட்டங்கள்	அனைத்தும்	478	501	426	556	533
	அனுமதி	280	270	258	232	243
	வெளியேறியது	184	126	185	139	150
விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள்		220	347	551	317	296
வெளிநாட்டு மாணவர்கள்		14	14			
ஆராய்ச்சி						
ஆராய்ச்சி (MPhil/PhD)	அனைத்தும்	23/08	28/08	35/08	35/06	37/06
	அனுமதி	04/02	02/00	03/03	04/00	11/02
	வெளியேறியது	02/01	03/00	03/01	00/01	03/04
ஆராய்ச்சித் திட்டங்கள்	அனைத்தும்	18	12	21	20	27
	புதியன	12	02	09	10	14

வெளியீடுகள்	65	61	56	64	53
வெளியீடுகளின் எண்ணிக்கை: கல்விசார் ஊழியர் குழாம் உறுப்பினர்களின் வெளியீடுகளின் எண்ணிக்கை	65:61	61:46			
மேற்கோள்களின் எண்ணிக்கை	6205	4829			
ஆலோசனைகள்/ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்					
உள்ளூர்	13	7	15	15	21
சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	5	13	11	12	10

		2021	2020	2019	2018	2017
ஆளுகை						
நிரந்தர கல்விசார் பணியாளர் குழாம்	அனைத்தும்	58	46	47	49	47
	பேராசிரியர்கள்	05	03	03	02	03
	தத்துவக் கலாநிதி	29	28	27	26	27
	முதுகலை	10	09	06	09	09
நிரந்தர கல்விசார் ஆதரவுப் பணியாளர் குழாம்		15	06	06	07	08
தற்காலிக கல்விசார் பணியாளர் குழாம் (போதனாசிரியர்கள் மற்றும் உதவி விரிவுரையாளர்கள்)		32	39	43	30	27
நிரந்தர நிருவாக மற்றும் கல்விசாரா பணியாளர் குழாம்		62	62	52	54	46
ஒப்பந்தப் பணியாளர்கள் (தற்காலிக மற்றும் பயிலுனர்கள் உள்ளடங்கலாக)		25	41	56	35	25
ஆராய்ச்சி/திட்டப் பணியாளர்கள்		23	17	16	26	18
நிதி						
வருடாந்த மீண்டும் வரும் செலவினங்கள் (மில்லியன் ரூபா)		555	520	586	488	415
திறைசேரி மானியம் (மீண்டும் வரும்) (மில்லியன் ரூபா)		392	358	337	199	165
திறைசேரி மானியம் (மூலதனம்) (மில்லியன் ரூபா)		60	23	69	112	107
பிறப்பாக்கப்பட் வருமானம்		299	249	289	274	263

இளங்கலைப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கொ.ப.க.க. இன் பங்களிப்பு (மில்லியன் ரூபா) (பிறப்பாக்கப்பட்ட %)	22 (5%)	30 (7%)	91 (18%)	126 (29%)	131 (50%)
கொ.ப.க.க. பாதீடு (மில்லியன் ரூபா)	917	903	679	498	424
ஆராய்ச்சி/திட்டங்கள் (மில்லியன் ரூபா)	12.8	9.3	9.8	9	11
ஆண்டொன்றிற்குப் பணியாளருக்கான செலவுத்தொகை (இ.ரூ. '000 கள்)	1,640	1,564	1,692	1,275	1,081
மாணவர் ஒருவருக்கான செலவுத்தொகை (இ.ரூ. '000 கள்)– திறைசேரி மீண்டும் வரும்	386	507	450	356	310
உட்கட்டுமானம்					
நூலக நூல்கள்	8,780	8,825	9,073	8,948	8,810
கணினிகள்: பணியாளர் குழாம்	1:1	1:1	1:1	1:1	1:1
கணினிகள்: (பொது மாணவர்கள்) (சிறப்பு மாணவர்கள்)	1:4 1:1	1:4 1:1	1:4 1:1	1:4 1:1	1:4 1:1
இடப் பயன்பாடு (பணியாளர்) ச.மீ.)	11.09	11.1	10.9	11.70	15.24
இடப் பயன்பாடு (மாணவர்கள்) ச.மீ.)	4.20	3.39	4.5	4.77	4.39

1. ஆளுகை

1. ஆளுகை

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நிறுவனத்தின் செயற்பாடுகள் 2021-2025 ஆண்டுகளிற்கான பெருநிறுவனத் திட்டத்தின் அடிப்படையில் இந்த அறிக்கையின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு 6 இலக்குகளின் மீது கவனஞ் செலுத்தி மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பெருநிறுவனத் திட்டம் 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒன்றாகச் சேர்த்து அடுத்த ஐந்து வருடங்களுக்குத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் குறித்த காலப் பகுதியில் கோவிட்-19 பெருந் தொற்றுப் பரவல் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்காக முகாமைத்துவச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அநேகமான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்முதல் திட்டங்களை மீள- ஒழுங்கமைக்க வேண்டியேற்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் போக்குவரத்து சிரமங்கள், தனிமைப்படுத்தல், சுய- தனிமைப்படுத்தல், மற்றும் அதி மேதகு ஜனாதிபதியின் செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஊடாக அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடமைப் பட்டியல்கள் காரணமாக அதன் பணியாளர்களை வேலைக்கு அமர்த்திவதில் பல சிரமங்களை எதிர் கொண்டது. இந்த அனைத்து சிரமங்களுடன், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் அதன் இளங்கலை பரீட்சைகளை நடாத்தியது, பெறுபேறுகளை வெளியிட்டது, கல்விசார் பணியாளர்களினால் அனைத்து திட்டமிடப்பட்ட விரிவுரைகளை நடாத்தியது, பட்டப் பின் பரீட்சைகளை நடாத்தி முடித்தது, மேலும் பெறுபேறுகளை வெளிட்டதனால் அதனைத் தொடர்ந்து முதுகலை மாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக புதிய உள்ளெடுப்பினையும் கூட மேற்கொண்டது. திட்டமிட்டவாறு ICTer சர்வதேச மாநாடு இயங்கலை ஊடாக நடாத்தப்பட்டது, மேலும் முகாமைத்துவச் சபை உள்ளடங்கலாக, பல்வேறு கூட்டங்கள் இயங்கலை ஊடாக நடாத்தப்பட்டன. திட்டமிடப்பட்ட சில கொள்முதல் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டிற்குப் பிற்போடப்பட்டன.

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் முகாமைத்துவம் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் பணிப்பாளரினால், பிரதிப் பணிப்பாளர், கற்கைத் துறைத் தலைவர்கள், பிரதிப் பதிவாளர், பிரதி நிதியாளர், மத்திய நிலைய இணைப்பாளர்கள், மற்றும் பிரிவின் நிருவாகப் பணியாளர்கள் ஆகியோரின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. பணிப்பாளர் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் அனைத்து சட்டபூர்வ மற்றும் தெரிவுக் குழுக்கள் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றார். இந்த சட்டபூர்வமான அதிகார சபைகளின் கட்டமைப்பு மற்றும் முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றது.

1.1 கொ.ப.க.க. இன் அலுலவர்கள்

பணிப்பாளர் பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே

பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் டி.ஏ.எஸ். அத்துகொரல

தலைவர்கள்	கலாநிதி டி.ஏ.எஸ். அத்துகொரல- கணினி நுண்ணறிவு முறைமைகள் துறை (க.நு.மு.)
	கலாநிதி ஜி.பி.எஸ்.பி. விமலரட்ண- தொடர்பாடல் மற்றும் ஊடக தொழில்நுட்பத் துறை (தொ.ஊ.தொ.)
	திரு. கே.பி.எம்.கே. சில்வா - 10.12.2021 முதல் பதில் கடமை
	கலாநிதி எம்.டி.ஜே.எஸ், குணதிலக – தகவல் முறைமைகள் பொறியியல் துறை (த.மு.பொ.) 10.12.2021 வரை.

பிரதி பதிவாளர்கள் திரு. கே.கே. தர்மதிலக - (ஜூலை 2 முதல் களணிப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக கடமைகளைப் பொறுப்பேற்றார்)

திருமதி ஈ.எம். ஹெனெகம - (மார்ச்சு வரை ஏழாட்டை விடுப்பில்)

பிரதி நிதியாளர்	திரு. ஈ.எம். குணரத்ன
இணைப்பாளர்கள்	கலாநிதி எஸ்.பி. மாத்தர ஆராய்ச்சி – உயர் எண்ணியல் ஊடகத் தொழில்நுட்ப நிலையம் (உ.எ.ப.தொ.நி.-ADMTC)
	திரு. ஜி.பி.என். பொத்தேஜூ – கணினி சேவைகள் நிலையம் (க.சே.நி.-CSC)
	கலாநிதி ரி.என்.கே. டி சொயிஷா – எண்ணியல் தடயவியலுக்கான நிலையம் (எ.த.நி.-CDF)
	திரு. டபிள்யூ.வி. வெல்கம – வெளிவாரி பட்டங்கள் நிலையம் (வெ.ப.நி.-EDC)
	கலாநிதி (திருமதி) ரி.ஏ. வீரசிங்க – ஈ- கற்றல் நிலையம் (ஈக.நி.-eLC)
	கலாநிதி (திருமதி) எல்.என்.சி. டி சில்வா – தொழில்முறை அபிவிருத்தி நிலையம் (தொ.அ.நி.-PDC)

1.2 அதிகார சபைகள்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் அதிகார சபைகளாவன கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு முகாமைத்துவச் சபை, கல்விக் குழு, கற்கைச் சபைகள், கற்கைத் துறைகள் மற்றும் நிலையங்கள் ஆகும்.

1.2.1 முகாமைத்திவச் சபை (மு.ச.)

2021 ஆண்டு காலப்பகுதியில் முகாமைத்துவச் சபையின் கூட்டங்கள் மதாந்தம் கிரமமாக நடைபெற்றன. ஒவ்வொரு மாதத்தினதும் முதல் வியாழக்கிழமை வழமையாக முகாமைத்துவச் சபைக் கூட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. கூட்டத்திற்கு முன்பு கூட்டக் குறிப்புக்களும் குறிப்பாணைகளும் நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளரினால் கூட்டத்திற்கு முன்னதாக விநியோகிக்கப்படுவதுடன் அவரே முகாமைத்துவச் சபையின் செயலாளராகவும்

செயற்படுவார். முகாமைத்துவச் சபையின் கட்மைப்பு மற்றும் உறுப்பினர்கள் விபரங்கள், கூட்டப் பங்கேற்புப் புள்ளிவிபரங்களுடன் கீழே தரப்படுகின்றது (ப- பங்கேற்றது, த- தவிர்க்கப்பட்டது, இ- சமூகமளித்து இராதது, வி- விடுப்பு). கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம், நிதி அறிக்கைகள், கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் ஆண்டறிக்கை 2020 ஆகியவற்றை சமர்ப்பித்து முகாமைத்துவச் சபையிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பொருள் மெய்யாய்வுச் சபை அறிக்கை 2020 இனை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குச் சமர்ப்பிப்பதற்காகவும் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கூட்டம் உள்ளடங்கலாக, 13 மு.ச. கூட்டங்களை கலப்பு முறையில் நடாத்தியது.

பதவிவழி உறுப்பினர்கள்	
• பணிப்பாளர்	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே (ப-13)
• பிரதிப் பணிப்பாளர் மற்றும் க.நு.மு. துறைத் தலைவர்	கலாநிதி டி.ஏ.எஸ். அத்துகொரல (ப-13)
• செயலாளர், உயர் கல்வி அமைச்சு அவர்களினால் நியமிக்கப்பட்டவர்	திரு. எல். வடுகே (ப-12 & த-1)
• நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்டவர்	திருமதி கே ஏ ரம்மியா காந்தி (ப-13)
• பீடாதிபதி, விஞ்ஞான பீடம்	சிரேஷ்ட பேராசிரியர் உப்புல் சொன்னாதர (ப-10 & த-03)
• தலைவர், தொ.ஊ.தொ. துறை	கலாநிதி ஜி.டி.எஸ்.பி. விமலரட்ண (ப-11 & த-02)
• தலைவர், த.மு.பொ. துறை	கலாநிதி எம்.டி.ஜே.எஸ். குணதிலக (ப-12 & த-1)
நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்	
• கொழும்புப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் (02)	பேராசிரியர் எஸ். கருணாரட்ண (ப-13) திரு. ஜே.எம்.யூ.பீ. ஜயசேகர (ப-09, த-03 & இ-01)
• கொழும்புப் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் (02)	சிரேஷ்ட பேராசிரியர் ஜே.கே.டி.எஸ். ஜயனெத்தி (ப-11, த-01, & இ-01) பேராசிரியர் பவித்திரா கைலாசபதி (ப-11 & த-02)
• பமாஆ பிரதிநிதிகள் (02)	திருமதி சீ முபாரக் (ப-13) கலாநிதி உபாலி மாம்பிட்டிய (ப-11 & த-02)
• த.தொ. தொழிற்றுறைப் பிரதிநிதிகள் (02)	திரு. சமன் பெரேரா (ப-12 & த-01) கலாநிதி றொமேஷ் ரணாவணா (ப-10, த-02 & இ.-01)
• கல்விக் குழுவினால் நியமிக்கப்பட்டவர்கள் (03)	பேராசிரியர் என்.டி. கொடிகார (ப-05 01.04.2021 வரை) கலாநிதி எச்.ஏ. கல்தேரா (ப-05 - 01.04.2021 வரை) கலாநிதி எம்.ஜி.என்.எஸ். பர்ணாந்து (ப-05 - 01.04.2021 வரை) கலாநிதி (திருமதி) ரி.ஏ. வீரசிங்க (ப-07 & த-01 - 06.05.2021 முதல்) திரு. கே.பி.எம்.கே. சில்வா (ப-08 - 06.05.2021 முதல்) திரு. டபிள்யூ.வி. வெல்கம - (ப-05 & த-03 - 06.05.2021 முதல்)

1.2.2 நிதி மற்றும் முகாமைத்துவக் குழு (நி.மு.கு)

நிதி முகாமைத்துவக் குழு (நி.மு.கு), நி.மு.கு. இன் ஒரு உப- குழு, அது முகாமைத்துவக் குழுவில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக நிதியியல் செயற்பாடுகள் பற்றி விபரமாக கலந்துரையாடுவதற்கு, முகாமைத்துவக் குழுவிற்கு உதவுகின்றது. இந்தக் குழு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மூன்று (03) தடவைகள் கூடியதுடன் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் பணிப்பாளர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர்	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே (ப-3)
பிரதிப் பணிப்பாளர்	கலாநிதி டி.ஏ.எஸ். அத்துகொரல (ப-3)
சபையினால் நியமிக்கப்பட்டவர்	பேராசிரியர் உப்புல் சொன்னாதர (ப-02 & இ-01) திருமதி சி. முபாரக் (ப-03) பேராசிரியர் பவித்ரா கைலாசபதி (ப-02 & த-01)
பிரதிப் பதிவாளர்	திரு. கே.கே.கே. தர்மதிலக (ப-01) திருமதி எஸ்.டி. சந்திரலதா (ப-02)
பிரதி நிதியாளர்	திரு. ஈ.எம். குணரத்ண (ப-3)

ப-பங்கேற்பு, த-தவிர்ப்பு (முன்னறிவிப்பின்பேரில்), இ-சமூகமளித்து இராதது

1.2.3 கணக்காய்வுக் குழு (க.கு)

கணக்காய்வுக் குழு (க.கு.) ஒரு உப- குழு, அது உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் இறுதி கணக்காய்வு அறிக்கை தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக பொருத்தமான தீர்மானங்கள் மேற்கொள்வதற்காக முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக கலந்துரையாடுவதற்கு முகாமைத்துவச் சபைக்கு உதவுகின்றது. இது வழமையாக முகாமைத்துவச் சபையினால் விசேடமாக நியமிக்கப்பட்ட அதன் உறுப்பினர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. இந்தக் குழுக் கூட்டங்களில் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றனர். இந்தக் கூட்டங்களுக்கு அரசாங்க கணக்காய்வாளர் திணைக்களம், கொழும்புப் பல்கலைகழகத்தின் உள்ளக் கணக்காய்வுக் கிளை, பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுக் கிளை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட அழைக்கப்படுகின்றனர். முகாமைத்துவச் சபையினால் நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் ஏர்நெஸ்ட் அன்ட் யங்க் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கூட இந்தக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டின் 04 கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு உறுப்பினர் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

தலைவர்	**திரு. ஜே.எம்.யூ.பீ. ஜயசேகர** (ப-4)
சபையினால் நியமிக்கப்பட்டவர்கள்	திரு. எல்.பி.எச். வடுகே (ப-04) திருமதி கே.ஏ. ரம்மியகாந்தி (ப-4)
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி	திருமதி கே.வி.ரி.என். சிங்கோஷா (ப-02) திருமதி எஸ்.எம்.சி. இந்திக (ப-02)
உள்ளக கணக்காய்வாளர்/ பாமாஆ	திரு. எம் எம் ஜே ஆர் போகமுவ (ப-1, த-3)
உள்ளக கணக்காய்வாளர்/ கொ.ப.	திரு. கே.ஈ.டபிள்யூ. ஜயசிரி (ப-2 & த-2) திரு. எஸ்.பி.ஜி. நிஹால் (ப-02)
E&Y கணக்காய்வாளரின் பிரதிநிதி	திருமதி ரன்டிக சில்வா (ப-04)
பணிப்பாளர் (அவதானிப்பாளர்)	பேரா. கே.பி. ஹெவாகமகே (ப-4)
பிரதிப் பணிப்பாளர் (அவதானிப்பாளர்)	கலா. டி.ஏ.எஸ் அத்துகொரல (ப-4)

ப-பங்கேற்பு, த-தவிர்ப்பு

1.2.4 கல்விக் குழு

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாதாந்தம் கல்விக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன. கல்விக் குழுவின் கட்மைப்பு கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூட கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டு இருக்கின்றது. கல்விக் குழு மூன்று கற்கைகள் சபைகளினால், அவையாவன முறையே, உள்ளக இளமாணிப் பட்டங்களுக்கான (உ.இ.ப.) கற்கைச் சபை (க.ச.), ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்களிக்கான (ஆ.உ.ப.) க.ச., மற்றும் வெளிவாரி மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களுக்கான (வெ.வி.நி.) க.ச., பரிந்துரைக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுக்கின்றது. கற்கைகள் சபைகளின் முக்கியமான கல்விசார் விடயங்கள் தொடர்பாக கல்விக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றது அல்லது பரிந்துரைக்கப்படுகின்றது. விசேட விடயங்கள் கற்கை சபை தொடர்பான உரிய கல்விசார் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

கல்விக் குழுவில் பரிந்துரைக்கப்படுகின்ற சில முக்கிய தீர்மானங்களுக்கு, பல்கலைக்கழகத்தின் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவை, முகாமைத்துவச் சபை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியிருக்கின்றன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற அனைத்து முறையான கூட்டங்களினதும் குறிப்புக்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன. கல்விக் குழுவின் முறையான உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய பங்கேற்புப் பற்றிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

தொ. இல.	பெயர்	கல்விக்குழுவின் 11 கூட்டங்களின் வரவு விபரம்			
		பங்கேற்பு	இல்லாமை	தவிர்ப்பு	விடுமுறை
1	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே, பணிப்பாளர்	11			
2	கலாநிதி டி.ஏ.எஸ் அத்துகொரல, பிரதி பணிப்பாளர், தலைவர், க.நு.மு. மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
3	கலா.நிதி ஜி டி எஸ் பி விமலரட்ண, தலைவர்/ தொ.ஊ.தொ., பேராசிரியர் த.1	11			
4	கலாநிதி (திருமதி) எம் டி ஜே எஸ். குணதிலக, தலைவர்/ த.மு.பொ., சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	09			2
5	பேராசிரியர் என் டி கொடிகார, சிரேஷ்ட பேராசிரியர் (ஓய்வுபெற்றவர்)	10			
6	பேராசிரியர் ஜி கே ஏ டயஸ், பேராசிரியர்	11			
7	பேராசிரியர் கே.எல். ஜயரட்ண பேராசிரியர்				11
8	பேராசிரியர் டி டி கருணாரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10	1		
9	கலாநிதி ஏ ஆர் வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
10	கலாநிதி டி என் ரணசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	09		2	
11	கலாநிதி ரி சிறீதரன், சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
12	திரு. ஜி பி செனிவிரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10		1	
13	கலாநிதி ரி என் கே டி சொயிஷா, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	09		2	
14	கலாநிதி சி ஐ கெப்பிட்டியாகம, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
15	கலாநிதி எச் ஏ கல்தார, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
16	கலாநிதி எம் ஜி என் ஏ எஸ் பர்ணந்து, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10		1	
17	கலாநிதி (திருமதி) எஸ் எம் கே டி அருணாதிலக, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10	1		
18	கலாநிதி எம் டி ஆர் என் தயாரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
19	திரு. கே.பி.எம்.கே. சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2	11			
20	திருமதி எம்.டபிள்யூ.ஏ.சி.ஆர். விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10		1	
21	திரு. டபிள்யூ.வி. சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10		1	
22	கலாநிதி எச் ஈ எம் எச் பீ எக்கநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
23	கலாநிதி (திருமதி) ரி ஏ வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2 இணைப்பாளர்/இ.க.நி.-eLC	11			
24	கலாநிதி எம் ஐ ஈ விக்கிரமசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	09	1	1	
25	கலாநிதி (திருமதி) கே எச் ஈ எல் ஹெட்டியாராச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10		1	
26	கலாநிதி பி.வி.கே.ஜி. குணவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	11			
27	கலாநிதி பீ.எச்.ஆர். புஷ்பானந்த, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	10			

28	கலாநிதி (திருமதி) எச்.என்.டி. திலினி, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	10		1	
29	கலாநிதி (திருமதி) எல் என் சி டி சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர், த.2	11			
30	கலாநிதி எஸ்.எஸ்.பி. மாத்தர ஆராய்ச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர் (உ.இ.ப./ பிரதிநிதி) இணைப்பாளர்/ உ.எ.ப.தொ.நி.	11			
31	கலாநிதி எச்.கே.ரி.சி. ஹல்லோலுவ, சிரேஷ்ட விரிவுரையளர் த-2	10			
32	கலாநிதி கசுன் கருணாநாயக்க, சிரேஷ்ட விரிவுரையளர் த-2	10		1	
33	திருமதி எம்.ஜி.டி.கே. பர்ணாந்து, சிநேஷ்ட விரிவுரையாளர் த-2	11			
34	கலாநிதி ஏ.பி. சாயக்கார, விரிவுரையாளர் (தகுதிகாண்) (ஏப்பிரல் 2021 முதல்)	8			
35	திருமதி பி.ஜி.எம்.பி. கமகே, உதவி நூலகர் (பெப்பிரவரி 2021 முதல்	9		1	
36	திரு. ஜி.பி.என். பொத்தேஜூ, போதனாசிரியர், இணைப்பாளர்/க.சே.நி. (அழைப்பின் பேரில்)	10	1		
37	பேராசிரியர் ஆர்.டி. விஜேசேகர, கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் நியமிக்கப்பட்டவர்	10		1	
38	திருமதி எச்.பி. ஹெனெகம, பிரதிப் பதிவாளர்/பரீட்சைகள்	09	2		
39	திருமதி டி.கே.எம். ரட்நாயக்க, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள் (இளைப்பாறியவர்)	03	1	1	
40	திருமதி ஜே.ஏ.எம்.எஸ். விஜேரத்ன, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பட்டக் கற்கைகள் பிரிவு	10		1	
41	திருமதி எஸ்.எப். இமாம், உதவிப் பதிவாளர்/பரீட்சைகள்	11			
42	திருமதி கே. பிராதாயினி, உதவிப் பதிவாளர்/கல்விசார் மற்றும் வெளியீடுகள்	11			
43	டபிள்யூ.எம்.என்.கே. வீரசூரிய, உதவிப் பதிவாளர்/வெ.ப.நி.	09		2	

1.2.5 கற்கை சபைகள்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, உள்ளக இளங்கலைப் பட்டங்கள் (க.ச./உ.இ.ப.), ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் (க.ச./ஆ.உ.ப.) மற்றும் வெளிவாரி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் (க.ச./வெ.வி.நி.) ஆகிய மூன்று கற்கைச் சபைகள் உள்ளன. கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் பணிப்பாளர் இந்த கற்கைகள் சபைகளுக்குத் தலைமை தாங்குகின்றார், மேலும் ஒரு கல்விசார் பணியாளர் குழாம் உறுப்பினர் செயலாளராகவும் ஒரு நிருவாகப் பணியாளர் குழாம் உறுப்பினர் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் உள்ளனர்.

1.2.5.1 உள்ளக இளங்கலை மாணி பட்டங்கள் கற்கைகள் சபை (க.ச./உ.இ.ப.)

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில், 11 க.ச./உ.இ.ப. முறையாக நடைபெற்றதுடன் இந்த அனைத்துக் கூட்டக் குறிப்புக்களும் கல்விசார் பிரதிநிதியினால் நிருவாகப் பணியாளர் குழாம் உறுப்பினரின் உதவியுடன் பதிவுசெய்யப்படுகின்றன. உள்ளக இளமாணி பட்டங்கள் தொடர்பான கற்பித்தல், கற்றல், மதிப்பீடு மற்றும் நிர்வாகம் போன்ற, அனைத்து விடயங்களும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்படுகின்றன, இது வழமையாக ஒரு மாதாந்த அடிப்படையில் நடாத்தப்படுகின்றது. ஒன்பது மாணவர் பிரதிநிதிகளும் கூட இந்தக் கூட்டங்களில் கூட்டத்தில் முதல் பாகத்திற்கு மாத்திரம் சமூகமளித்திருந்தனர். உள்ளக இளமாணி பட்டங்கள் (உ.இ.ப.) சபையின் கட்மைப்பு மற்றும் கூட்டங்களில் பங்கேற்றவர்களின் பற்கேற்புப் பற்றிய புள்ளி விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

தொ. இல.	பெயர்	கல்விக்குழுவின் 11 கூட்டங்களின் வரவு விபரம்			
		பங்கேற்பு	இல்லாமை	தலைமை	பிரதிநிதி
1	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே, பணிப்பாளர்	11			
2	கலாநிதி டி.ஏ.எஸ் அத்துகொரல, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1, பிரதிப் பணிப்பாளர், தலைவர்/க.நு.மு.	9	2		
3	கலாநிதி (திருமதி) எம் டி ஜே எஸ். குணதிலக, தலைவர்/ த.மு.பொ.	10			1
4	திரு. கே.பி.எம்.கே. சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2, தலைவர்/தொ.ஊ.தொ. துறை	11			
5	கலாநிதி பீ.எச்.ஆர். புஷ்பானந்தா, சிரேஷ்ட விரிவுரையளர் த-2, செயலாளர் க.ச./உ.இ.ப.	10		1	
6	பேராசிரியர் என் டி கொடிகார, சிரேஸ்ட பேராசிரியர்	8	Retired		
7	பேராசிரியர் ஜி.கே.ஏ. டயஸ், சிரேஸ்ட பேராசிரியர் (ஏழாட்டை விடுப்பில்)	7			3
8	பேராசிரியர் டி.டி. கருணாரட்ண, பேராசிரியர்	10	1		
9	பேராசிரியர் ஜி டி எஸ் பி விமலரட்ண, பேராசிரியர்	10	1		
10	கலாநிதி ஏ ஆர் வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10		1	
11	கலாநிதி டி என் ரணசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	8	2	1	
12	கலாநிதி ரி. □ரீதரன், சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10	1		
13	திரு. ஜி பி செனிவிரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
14	கலநிதி ரி என் கே டி சொயிஷா, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
15	கலாநிதி சி ஐ கெப்பிட்டியாகம, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	11			
16	கலாநிதி எச்.ஏ. கல்தார, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10		1	
17	கலாநிதி எம் ஜி என் ஏ எஸ் பர்ணந்து, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1, இணைப்பாளர்/ க.வி. பட்டம்	11			
18	கலாநிதி (திருமதி) எஸ்.எம்.கே.டி. அருணாதிலக, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	9	1	1	
19	கலாநிதி எம்.டி.ஆர்.என். டயாரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	10		1	
20	திருமதி எம்.டபிள்யூ.ஏ.சி.ஆர். சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	9			2
21	திரு. டபிள்யூ வி வெல்கம, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
22	கலாநிதி எச் ஈ எம் எச் பீ எக்கநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
23	கலாநிதி (திருமதி) ரி ஏ வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
24	கலாநிதி (திருமதி) கே.எச்.ஈ.எல்.டபிள்யூ. ஹெட்டியாராச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2	11			
25	கலாநிதி பி.வி.கே.ஜி. குணவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	11			
26	கலாநிதி (திருமதி) எச்.என்.டி. திலினி, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	11			
27	கலாநிதி (திருமதி) எல் என் சி டி சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர், த.2	11			
28	கலாநிதி எம் ஐ ஈ விக்கிரமசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	8	2	1	
29	கலாநிதி எஸ்.எஸ்.பி. மாத்தர ஆராய்ச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர்	11			
30	கலாநிதி கசுன் கருணாநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - 2	10		1	

31	கலாநிதி (திருமதி) எம்.ஜி.டி.கே. பர்ணாந்து, சிரேஷ்ட விரிவுரையாளர், த-2	11			
32	கலாநிதி எச்.கே.ரி.சி. ஹல்லோலுவ, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - 2	10		1	
33	கலாநிதி ஏ.பி. சாயக்கார, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - 2 (பெப்பிரவரி 2021 இலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்றார்)	10			
34	திருமதி ஆர்.எம்.பி.என். சோமரட்ண, விரிவுரையாளர் (தகுதிகாண்)	3	பதவி விலகல்		
35	திரு. ஆர்.எம்.யூ.ஏ. ரத்நாயக்க, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10		1	
36	திரு. கே.வி.டி.ஜே.பி. குமாரசிங்க, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10		1	
37	கலாநிதி கே டி சந்தரூவன், விரிவுரையாளர் (தகுதிகாண்)	9	1	1	
38	திரு. ஆர் ஜே அமரவீர, விரிவுரையாளர் (தகுதிகாண்)	9	1	1	
39	செல்வி ஏ.எல். நாணயகார, விரிவுரையாளர் (தகுதிகாண்)	11			
40	செல்வி சி.எல். இஷாணி பொன்சேகா, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10	1		
41	செல்வி ஜி.கே.கே. பெரேரா, விரிவுரையாளர் (தகுதிகாண்)	11			
42	திரு. கே.எம். திலகரட்ண, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10		1	
43	திரு. டி.ரி. பமுனுவாராச்சி, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10		1	
44	திருமதி எஸ்.எஸ். திரிமகாவிதாரண, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10	1		
45	திரு. பீ.எஸ். விக்கிரமதிலக, விரிவுரையாளர் (தகுதிகாண்)	9	2		
46	செல்வி எம்.ஏ.ஐ. பெரேரா, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10	1		
47	திரு. எம்.ஏ.பி.பி. மாரசிங்க, விரிவுரையாளர் (தகுதிகாண்)	9	2		
48	திரு. என்.எச்.பி.ஐ. மதுரங்க, விரிவுரையாளர் (தகுதிகாண்)	6	5		
49	திருமதி ரி.பி.டபிள்யூ. செனிவிரட்ண, விரிவுரையாளர் (தகுதிகாண்)	10		1	
50	திரு. டபிள்யூ.ஆர்.என்.எஸ். அபேவீர, விரிவுரையாளர் (தகுதிகாண்) (மார்ச் 2021 இலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்றார்)	9			
51	திரு. ஏ.எம்.கே.பீ. அத்தபத்து, விரிவுரையாளர் (தகுதிகாண்)	9	2		
52	திருமதி எம் கிறிஷ்ணதாசன், விரிவுரையாளர் (தகுதிகாண்) (2021 நவம்பர் 01 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார்)	2			
53	திருமதி ஜே.ஈ.ஜி. சத்துரங்கனி, விரிவுரையாளர் (தகுதிகாண்) (2021 திசெம்பர் 01 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார்)	2			
54	திருமதி பி.ஜி.எம்.பி. கமகே, உதவி நூலகர் (2021 பெப்பிரவரி முதல்)	10			
55	திரு. ஜி.பி.என். பொத்தேஜூ, போதனாசிரியர் த-02	10	1		
94	திருமதி எச்.பி ஹென்னெகம, பிரதிப் பதிவாளர்/கல்விசார் மற்றும் வெளியீடுகள் (வருகையில்) (ஏழாட்டை விடுப்பின் பின்னர் 2021 மார்ச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றார்)	8			
95	திருமதி டி.கே.எம். ரத்நாயக்க, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவு (வருகையில்) (ஓய்வுபெற்றார்)	4			
96	திருமதி எஸ்.எப். இமாம், உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவு (வருகையில்)	10		1	
97	செல்வி கே. பிரதாயினி, உதவிப் பதிவாளர்/கல்விசார் மற்றும் வெளியீடுகள் (வருகையில்)	11			

1.2.5.2 ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் சபை (க.ச./ஆ.உ.ப.)

ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் சபை (ஆ.உ.ப.), கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறையான குழு ஆகும், 2021

ஆம் ஆண்டு காலப் பகுதியில் இதன் 11 கூட்டங்கள் நடைபெற்றன. ஆராய்ச்சி மற்றும் பட்டப்பின் கற்கைகள் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த சபையில் விபரமாகக் கலந்துரையாடப்பட்டு ஒப்புதல் தேவைப்படுகின்ற விடயங்கள் கல்விக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இல	பெயர்	க.ச./ஆ.உ.ப. 11 கூட்டங்களின் வரவு		
		பங்குகொண்டார்	இல்லாமை	குறிப்பு
1	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே, பணிப்பாளர்	11		
2	கலாநிதி டி.ஏ.எஸ் அத்துகொரல, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1, பிரதிப் பணிப்பாளர், தலைவர்/க.நு.மு.	10		1
3	திரு. ஜி.பி. செனிவிரட்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1, பிரதிநிதி/க.நு.மு.	11		
4	பேராசிரியர் ஜி டி எஸ் பி விமலரட்ண, தலைவர்/க.ஊ.தொ., பேராசிரியர்	9		2
5	கலாநிதி (திருமதி) எம்.டிஜே.எஸ். குணதிலக, தலைவர்/த.மு.பொ., சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	10		1
6	கலாநிதி ரி என் கே டி சொயிஷா, இணைப்பாளர்/சைபர் பாதுகாப்பு, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	9		2
7	திரு. டபிள்யூ.வி. வெல்கம, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2, இணைப்பாளர்/த.தொ.மு.	11		
8	திரு. கே பி எம் கே சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2, இணைப்பாளர்/MCS, பிரதிநிதி/ தொ.ஊ.தொ., (செயலாளர், ஆ.உ.ப.)	11		
9	கலாநிதி எச் ஈ எம் எச் பி எக்கநாயக்க, இணைப்பாளர்/MBAnalytics, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1	9		2
10	கலாநிதி பி வி கே ஜி குணவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2, திட்ட இணைப்பாளர்/த.மு.மு.	10		1
11	கலாநிதி ரி ஏ வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த-2, இணைப்பாளர்/ இ-கற்றல் மத்திய நிலையம்	9		2
12	கலாநிதி எஸ்.எஸ்.பி. மாத்தர ஆராய்ச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர் த.1, இணைப்பாளர்/ உ.எ.ப.தொ.நி.	11		
13	கலாநிதி எம் ஜி என் ஏ எஸ் பர்ணாந்து, பிரதிநிதி/ த.மு.பொ.	9		2
14	திருமதி எம்.டபிள்யூ.ஏ.சி.ஆர். விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, இணைப்பாளர்/ உயிர்தகவலியலில் விஞ்ஞான முதுகலைமாணி, இணைப்பாளர்/த.உ.கு.	10		1
15	பேராசிரியர் என்.டி. கொடிகார, தலைவர்/தர உத்தரவாத சிற்றலகு (ஒக்தோபரில் இருந்து ஓய்வுபெற்றார்)	2		1
16	கலாநிதி (திருமதி) எல் என் சி டி சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2,திட்ட இணைப்பாளர்/க.க. இல் விஞ்ஞான முதுகலைமாணி	9		2
17	கலாநிதி (திருமதி) எச்.என்.டி. திலினி, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, திட்ட இணைப்பாளர்/த.தொ.மு.	11		

18	திரு. பி.கே.எம். திலகரத்ண, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, திட்ட இணைப்பாளர்/த.மு.மு.	10		1
19	கலாநிதி பீ.எச்.ஆர். புஷ்பானத்தா, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, திட்ட இணைப்பாளர்//சை.பா.மு.	9		2
20	கலாநிதி கே.ஏ.கே.ரி. கருணாநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, திட்ட இணைப்பாளர்/சைபர் பாதுகாப்பு	10		1
21	கலாநிதி எச்.கே.ரி.சி. ஹல்லோலுவ, சிரேஷ்ட விரிவுரையாளர் த.2, திட்ட இணைப்பாளர்/MB Analytics	11		
22	திருமதி எச்.பி ஹென்னெகம, பிரதிப் பதிவாளர்/கல்விசார் மற்றும் வெளியீடுகள் (வருகையில்) (2021 மார்ச் வரையில் ஏழாட்டை விடுப்பில்)	8		
23	திருமதி எம்.எஸ். விஜேரத்ண, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பட்டப் பின், ஆராய்ச்சி மற்றும் திட்டங்கள் (வருகையில்)	11		
24	திருமதி டி.கே.எம். ரத்நாயக்க, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவு (வருகையில்) (2021 ஜூனில் ஓய்வுபெற்றார்)	3		1

1.2.5.3 வெளிவாரி மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் சபை (க.ச.-வெ.வி.நி.)

வெளிவாரி மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் சபை (க.ச.-வெ.வி.நி.), கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறையான குழு ஆகும். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற வெளிவாரி மற்றும் விரிவாக்க கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் கலந்துரையாடுவதற்காக 12 மாதாந்த கூட்டங்கள் நடைபெற்றன. இது பணிப்பானரினால் தலைமை தாங்கப்படுவதுடன் ஒரு முறையான கல்விசார் செயலாளரும் கூட்ட குறிப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு ஒரு நிருவாக உத்தியோகத்தரும் உள்ளனர்.

இல	பெயர்	12 வெ.வி.நி. கூட்டங்களின் பங்குபற்றல்		
		பங்குபற்றல்	வருகை	தவிர்ப்பு
1	பேராசிரியர் கே.பி. ஹேவாகமகே, பணிப்பாளர்	12		
2	கலாநிதி டி.ஏ.எஸ். அத்துகொரல, பிரதிப் பணிப்பாளர், தலைவர்/ க.நு.மு.	12		
3	கலாநிதி ஜி டி எஸ் பி விமலரட்ண, தலைவர்/ தொ.ஊ.தொ., & ஆ.உ.ப.	9		3
4	கலாநிதி (திருமதி) எம் டி ஜே எஸ் குணதிலக, தலைவர்/ த.மு.பொ.	11		1

5	கலாநிதி எம்.ஜி.என்.ஏ.எஸ். பர்ணந்து, க.க. நிகழ்ச்சித்திட்டம்	12		
6	திரு. டபிள்யூ.வி. வெல்கம, செயலாளர் வெ.வி.நி./ த.தொ.மா.	12		
7	கலாநிதி (திருமதி) ரி ஏ வீரசிங்க, இணைப்பாளர், இ.க.நி.	12		
8	கலாநிதி கே எச் ஈ எல் ஹெட்டியாராச்சி, கல்விசார் இணைப்பாளர்/ த.தொ.மா.	12		
9	கலாநிதி எல் என் சி டி சில்வா, இணைப்பாளர் / தொ.அ.நி.-	11		1
10	கலாநிதி எஸ்.எஸ்.பி. மாத்தர ஆராச்சி, இணைப்பாளர்/ உ.எ.ப.தொ.நி.	12		
11	திரு. ஜி.பி.என். பொத்தேஜூ, இணைப்பாளர் - க.சே.நி.	11		1
12	கலாநிதி ரி.சி. ஹல்லோலுவ, த.தொ.மா. திட்ட இணைப்பாளர்	10		2
13	கலாநிதி (திருமதி) எச்.என்.டி. திலினி, த.தொ.மா./ பாடவிதான குழு அழைப்பின்பேரில்	11		1
14	திருமதி ஆர்.பி. பாலசூரிய, போதனாசிரியர் பரீட்சைகள் பிரிவு	12		
15	திரு. ஜி.எஸ். ஹெட்டியாராச்சி, இணைப்பாளர் – த.தொ.மா., மெய்நிகர் கற்றல் சூழல் (மெ.க.சூ.)	11	1	
16	செல்வி கே.எம்.ஜி.பீ. நிஷாகுமாரி, வசதியளிப்பாளர்- மெ.க.சூ.	11		1
17	திரு. ரி.சி. கலஹேன, வெப் மாஸ்டர், த.தொ.மா. பக்கம்	11		1
18	திருமதி சி.ஓ.டி. பத்மபெரும - திட்ட இணைப்பாளர்/த.தொ.மா. உதவியாளர்	11		1
19	திருமதி டி கே எம் ரட்நாயக்க, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள் மற்றும் பதிவுகள் (ஜூனில் ஓய்வுபெற்றார்)	3	1	
20	திருமதி எச்.பி. ஹென்னெகம, பிரதிப் பதிவாளர்/ பரீட்சைகள் (ஜூனிலிருந்து)	6		
21	திருமதி கே.சி. சேனரத், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ சட்டம்	12		
22	செல்வி எஸ்.எப். இமாம், உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள்	12		
23	திருமதி டபிள்யூ.எம்.என்.கே. வீரசூரிய, உதவிப் பதிவாளர்/வெ.ப.நி.	12		
24	திருமதி பி.எம்.கே. ஜயரட்ண, உதவிப் பதிவாளர்/பணிப்பாளர் அலுவலகம்	11		1

1.2.6 கற்கைத் துறைகள்

1.2.6.1 கணினியியல் மற்றும் நுண்ணறிவு முறைமைகள் துறை (க.நு.மு.)

4 கணினியியல் மற்றும் நுண்ணறிவு முறைமைகள் (க.நு.மு.) கணினி நுண்ணறிவு முறைமைகளில் நேரடியான ஆர்வமுள்ள நிரந்தர கல்விசார் பணியாளர்களைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பணியாளர்களில் அநேகமானோர் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் இளமாணி பட்டம் அத்துடன் பட்டபின் நிகழ்ச்சித்திட்டங்களின் கற்கைநெறிகளில் கற்பிக்கின்றனர். 2021 ஆம் ஆண்டு காலப்

பகுதியில் துறைத் தலைவராக கலாநிதி டி.ஏ.எஸ். அத்துகொரல அவர்கள் பணியாற்றினார். பணியாளர் ஒதுக்கீடு உள்ளடங்கலான மேலதிக விபரங்கள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளன (www.ucsc.cmb.ac.lk).

1.2.6.2 தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் தொழில்நுட்பங்கள் துறை (தொ.ஊ.தொ)

தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் துறை (தொ.ஊ.தொ) கணினி வரைகலையில் நேரடியான ஆர்வமுள்ள நிரந்தர கல்விசார் பணியாளர்களைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பணியாளர்களில் அநேகமானோர் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் இளங்கலைமாணி பட்டம் அத்துடன் பட்டபின் நிகழ்ச்சித்திட்டங்களின் கற்கைநெறிகளில் கற்பிக்கின்றவர்கள் ஆவர். 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் துறைத் தலைவராக கலாநிதி ஜி டி எஸ் பி விமலரட்ண அவர்கள் பணியாற்றினார். கலாநிதி ஜி டி எஸ் பி விமலரட்ண அவர்கள் ஏழாட்டை விடுப்பில் சென்றதனால் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் துறையின் தலைவராக திசெம்பர் 2021 முதல் திரு. மாலிக் சில்வா நியமிக்கப்பட்டார். மேலதிக விபரங்கள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளன (www.ucsc.cmb.ac.lk).

1.2.6.3 தகவல் முறைமைகள் பொறியியல் துறை (த.மு.பொ.)

engineering/). தகவல் முறைமைகள் பொறியியல் துறை (த.மு.பொ.) தகவல் பொறியியலில் நேரடியான ஆர்வமுள்ள நிரந்தர கல்விசார் பணியாளர்களைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பணியாளர்களில் அநேகமானோர் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் இளமாணி பட்டம் அத்துடன் பட்டபின் நிகழ்ச்சித்திட்டங்களின் கற்கைநெறிகளில் கற்பிப்பவர்களாவர். 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் துறைத் தலைவராக கலாநிதி (திருமதி) எம் டி ஜே எஸ் குணத்திலக அவர்கள் பணியாற்றினார். மேலதிக விபரங்கள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளன (www.ucsc.cmb.ac.lk).

1.2.7 நிலையங்கள்

உயர் எண்ணியல் பல்லூடகத் தொழில்நுட்ப நிலையம் (உ.எ.ப.தொ.நி.)

உயர் எண்ணியல் பல்லூடகத் தொழில்நுட்ப நிலையம் (உ.எ.ப.தொ.நி.) ஜூன் 2002 இலிருந்து மே 2005 வரையில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (JICA) ஆதரவளிக்கப்பட்ட "கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் திறன் மேம்பாட்டின் ஊடான தகவல் தொழில்நுட்பத்தில் மனித வள மேம்பாட்டிற்கான திட்டத்தினைச்" செயல்படுத்துவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்விகூடத்தின் (கொ.ப.க.க.) கீழ் இது தாபிக்கப்பட்டது.

பின்வருவன 2021 ஆண்டு காலப் பகுதியில் உ.எ.ப.தொ.நி. னால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் ஆகும்:

- *கொ.ப.க.க. இன் கேட்போர்கூடத்தினை நிர்வகித்தல்*
- *கொ.ப.க.க. இன் எண்ணியல் கலையரங்கத்தை நிர்வகித்துப் பராமரித்தல்*

- *கொ.ப.க.க. இன் எண்ணியல் மற்றும் அச்சடிக்கப்பட்ட திரவியங்களை உற்பத்தி செய்தல்*
- *கொ.ப.க.க. இன் இணையத்தளத்தைப் பராமரித்தல்*
- *வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாட்டு மற்றும் உயர் பல்லூடக இணைத்தள வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டில் கற்கைநெறிகளை நடாத்துதல்.*
- *கொ.ப.க.க. இன் இணையத்தளம் மற்றும் செய்திக் குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.*
- *கொ.ப.க.க. இன் செய்தி மடலினைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல்.*
- *கொ.ப.க.க. இன் மாநாடுகளை நடாத்துவதற்கு ஆதரவளித்தல்* – ICTer 2021 (www.icter.org/conference)
- *கொ.ப.க.க.* இன் பருவ இதழினை வெளியிடுதல் – வளர்ந்து வரும் பிராந்தியங்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலான முன்னேற்றங்கள் தொடர்பான சர்வதேச பருவ இதழ் (ICTer 2021) – www.icter.org/journal

உயர் எண்ணியல் பல்லூடக தொழில்நுட்ப நிலையம் (உ.எ.ப.தொ.நி.) 2021 ஆம் ஆண்டில் வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாட்டுக் கற்கைநெறியினை 32 மாணவர்களைக் கொண்ட மூன்று தொகுதிகளாகவும் உயர் பல்லூடக இணையத்தள வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு கற்கைநெறியினை 56 மாணவர்களைக் கொண்ட மூன்று தொகுதிகளாகத் தொடங்கியது (பூர்த்தியாக்கியது அல்லது தொடரந்து நடாத்தியது). 2021 ஆம் ஆண்டில் அனைத்துத் தொகுதிகளும் இணையவழியூடான இயங்கலையில் நடாத்தப்பட்டது.

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூட கேட்போர்கூடம் 2021 ஆம் ஆண்டில் மற்றாக இயங்கவில்லை, ஏனெனில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் வெளியார் தரப்புகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வுகளில் பங்கேற்பவர்களின் ஆரோக்கிய நிலைமைகளை கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எவ்வாறாயினும், உயர் எண்ணியல் பல்லூடக தொழில்நுட்ப நிலையம் கீழே தரப்பட்டவாறு பல்வேறு ஆராய்ச்சி ஆய்வரங்குகளுக்காக தொழில்நுட்ப உதவியை வழங்கியது.

ஆய்வரங்கு	ஆய்வரங்கின் மொத்தச் செலவு	வருமானம்	கொ.ப.க.க. அநுசரணை தொகை
2021 ஜனவரி 23 ஆம் திகதியன்று தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகத்தினால் (நிலிஸ்) ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கு.	300,000/-	150,000/-	150,000/-
2021 ஜூலை 22 ஆம் திகதியன்று தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (தே.க.ஆ.ம.நி.) கல்வி அமைச்சின் கூட்டுழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட "இலங்கை மாணவர்களின் சர்வதேச மதிப்பீடுகளுக்கான ஆயத்தநிலை" தொடர்பிலான தேசிய ஆய்வு.	40,000/-	20,000/-	20,000/-
2021 நவம்பர் 24 ஆம் திகதியன்று பெண்களுக்கான ஆராய்ச்சி நிலைத்தினால் CENWOR ஒழங்குசெய்யப்பட்ட இயங்கலை மாநாடு.	600,000/-	600,000/-	பொருந்தாது

2021 நவம்பர் 26 ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைகழகச் கல்விப் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆராய்ச்சி ஆய்வரங்கு.	147,000/-	73,500/-	73,500/-
2021 நவம்பர் 27 ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைகழகச் சட்டப் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆராய்ச்சி ஆய்வரங்கு.	300,000/-	150,000/-	150,000/-

மேலே கூறப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, உ.எ.ப.தொ.நி. அணி வடிவமைப்பு, மேம்பாடு, சோதனை போன்ற ஆலோனைச் சேவைகளையும் இலங்கைத் தேசிய விஞ்ஞானக் கலாசாலைக்காக (இ.தே.வி.க.) இணையம் சார்ந்த வாக்களிப்பு முறைமையைப் பராமரித்தல் சேவையினையும் முழு இறுதித் தொகை ரூ. 205,000/- இற்கு மேற்கொண்டது.

கணினிச் சேவைகள் நிலையம் (க.சே.நி.)

கணனி சேவைகள் நிலையம், https://ucsc.cmb.ac.lk/csc/, அது கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் ஆலோனைச் சேவைப் பிரிவு ஆகும், அது தகவல் பொது மற்றும் தனியார்த் தொழிற்றுறைகளுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக 1990 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

க.சே.நி.னால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மூன்று வகையானதாகும்.

- குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள் வழங்குதல்
- மென்பொருள் அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
    - விலைமனு மதிப்பீடு
    - முறைமைகள் பரிந்துரை
    - மென்பொருள் திட்ட ஆலோசனை மற்றும் மேம்பாடு
    - சாத்தியக்கூற்று ஆய்வுகள்
    - கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றிற்கான சோதனைகளை ஏற்றுக்கொள்ளல்
    - திட்டமிடல் மற்றும் ஆட்சேர்ப்புச் சோதனைகளை நடாத்துதல்
- கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கூடத்தின் வளங்களை வெளித் தரப்புக்களுக்கு வாடகைக்கு வழங்குவதனை ஒருங்கிணைத்தல்.

க.சே.நி. னால் நடாத்தப்படுகின்ற குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள்

தொழிற்றுறையில் தேவைப்படுகின்ற புதுப்பிக்கப்பட்ட தலைப்புகளில் மிகவும் மேம்பட்ட சிறப்பான குறுகிய- கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் நடாத்துகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், பங்கேற்பாளர்கள் ஒரு குறிப்பட்ட நிரலாக்க மொழியினை, ஒரு வடிவமைப்பு முறைமையினை, புதிய தொழில்நுட்பத்தினை அல்லது சிறப்படைந்த பொதியின் பயன்பாட்டினை சிறிய குழுக்களாக நெருக்கமான மேற்பார்வையின் கீழ் கற்பதனை இயலச் செய்யும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்தக் கற்கைநெறிகளில் பல 5 முதல் 10 நாட்களுக்கு வரையில் நடாத்தப்படுகின்றன. கோரப்படுமிடத்து நிறுவனங்களின் தனிப்பட்ட குழுக்களுக்காக சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் கூட நடாத்தப்படுகின்றன. க.சே.நி. வழங்கப்பட்ட சான்றிதழ்களின் விபரங்கள் சான்றிதழ் இலக்கங்களைப் பயன்படுத்தி http://www.ucsc.lk/verify என்ற இணையத் தளத்தில் சரிபார்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

க.சே.நி. வெளியார் தரப்புகளுக்கு நடாத்தப்பட்ட சோதனைகள்

க.சே.நி. னால் கீழே குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியில் உறுதிப்படுத்தும் சோதனைகள் வெளித் தரப்புக்களுக்காக 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

விவரணம்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	மொத்த வருமானம்	கழிவு	கழிவு தவிர்ந்த வருமானம்
2021 ஜூலை 22 ஆம் திகதியன்று மனித வள மேம்பாட்டு நிறுவனத்திற்காக (ம.வ.மே.நி.) கணினிப் போதனாசிரியர் இணையவழி இயங்கலையூடான ஆட்சேர்ப்புச் சோதனை.	12	48,000/-	24,000/-	24,000/-
2021 நவம்பர் 01 ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழகத்திற்காக முறைமை பொறியியலாளர் (தரம் 2) பதவிக்கான இயங்கலையூடான ஆட்சேர்ப்புச் சோதனை.	7	28,000/-	14,000/-	14,000/-
2021 திசெம்பர் 14 ஆம் திகதியன்று, கொழும்புப் பல்கலைக்கழக தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகத்திற்காக நிரலாக்கல் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு சோதனை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் உறுதிப்படுத்துவதற்கான இயங்கலையூடான சோதனை	9	36,000/-	18,000/-	18,000/-
கொழும்புப் பல்கலைக்கழக தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகத்திற்காக முகாமைத்துவ உதவியாளர் பதவியில் உறுதிப்படுத்துவதற்கான இயங்கலையூடான சோதனை	1	2,500/-	500/-	2,000/-

மேலும், க.சே.நி. பின்வரும் செயலமர்வுகளை, விசேடமாக கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் நிருவாக மற்றும் கல்விசாராப் பணியாளர்களுக்காக ஒழுங்கு செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டது. இந்த செயலமர்வுகள் ஷூம் மாநாட்டு இணைய செயலியூடாக நடைபெற்று பணியாளர்களிடமிருந்து நேர்மறையான பின்னூட்டல்களைப் பெற்றுக்கொண்டது.

1. 2021 செப்தெம்பர் 8 ஆம் திகதியன்று பயனுறுதியான மின்னஞ்சல் தொடர்பாடல் (பகுதி-1) தொடர்பான இயங்கலை செயலமர்வு
2. 2021 செப்தெம்பர் 15 ஆம் திகதியன்று பயனுறுதியான மின்னஞ்சல் தொடர்பாடல் (பகுதி-2) தொடர்பான இயங்கலை செயலமர்வு
3. 2021 செப்தெம்பர் 22 ஆம் திகதியன்று கூகிள் நாட்காட்டி தொடர்பான இயங்கலை செயலமர்வு
4. 2021 ஒக்தோபர் 08 ஆம் திகதியன்று கூகிள் நாட்காட்டி தொடர்பான இயங்கலை செயலமர்வு

5. 2021 ஒக்தோபர் 13 ஆம் திகதியன்று கூகிழ் டிறைவ் மற்றும் ஆவணங்கள் தொடர்பான இயங்கலை செயலமர்வு (பகுதி 1 மற்றும் 2)
6. 2021 நவம்பர் 10 ஆம் திகதியன்று கூகிள் ஆவணங்கள் தொடர்பான இயங்கலை செயலமர்வு

வெளிவாரி பட்டங்கள் நிலையம் (வெ.ப.நி.)

வெளிவாரி பட்டங்கள் நிலையம் (வெ.ப.நி.), https://ucsc.cmb.ac.lk/academic-programmes/edc/, பொது மக்களுக்குப் பயனுறுதியான வினைத்திறனான சேவையை வழங்கும் பொருட்டு கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் வெளிவாரி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை முகாமைத்துவம் செயவதற்காக ஏற்படுத்தப்பட்டது. தற்சமயம், வெ.ப.நி. தகவல் தொழில்நுட்ப இளங்கலைமாணியை (BIT) ஒரு வெளிவாரி கற்கைநெறியாக ஒருங்கிணைப்பதுடன் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்வதற்குக் குறைந்தபட்சத் தகமைகளற்ற மாணவர்களுக்காக தகவல் தொழில்நுட்பத்தில் அடிப்படைக் கற்கைநெறினை ஒரு விரிவாக்க நிகழ்ச்சித்திட்டமாக வழங்குகின்றது.

2021 ஆண்டில் வெ.ப.நி. நடவடிக்கைகள்:

புதிய த.தொ.மா.-BIT மாணவர்களின் பதிவு (2450 விட அதிகமானது), தற்போதுள்ள மாணவர்களின் மீள்- பதிவு (5,000 விட அதிகமானது), போதனை நிறுவனங்களுடன் (20 அதிகமான போதனை நிறுவனங்கள்) கூட்டங்களை நடத்தியது, போதனை நிறுவனங்களுடன் இரண்டு (2) நிறுவனக் கூட்டங்களை நடாத்தியது, கொழும்பு, கண்டி, யாழ்பாணம், மற்றும் காலியில் த.தொ.இ. அரையாண்டு ஒன்று முதல் ஆறு வரையிலான பரீட்சைகளை (3000 அதிகமான மாணவர்கள்) நடாத்துவது பற்றிய திட்டமிடல். வெ.ப.நி. த.தொ.மா. பட்ட நிகழ்ச்சித்திட்ட மேம்பாடு தொடர்பான பல செயற்பாடுகளையும் கூட மேற்கொள்கின்றது. வெ.ப.நி. பற்றிய விபரங்கள் http://ucsc.cmb.ac.lk/academic-programmes/edc/ என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.

.

இ- கற்றல் நிலையம் (இ-க.நி.- **eLC)**

இ- கற்றல் நிலையம், (இ-க.நி.) https://ucsc.cmb.ac.lk/elc/, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆறு நிலையங்களில் ஒன்றாகும். அதன் பிரதான இலக்கு இ-கற்றல் நடைமுறைகளை ஒருங்கிணைத்து கற்றல்- கற்பித்தல் நடைமுறைளின் எண்ணியல் மாற்றத்திற்கு வசதியளிப்பதாகும். இது கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் இளங்கலை மாணிப் பட்ட, பட்டப்பின் மற்றும் வெளிவாரி மற்றும் விரிவாக்க பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு சேவை நிலையமாக இருந்த போதிலும், உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு (www.e-learning.lk) சேவைகள் வழங்குவதன் ஊடாக கடந்த தசாப்த்த காலப் பகுதியில் இது ஒரு தேசிய நிலையமாகப் பரிணமித்து உள்ளது. இ-கற்றலில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்கின்ற ஒரு அர்ப்பணிக்கப்பட்ட பணியாளர் குழாமினை இ-க.நி. கொண்டிருக்கின்றது.

eLC **ஆல் உருவாக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச படிப்புகள்**

1. சர்வதேச இயங்கலை கல்வி நிறுவனத்திற்கான (IIOE) இ-கற்றல் & பி-கற்றலிற்கான காணொளி கற்கைநெறி கற்றல் உள்ளடக்க மேம்பாடு.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கான ஆங்கில மொழிப் பயிற்சி நிகழ்சித்திட்டம்.

2021 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- த.தொ.அ. கற்கைநெறியின் இ-பரீட்சை பழைய பாடத்திட்டம் பகுதி I 2021 பெப்பிரவரி 8, 9, 10, 11, 12, 15, 16, 17 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டன.
- த.தொ.அ. கற்கைநெறியின் இ-பரீட்சை பழைய பாடத்திட்டம் பகுதி II 2021 பெப்பிரவரி 18, 19, 22, 23, 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டன.
- தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம் (NILIS) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கான பதவியில் உறுதிப்படுத்தல் சோதனை 02 மார்ச் 2021 அன்று நடத்தப்பட்டது.
- த.தொ.அ. கற்கைநெறியின் புதிய பாடத்திட்டதின் இ-பரீட்சை 2021 மார்ச் 4, 5, 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடாத்தப்பட்டன.
- த.தொ.இ. மதிப்பீட்டுப் புள்ளியிடல் அமர்வு (EN2106) மார்ச் 9, 2021 அன்று நடாத்தப்பட்டது.
- 24 மார்ச் 2021 அன்று ELT நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது.
- த.தொ.அ. கற்கைநெறியின் இ-பரீட்சையின் புதிய பாடத்திட்டத்தை மீள்-அட்டவணைப்படுத்தப்பட்ட பரீட்சை மார்ச் 29 மற்றும் 01 ஏப்ரல் 2021 திகதிகளில் நடாத்தப்பட்டன.
- IIOEக்கான பாடத்திட்டத்தின் ஒரு இணை மேம்பாடு குறித்த புதிய திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக யுனெஸ்கோவின் அனுசரணையின் கீழ் உயர்கல்வி புத்தாக்கத்திற்கான சர்வதேச மையத்துடனான ஒரு சந்திப்பு (UNESCO-ICHEI), மே மாதம் 12ஆம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.
- த.தொ.அ. மற்றும் த.தொ.இ. கற்கைநெறிகளின் தொடர்ச்சியான மேம்பாடு
- மே 7, 2021 அன்று கொ.ப.க.க. இன் 1ஆம் ஆண்டு மாணவர்களுடன் ELT திநிகழ்ச்சித்திட்ட முன்னோடி சோதனை தொடங்கியது.
- ELT நிகழ்ச்சித்திட்ட மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்தன.
- உ.எ.ப.தொ.நி./ADMTC உடன் இணைந்து IIOE இயங்குதளத்திற்காக (https://www.iioe.org/) "கலப்பு மற்றும் இ-கற்றல் கற்கைநெறிகளுக்கான காணொளி அடிப்படையிலான கற்றல் உள்ளடக்க மேம்பாடு" என்ற புதிய பாடத்திற்கான முன்னோடி (விளம்பரம்) காணொளி உருவாக்கப்பட்டது.
- ELT உள்ளடக்க மேம்பாட்டின் 1வது கட்டம் முடிவடைந்தது.
- ஜூலை 27, 2021 அன்று UNESCO-ICHEI ஆல் நடத்தப்பட்ட IIOE ஆசிய-பசிபிக் மத்திய ஆண்டு கூட்டம் 2021 இல், “இ-கற்றல் மற்றும் பி-கற்றலுக்கான காணொளி அடிப்படையிலான கற்றல் உள்ளடக்க மேம்பாடு” பற்றிய விளம்பர காணொளி சமர்ப்பிக்கப்பட்டது.
- 21 ஆகஸ்ட் 2021 அன்று இ-க.நி. இல் அமைப்பு மேம்பாட்டாளருக்கான பயிற்றுவிப்பாளர் வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டது.
- செப்தெம்பர் 17, 2021 அன்று ப.மா.ஆ.- இனால் நியமிக்கப்பட்ட பாட நிபுணர்களுடன் ELT திட்டத்தின் முன்னேற்ற குறித்த மதிப்பாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டது.
- UNESCO-ICHEI உடன் செப்தெம்பர் 29, 2021 அன்று பாடத்திட்ட விநியோக அட்டவணையை மாற்றியமைக்க ஒரு கூட்டம் நடைபெற்றது.
- செப்தெம்பர் 30, 2021 அன்று, சுகாதார மேம்பாட்டுப் பணியகத்துடன், அவர்களுக்கான இரண்டு பணியாளர் பயிற்சித் திட்டங்களை வடிவமைக்க, ஒரு சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது.

- உள்ளகப் பயிற்சி நேர்காணல்கள்: ஒக்தோபர் 13, 2021 அன்று இ-க.நி./eLC க்கு பணியாளர்களை நியமிக்கவும்.
- 06 ஒக்தோபர் 2021 அன்று கடற்படைக்கான தேவை சேகரிப்புக்கான கூட்டம் நடைபெற்றது.
- 29 ஒக்தோபர் 2021 அன்று காணொளி அடிப்படையிலான இயங்கலை பாடத்திட்டத்தின் இணை மேம்பாடு குறித்து UNESCO-ICHEI உடனான சந்திப்பு
- ELT நிகழ்ச்சித்திட்ட மேம்பாட்டுப் பணிகள் பூர்த்தியடைந்தன.
- IIOE இன் இரண்டு காலக்கெடுக்கள் பூர்த்தி செய்யப்பட்டன மற்றும் சமர்ப்பிப்புகள் முறையே நவம்பர் 4 மற்றும் 29 நவம்பர் 2021 அன்று விநியோகிக்கப்பட்டன.
- 2021 திசெம்பர் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் த.தொ.அ. கற்கைநெறியின் செயன்முறைப் பரீடசை நடாத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக eLC 2021 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளையும் மேற்கொண்டது.

- கொ.ப.க.க. இன் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளின் கற்றல் முகாமைத்துவ அமைப்புகளை பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்,
- த.தொ.இ. பட்டப்படிப்பு மற்றும் த.தொ.அ. பட்ட நிகழ்சித்திட்டத்தை இயங்கலையில் கற்பவர்களுக்கு மின்-வசதியை வழங்குதல்,
- கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மிகவும் சுவாரஸ்யமாகவும், திறமையாகவும், சமகாலமாகவும் மாற்ற,
- கொ.ப.க.க. மற்றும் நாட்டிற்குள் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்த இ- கற்றலில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மேற்கொள்ளுதல்,
- உயர்தர கலப்பு கற்றல் கற்கைநெறிகளை உருவாக்க இலத்திரனியல் கல்வி கலாச்சாரத்தை ஏற்படுத்துதல்
- கொ.ப.க.க. இன் இ-கற்றல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கப்பட்டது.

மேலும், இ-க.நி. ஆனது ப.மா.ஆ. மற்றும் யுனெஸ்கோ (UNESCO- ICHEI) உடன் இணைந்து "முன்- பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டம்" (ELT) சர்வதேச இயங்கலை ஊடான கல்வி நிறுவனத்திற்கான பாடத்திட்டத்தை உருவாக்குதல் போன்ற பல திட்டங்களை வெளிவாரித் தரப்புக்களிடமிருந்து மேற்கொண்டது.

தொழில்முறை அபிவிருத்தி நிலையம் (தொ.அ.நி.)

தொழில்முறை அபிவிருத்தி நிலையம் (தொ.அ.நி.), கொழும்புப் பல்கலைகழக கணினிக் கல்விக் கூடத்தின் நிலையங்களில் ஒன்று, அது தகவல் தொழில்நுட்பத் தொழிற்றுறையுடன் ஒரு நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதற்காகவும் தொழிற்றுறை கூட்டாண்மை மூலம் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. தொழில்முறை அபிவிருத்தி நிலையத்தின் பணி தொழில்முனைவுத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மற்றும் நேர்மைத்திறனுடன், சமூகப் பொறுப்புணர்வுள்ள தொழில்முறை சார் வல்லுநர்களை உருவாக்குவதாகும். இந்த நிலையம் கல்விசார் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் தொழில்முறை சார் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிக்கின்றது. தொ.அ.நி. த.தொ. துறையில் சமகால செல்நெறிகள், தொழிற்றுறை நடைமுறைகள், பல்வேறு தொழில்களில் தொழில் வாழ்க்கைப் பாதை, போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத் (த.தொ.) தொழிற்றுறையினை

அழைக்கின்றது, மேலும், அதனால், ஒட்டுமொத்த பட்டதாரிகளின் தரம் மற்றும் வேலைகொள்ளப்படும் திறன் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு பெறுமதி சேர்க்கின்றது.

2021 ஆண்டிற்கான நடவடிக்கைகள்

- 2020/2021 கல்வியாண்டிற்கான இறுதி தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்புத் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- " தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பில் சிறந்த செயல்திறன் - 2020" என்ற விருதுக்கான சிறந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேர்வுக் குழு நியமிக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டது மதிப்பீட்டை எளிதாக்கியது.
- 2020 இல் மேற்கொள்ளப்பட்ட தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்புக் குறித்து மாணவர்கள் மற்றும் நிறுவனங்களின் பின்னூட்டல்கள் சேகரிக்கப்பட்டன.
- உள்வாரி மற்றும் வெளிவாரி இளங்கலை பட்டதாரிகளுக்கு தொழில்துறையுடன் இணைந்து தொழில்முறை மேம்பாட்டிற்காக பல அமர்வுகளை ஏற்பாடு செய்யப்பட்டது.
- கொ.ப.க.க. இன் தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுடன் ஜூம் (2021 - 32க்கான புதிய நிறுவனங்களின் எண்ணிக்கை) ஊடாக நேர்முகத்தேர்வுகள் நடாத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டு தொடர்பான நடவடிக்கைகள்

- 2018/2019 கல்வி ஆண்டிற்கான இறுதி தொழிற்றுறை பயிற்சி வாய்புக்களுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்புத் தொடர்பான மாணவர் பின்னூட்டல் திரட்டப்பட்டது.
- “தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பில் சிறந்த செயல்த்திறன் – 2018” விருதுக்காக வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக ஒரு தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு வசதியளித்தது.
- தொ.அ.நி. பணியாளர் குழாம் உறுப்பினர்கள் கொ.ப.க.க. இன் கீழ் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு உள்ளக பயிலுனர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருகை தந்தனர்.
- 2021/2022 கல்வியாண்டிற்கான இளங்கலை உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இருநூற்று எழுபத்தொன்பது (279) மாணவர்கள் 73 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், 2 அரசு நிறுவனங்கள் மற்றும் 7 கொ.ப.க.க. திட்டங்களில் சேர்க்கப்பட்டனர்.
- 3வது ஆண்டு இளங்கலைப் பட்டதாரிகளுக்கான தொழில்நுட்பப் உரைகளை நடத்துவதற்கு த.தொ. துறையில் இருந்து இருபத்தி நான்கு (24) வெவ்வேறு வல்லுநர்கள் அழைக்கப்பட்டனர். தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக ஜூம் மூலம் தொழில்நுட்பத்தின் ஊடாக உரைகள் நிகழ்த்தப்பட்டன.
- தொழிற்றுறைப் பயிற்சியாளர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், வேலைவாய்ப்புத் திட்டம் தொடர்பான ஏதேனும் சிக்கல்களைப் பற்றி விவாதிக்கவும் தொழில் வேலை வாய்ப்பு கண்காணிப்புத் திட்டம் நடத்தப்பட்டது.
- Wiley டெக்னாலஜி வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம், LSEG வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம், ஜோன் கீல்ஸ் வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம், வர்டுஷா வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநர்களின் தலைவர்களுடன் கல்வியாளர்களுக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான சாத்தியமான ஒத்துழைப்பைப் பற்றி விவாதிக்க தனித்தனி சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- கொ.ப.க.க. இன் கல்விசார் ஊழியர்களுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த ஒரு அமர்வை ஏற்பாடு செய்யப்பட்டது/வசதியளிக்கப்பட்டது. LSEG நிறுவனம் இந்த அமர்வை நடத்தியது.
- தகவல் தொழில்நுட்பத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல இணையத்தன பதாகைகள், போட்டிகள், இயங்கலை அமர்வுகள் ஆகியவை வெளியிடப்பட்டு மாணவர்களை பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர்.
- இளமாணிப்பட்ட மாணவர்களின் தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்புக்கள் கையாளப்பட்டன, மேலும் 245 மாணவர்கள் 09 கொ.ப.க.க. திட்டங்களின் கீழ் 71 த.தொ. நிறுவனங்களில் பயிற்சிக்கு அமர்த்தப்பட்டனர்.
- பதினைந்து (15) வெவ்வேறு தொழில்சார் வல்லுனர்கள் த.தொ. தொழிற்றுறையில் இருந்து 3 ஆம் வருட பட்டதாரி மாணவர்களுக்கு டெக் டோக்ஸ் (tech talks) என்ற உரைகளை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டு இருந்தனர்.
- தொ.அ.நி., கொ.ப.க.க. தொழிற் சந்தை – 2019 இன் ஒழுங்கமைப்புக் குழுவிற்கு நிகழ்வினை ஒழுங்கு செய்வதற்கு உதவியது.
- உள்ளகப் பயிலுனர்களின் முன்னேற்றத்தினை கண்காணித்து தொழிற்றுறை பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பான யாதாயினும் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு தொழிற்றுறை பயிற்சி வாய்ப்புக்களைக் கண்காணிக்கும் வருகைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- பியேர்சன் லங்கா நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "கல்விமான்களுடன் பண்புத்தர பொறியியல் தொழிற்றுறை சந்திப்பு" ஒன்றில் பணியார் குழாம் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
- பல்வேறு மாணவர்கள்/ உள்ளகப் பயிலுனர்கள் தொழிற்றுறையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு நியமிக்கப்பட்டனர் (டெக் சமிற் 2019 மற்றும் குவாலிட்டி குவெஸ்ட் 2019, பியேர்சன் குவாலிட்டி குவெஸ்ட் 2019, பண்புத்தர பொறியியல் தொழில் வல்லுனர்கள் – பல்கலைக்கழக மாணவர்கள் செயலமர்வு, பியேர்சன் டெக் சமிட் 2019)
- கம்பியோ ஆய்வுகூடங்களுக்கு (Cambio Labs) ஒரு தொழிற்றுறை விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டு சுமார் இருபத்தைந்து (25) 4 ஆம்- வருட மாணவர்கள் பங்குபற்றினர்.
- தொழிற்றுறை- கல்விமான்கள் கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கு த.தொ. தொழிற்றுறை தொழில் வல்லுனர்களுடன் பல்வேறு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. வருடம் பூராகவும் பல்வேறு மாணவர்களின் பிரச்சினைகள் மற்றும் விசாரணைகள் கையாளப்பட்டன.
- Huawei மொபைல் சேவைகளால் (HMS) நடத்தப்படும் 'கையடக்க செயலி மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் சான்றளிப்புக் கற்கைநெறி' ஏற்பாடுசெய்யப்பட்டது/வசதியளிக்கப்பட்டது. கொ.ப.க.க. இன் உள்வாரி/வெளிவாரி இளங்கலை பட்டதாரிகள் மற்றும் ஊழியர்களுக்காக ஆறு (6) இயங்கலை ஊடான அமர்வுகள் நடத்தப்பட்டன.
- மெய்நிகர் தொழில் சந்தை - 2021க்கு நிகழ்வை ஏற்பாடு செய்வதில் கொ.ப.க.க. ஏற்பாட்டுக் குழுவிற்கு தொ.மே.நி. உதவியது.
- தொழில்முறைசார் - கல்விசார் கூட்டாண்மையை மேம்படுத்த த.தொ. துறையில் உள்ள வல்லுநர்களுடன் பல சந்திப்புகள் நடத்தப்பட்டன.
- ஆண்டு முழுவதும் மாணவர் பிரச்சினைகள் மற்றும் விசாரணைகளை கையாள்வதில் ஈடுபட்டிருந்தது.

எண்ணியல் தடயவியலுக்கான நிலையம் (உ.த.நி.)

எண்ணியல் தடயவியல் நிலையம் (எ.த.நி.), https://ucsc.cmb.ac.lk/cdf/, 2011 ஆம் ஆண்டில் கொ.ப.க.க. இன் கட்டளைச் சட்டத்தை ஒரு சிறப்பு அறிவிப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டதன் மூலம் நிறுவப்பட்டது, ஏனெனில் கொ.ப.க.க. அந்தந்த சட்டம் மற்றும் ஒழுங்கு நிறுவனங்களுக்கு உதவுமாறு கோரப்பட்டிருந்தது. கடந்த 19 ஆண்டு பாலப் பகுதியில், நாட்டிலுள்ள இந்த அதிகாரங்க மையங்கள், நாட்டில் முறையானதொரு பொறிமுறையொன்று இல்லாத காரணத்தினால், கொ.ப.க.க. இனை விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தன. மிகுந்த சிரமங்களுடன், கொ.ப.க.க. இந்த நிறுவனங்களுக்கு உதவி வருகின்றது. சேவைகளைக் கோருகின்ற முக்கிய நிறுவனங்களாவன பல்வேறு நீதிமன்றங்கள், குற்றவியல் விசாரணை திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணை அலகுகள் ஆகியனவாகும்.

எண்ணியல் குற்ற நடவடிக்கைகளில் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பது ஒரு உணர்திறன்மிக்க செயற்பாடு அத்துடன் அதற்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அணுகுமுறைகள் தேவைப்படுகின்றதொரு சிக்கலான செயல்முறையாகும். கடந்த காலங்களில், கொ.ப.க.க. இல் இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவுப் பணியாளர்களினால் பல்வேறு துணைக் கருவிகள் உருவாக்கப்பட்டு அவற்றுள் சில சர்வதேச மாநாடுகளிலும் பிரசுரிக்கப்பட்டன.

கடந்த இரண்டு தசாப்தங்களில் கொ.ப.க.க. 650 க்கும் அதிகமான வேண்டுகோள்களை பல்வேறு சட்ட நிறுவனங்களிடம் இருந்து பெற்றிருந்தது, ஆனால் வேண்டப்பட்ட ஆதரவினை வழங்குவது சிக்கலான தன்மையானதாகவும் மற்றும் நிதி மற்றும் உட்கட்டுமானப் பற்றாக்குறை காரணமாக மிகவும் சிரமானதாகவும் இருந்தது. கொரியா அரசாங்கத்தின் உதவியுடன், கொ.ப.க.க. அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் ஆகியனவற்றிற்கு, இந்த செயற்பாட்டுப் பணிகளுக்காக, புறம்பான அலகுகளைத் தாபிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவியது. இது எ.த.நி. க்கு அறிவிக்கப்படும் வழக்குகளை வெகுவாகக் குறைத்திருக்கிறது, இருப்பினும், 2021 திசெம்பர் 31க்குள் 250 வழக்குகள் விசாரிக்கப்பட இருப்பதுடன், நாங்கள் ஏற்கனவே 427 வழக்குகளை முடித்துவிட்டோம்.

2020 முதல் எ.த.நி. தகவல் பாதுகாப்பு மற்றும் எண்ணியல் தடயவியல் துறையில் இளங்கலை படிப்புகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அதோடு, எ.த.நி. தொடர்ந்து கொ.ப.க.க. இல் பல்வேறு முதுகலை திட்டங்களை நடத்துவதற்கு ஆதரவாக இயங்கிவருகிறது.

2020 முதல் 2021 இறுதி வரை எ.த.நி. ஆனது ரூ. 950,000.00 வருமானத் தோற்றுவித்துள்ளது. எவ்வாறாயினும், இந்த காலகட்டத்தில் எ.த.நி. அதன் மொத்த செலவாக ரூ. 4.5 மில்லியனைச் செலவிட்டிருந்தது. ஆகையால், எ.த.நி. இன் வருமானம் அதன் செலவுகளை ஈடுகட்ட முற்றிலும் போதுமானதாக இல்லை, மேலும் இது நிலையத்தின் செயல்பாட்டை நேரடியாக பாதித்துள்ளது.

எ.த.நி. ஆனது தனது உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் 2021 ஆம் ஆண்டு முதல் எண்ணியல் தடயவியல் துறையில் அரசாங்க நிறுவனங்கள், பல்வேறு நீதிமன்றங்கள், குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது. ஆகவே எ.த.நி. ஆனது அரசாங்க மற்றும் தனியார் துறைக்கு எண்ணியல் தடயவியல் துறையில் கூடுதல் சேவைகளை வழங்கி 2022 ஆம் ஆண்டில் அதிக வருமானம் ஈட்டுகிறது.

2. கல்வி

2. கல்வி

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் பெருநிறுவன திட்டத்திற்கு இணங்க, நிறுவனத்தின் முக்கிய பொறுப்பு கொழும்புப் பல்கலைகழகத்தின் கீழ் பொருத்தமான செந்தரங்களுக்கு இணங்க கணனிக் கல்வியினை மேம்படுத்துவதாகும். ஆகையால், கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் இளங்கலை மாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்வாரி), பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும், வெளிவாரி அல்லது விரிவாக்க கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கணினி கல்வியினை நிர்வகிக்கின்றது. இந்தக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் முகாமைத்துவச் செயல்முறைக்குப் பொறுப்பாக மூன்று கற்கைச் சபைகள் (முன்னைய பிரிவிகளில் விபரிக்கப்பட்டவாறு) உள்ளன.

2.1 இளங்கலைமாணி கல்வி

கொழும்புப் பல்கலைகழகத்தில், விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்பட்ட கற்கைநெறியின் ஒரு பகுதியாக கணினிக் கற்கைகள் முதன் முறையாக 1967 ஆம் ஆண்டில் இளங்கலைமாணிப் பட்ட மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடமாக இருப்பது, விஞ்ஞான பீடத்தில் இன்னமும் கற்கைநெறிகளைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளை விஞ்ஞான பீடத்தின் 1157 மாணவர்கள் தொடர்ந்தனர். கொழும்புப் பல்கலைகழகத்தில் விஞ்ஞான பீடத்தின் கீழ் கணினியில் பட்ட நிகழ்ச்சித்திடங்கள் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன, ஆனால் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் தாபிக்கப்பட்டதன் பின்னர், கணினி இளமாணிப் பட்டங்களில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தின் பிரதான பொறுப்பாகியது. 2021 ஆம் ஆண்டில், ப.மா.ஆ. னால் தெரிவுசெய்யப்பட்ட 350 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானப் (க.வி.) பட்டம், தகவல் முறைமை (த.மு.) பட்டம், மற்றும் மென்பொருள் பொறியியல் (மெ.பொ.) பட்டம் ஆகிய பட்டக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

2.1.1 உள்ள இளங்கலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் தற்பொழுது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்ட **இ.த.க. மட்டம் 5** மற்றும் **இ.த.க. மட்டம் 6** ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கணினி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல், மற்றும் தகவல் முறைமைகளில் ஐந்து இளங்கலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இந்தப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பாடவிதானம் கணினி பட்டங்களுக்கான IEEE/ACM சர்வதேச வழிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடப் **பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறனை 90%** மேல் பேணுவதற்காக கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் உள்ளூர் தொழிற்றுறையில் இருந்து பின்னூட்டல்களைப் பெற்று அதன் அனைத்து கணினி பட்டங்களின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்துவதற்காக கல்வியிலாளர்-தொழிற்றுறை ஆலோசனைச் சபை ஒன்றினைத் தாபித்தது. அந்த ஐந்து பட்டங்களும் கீழே சேர்க்கைகளுடன் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை: 2.1.1.- அ: இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் இ.த.க. மட்டங்கள்

பட்ட நிகழ்ச்சித்திட்டம்	காலப் பகுதி (கல்வி ஆண்டுகள்)	இ.த.க. (SLQF) மட்டம்
கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி (BSc in CS)	3 வருடங்கள்	மட்டம் 5
கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான மாணி (BSc Hons. in CS)	4 வருடங்கள்	மட்டம் 6
மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான மாணி (BSc Hons. in SE)	4 வருடங்கள்	மட்டம் 6
தகவல் முறைமைகளில் விஞ்ஞான மாணி (BSc in IS)	3 வருடங்கள்	மட்டம் 5
தகவல் முறைமைகளில் கௌரவ விஞ்ஞான மாணி (BSc Hons. in IS)	4 வருடங்கள்	மட்டம் 6

நான்கு- ஆண்டு பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான தெரிவு மாணவர்களின் முதல் இரண்டு வருடங்கள் செயற்றிறனின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் 2.7 தர புள்ளி சராசரியினை (GPA) விட அதிக புள்ளிகளை ஈட்டுகின்ற போது கௌரவ பட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுகின்றனர் ஆனால் க.க. மற்றும் த.மு. தொடர்களுக்கான தற்போதைய உள்ளெடுப்பு அளவு முறையே 50 மற்றும் 25 ஆகும். க.க. மாணவர்கள் கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி அல்லது மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணியினைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தைப் பெறுகின்றனர். மூன்றாம் வருடக் கற்கைகளின் முதலாம் அரையாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் முதல் இரண்டு வருடப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. அனைத்து பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான திருத்தப்பட்ட பாடவிதானங்கள் தற்பொழுது செயலிலுள்ளன. உயர் தரத்தில் இணைந்த கணிதத்தில் அல்லது பௌதிகத்தில் அல்லது உயர் கணிதத்தில் ஒரு திறமைச் சித்தி (C) மற்றையது இணைந்த கணிதம், உயர் கணிதம், பொதிகவியல், இரசாயனவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது கணிதவியல் ஆகியவற்றிலிருந்து வேறு இரண்டு பாடங்களில் சாதார சித்தி (S) ஒன்றினையும் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்தில் க.வி. தொடருக்கு விண்ணப்பிக்கத் தகமை பெறுவர். த.மு. பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2021 ஆகஸ்டில் ஒரு தெரிவுப் பரீட்சை (உளச்சார்புப் பரீட்சை) நடைபெற்று **அங்கு 2426 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்து 349 மாணவர்கள் த.மு. தொடருக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றனர்.** பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் உள்ளபடியான எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

2.1.2 கல்வி ஆண்டு – 2018/2019 மற்றும் மாணவர் சேர்க்கை

அட்டவணை 2.1.2 - அ: மாணவர் சேர்க்கை – கொ.ப.க.க. இன் உள்ளெடுப்புப் பரம்பல் - 2021

கற்கைநெறித் தொடர்	உள்ளெடுக்கும் அளவு	சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை	ஆண்	பெண்
க.க. தொடர்	230	224 (97.4%)	152 (68%)	72(32%)
த.மு. தொடர்	127	123 (97%)	44 (36%)	79 (64%)
மொத்தம்	**357**	**347 (97%)**	**196 (56%)**	**151 (44%)**

ஒரு கல்வியாண்டு வழமையாக இரண்டு அரையாண்டுகளைக் கொண்டிருக்கும் இங்கு ஒவ்வொரு அரையாண்டும் 15 வாரங்களை உள்ளடக்கி இருக்கின்றன. ஒரு நடு- அரையாண்டு விடுப்பு ஒரு வாரமாகவும் அரையாண்டின் பின்னர் பரீட்சைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு வார கால கற்கை விடுமுறையும் இருக்கின்றது. 2021 கல்வி ஆண்டிற்கான நாள்காட்டி கீழே தரப்பட்டுள்ளது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய இளமாணி மாணவர்களுக்கு 27 ஏப்பிரல் 2021 ஆம் திகதியன்று அங்குரார்பணம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கல்வி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சி 2021 ஏப்பிரல் 28 ஆம் திகதி முதல் 2021 மே 07 ஆம் திகதி வரை இயங்கலையில் நடைபெற்றது
https://ucsc.cmb.ac.lk/events/inauguration-ceremony-undergraduate-academic-year-20182019/

கல்வியாண்டு நேர சூசிகை -2021 ஆண்டு

காலப் பகுதி		வாரங்கள்	16/17	17/18	18/19	19/20
26-ஏப்பிரல்-2021	9-மே-2021	2	அங்குராற்பணம் - 2019/2020 தொகுதி (2021ஏப்பிரல் 27 ஆம் திகதியன்று) ஆற்றுப்படுத்தல் - from 28th April to 7th May, 2021			
10-மே-2021	4-ஜூலை-2021	8	4S1	3S1	2S1	1S1
5-ஜூலை-2021	11- ஜூலை-2021	1	அரையாண்டு இடைவேளை - 1			
12- ஜூலை-2021	15- ஆகஸ்ட்-2021	5	4S1	3S1	2S1	1S1
16- ஆகஸ்ட் -2021	29- ஆகஸ்ட் -2021	2	அரையாண்டு இடைவேளை - 2			
30- ஆகஸ்ட் -2021	12-செப்.-2021	2	4S1	3S1	2S1	1S1
13-செப்-2021	26-செப்-2021	2	முதலாம் அரையாண்டு இடைவேளை முடிவு (3 ஆம் வருட திட்ட மதிப்பீடுகள்)			
27-செப்-2021	28-நவ-2021	9	4S2	3S2	2S2	1S2
29-நவ-2021	5-திசெ-2021	1	மத்திய அரையாண்டு (ICTer மாநாடு)			
6-திசெ-2021	19-திசெ-2021	2	4S2	3S2	2S2	1S2
20-திசெ-2021	2-ஜன-2022	2	நத்தார் விடுமுறை மற்றும் புதுவருட விடுமுறை			
3-ஜன-2022	23-ஜன-2022	3	4S2	3S2	2S2	1S2
24-ஜன-2022	30-ஜன-2022	1	கற்கை விடுப்பு			
31-ஜன-2022	13-பெப்-2022	2	Second அரையாண்டுப் பரீட்சைகள் for the 1st, 2nd & 4th Years (online/physical exams)			
14-பெப்-2022	27-பெப்-2022	2	கற்கை விடுப்பு			
28-பெப்-2022	27-மார்ச்-2022	4	First அரையாண்டுப் பரீட்சைகள் for the 1ஆம், 2ஆம் , 3ஆம் & 4ஆம் வருடங்கள் (இயங்கலை/ வளாகத்தில் பரீட்சைகள்)			

28-மார்ச்-2022	10-ஏப்-2022	2	இரண்டாம் வருட குழு திட்டம்
11-ஏப்-2022	17-ஏப்-2022	1	சிங்கள மற்றும் தமிழ் புது வருட விடுமுறை
18-ஏப்-2022	24-ஏப்-2022	1	நாலாம் வருட இறுதி தற்காப்பு + புதிய உள்ளெடுப்பு பதிவு
25-ஏப்-2022	8-மே-2022	2	பரீட்சைகள் விடைத்தாள் மதிப்பீடு
9-மே-2022	15-மே-2022	1	அங்குராற்பணம் - 2020/2021 (2022 மே 10 ஆம் திகதி) தொழிற்றுறை இடப்படுத்தல் அளிப்பு (2022 மே 11 ஆம் திகதி முதல்)
16-மே-2022	29-மே-2022	2	பரீட்சைகள் சபை (4 ஆம் வருடத் தெரிவுகள்) (16 மே 2020) ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (16 மே 2022 இலிருந்து)
30-மே-2022			புதிய கல்வி ஆண்டின் தொடக்கம்

விஞ்ஞான பீடம் மற்றும் கொ.ப.க.க. இரண்டினதும் கற்பித்தல் கற்கைநெறிகளை ஒத்திசைக்கும்போது கொ.ப.க.க. பல நிர்வாக சிக்கல்களை எதிர்கொள்கிறது. இருப்பினும், விரிவுரைகளை இயங்கலையில் வழங்குவதால், சில சிக்கல்களைத் தீர்க்க முடிந்தது.

2.1.3 பரீட்சையில் மாணவர் செயலாற்றல்

அட்டவணை 2.1.3. - அ: கற்கை நிகழ்ச்சித்திட்டம்: க.க.தொடர்

கல்வி ஆண்டு	பதிவு செய்யப்பட்ட மாணவர்கள்	பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை – GPA>=2.00	மாணவர் எண்ணிக்கை 2.0>GPA>=1.5	GPA<1.5	சித்தி வீதம் % மாணவர் எண்ணிக்கை >=1.5 / பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை
2019/2020 (1ஆம் வருடம்)	226	முறைவழிப்படுத்தப்படுகின்றது				
2018/2019 (2ஆம் வருடம்)	194					
2017/2018 (3ஆம் வருடம் பொது)	143					
2017/2018 (3ஆம் வருடம் சிறப்பு)	50					
2016/2017 (4ஆம் வருடம்)	50					

அட்டவணை 2.1.3. ஆ: கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள்: த.மு. தொடர்

கல்வி ஆண்டு	பதிவு செய்யப்பட்ட மாணவர்கள்	பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை – GPA>=2.00	மாணவர் எண்ணிக்கை 2.0>GPA>=1.5	GPA<1.5	சித்தி வீதம் % மாணவர் எண்ணிக்கை >=1.5 / பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை
2019/2020 (1ஆம் வருடம்)	123	முறைவழிப்படுத்தப்படுகின்றது				
2018/2019 (2ஆம் வருடம்)	96					
2017/2018 (3ஆம் வருடம் பொது)	65					
2017/2018 (3ஆம் வருடம் சிறப்பு)	25					
2016/2017 (4ஆம் வருடம்	25					

பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பாட விதானத்தின் அடிப்படையில் குறித்த கல்விசார் கற்கைநெறியில் சித்தி அடைவதற்கு மாணவர்கள் தொடர் மதிப்பீடுகள் மற்றும் அரையாண்டுப் பரீட்சைகள் இரண்டினையும் பூர்த்தி செய்ய வேண்டுமெனக் கருதப்படுகின்றனர். அனைத்து பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மெய்நிகர் கற்றல் சூழலிலும் (மெ.க.சூ) http://ugvle.ucsc.cmb.ac.lk கலப்புக் கற்றல் முறையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2.1.4 தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பு இடப்படுத்தல்

தேசிய மற்றும் சர்வதேச தொழிற்றுறைத் தேவைகள் தொடர்பாக பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பு ஒரு கட்டாயத் தேவையாக கொ.ப.க.க. இன் அனைத்து மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. தொழில்முறைசார் அபிவிருத்தி நிலையம் (தொ.அ.நி.) இந்த தேவைகளை கவனிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்றுறையின் உதவியுடன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக த.தொ. தொழிற்றுறையுடன் நெருக்கமான தொடர்பினை வைத்திருக்கின்றது. மூன்றாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டு தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. கொ.ப.க.க. அதன் அனைத்து கணினியியல் பட்டங்களின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் கொ.ப.க.க. பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறனை 90% மேல் பேணுவதற்காகவும் உள்ளூத் தொழிற்றுறையின் பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கல்விமான்கள் – தொழிற்றுறை ஆலோசனைச் சபை ஒன்றினையும் கூட ஏற்படுத்தி இருக்கின்றது. 2021 ஆம் ஆண்டு பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை 2.1.4. - அ: நிறுவனங்கள் தொடர்பாக தொழிற்றுறைப் பயிற்சி வாய்ப்பு இடப்படுத்தல்களின் பரம்பல்

நிறுவனங்களின் வகை – உள்ளக பயிற்சி வாய்ப்பு இடப்படுத்தல்	அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை	நிறுவனங்களின் எண்ணிக்கை
தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்	253	73
அரசாங்க நிறுவனங்கள்	2	2
UCSC யில் ஆராய்ட்சி மற்றும் ஆலோனைத் திட்டங்கள்	24	7
மொத்தம்	**279**	**82**

தொழிற்றுறை பயிற்சிகள் தவிர, தொ.அ.நி. நிறுவனங்கள் சுவிருப்புடன் பங்குபற்றுவதற்காக தொழில்நுட்ப பேருரைகள் மற்றும் விருந்தினர் விரிவுரைகள் தொடர் ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தது. இந்தத் தடவை இந்த பேருரைகள் பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக ஷூம் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த அமர்வுகள் இளமாணி மாணவர்கள் அவர்கள் பட்டம் பெற்ற பின்னர் தொழில் வல்லுனராக ஆற்ற வேண்டிய வகிபாகம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும், தொ.அ.நி. தொழில்முறை திறன்கள் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு அமர்வுகள் தொடர் ஒன்றினை தொழிற்றுறையின் கூட்டுழைப்புடன் மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்காக ஒழங்கு செய்தது.

2.1.5 இளமாணி மாணவர் நலன்புரி

2.1.5.1 இளமாணி மாணவர் நலன்புரி

(அ) விடுதி வசதிகள்

2021 ஆம் ஆண்டில், கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் தேவையுள்ள 1ஆம் வருட அத்துடன் தேவையுள்ள இறுதி வருட இளமாணிப் பட்ட மாணவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் கொள்கையைக் கருத்தில் கொண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (ப.மா.ஆ.) முன்னேற்றத்திற்கு இணங்கவும் வதிவிட வசதிகளை வழங்கியது. எந்த அர்பணிக்கப்பட்ட விடுதி வசதிகளும் இல்லாமையினால், கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் பத்தரமுல்லையில் ஆண்களுக்காகவும் (இது சுமார் 35 மாணவர்களுக்கு இடமளிக்கும்) மற்றும் கொஹூவலையில் மகளிர் விடுதிக்காகவும் (இது சுமார் 36 மாணவிகளுக்கு இடமளிக்கும்) இரண்டு தனியார் சொத்துக்களையும் வாடகைக்கு அமர்த்தியது. கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் பணியாளர் குழாம் உறுப்பினர்களான கல்விசார் விடுதிப் பாதுகாவலர் மற்றும் கல்விசார் உப- விடுதிப் பாதுகாவலர் விடுதிகளின் முகாமைத்துவத்தைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டிருப்பதுடன் கல்விசார் வெளியீடுகள் மற்றும் மாணவர் நலன்புரிப் பிரிவு இரண்டு விடுதிகளையும் பிரதிப் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் முகாமைத்துவம் செய்கின்றது. 2021 ஆம் ஆண்டு பற்றிய விபரமான புள்ளிவிபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்படுகின்றன.

எவ்வாறாயினும், கோவிட்-19 பெருந்தொற்று சூழ்நிலை காரணமாக, கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் சமூக இடைவெளி மற்றும் பிற சுகாதார வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையினை குறைப்பதற்கு (பெண்கள் விடுதி 10 மற்றும் ஆண்கள் விடுதி 12) நிர்பந்திக்கப்பட்டது. ஆகையால்,

முகாமைத்துவச் சபை விடுதியில் தங்க அனுமதிக்கப்படாத மாணவர்களுக்கு ஒரு விசேட விடுதி மாணவர் உதவித்தொகையினை வழங்குவதற்குத் தீர்மானித்தது.

ஆண்கள் விடுதி:

விடுதி முகவரி: 474/B, கடுவெல வீதி, தெனியாவத்தை, பத்தரமுல்ல
கல்விசார் விடுதிப் பாதுகாவலர்: கலா. கே.எல். ஜயரட்ன
கல்விசார் உப- விடுதிப் பாதுகாவலர்: கலா. எம்.ஐ.ஈ. விக்கிரமசிங்க
கொள்ளவு: 35

பெண்கள் விடுதி:

விடுதி முகவரி: 76/16/ A, சுனேத்திராதேவி மாவத்தை, கொஹுவலை, நுகேகொட
கல்விசார் விடுதிப் பாதுகாவலர்: கலா. (திருமதி) ரி.ஏ. வீரசிங்க
கல்விசார் உப- விடுதிப் பாதுகாவலர்: செல்வி எம்.ஜி.ஏ. □ரீமாலீ
கொள்ளவு: 36

அட்டவணை: 2.1.5.1. - அ: 2021 ஆம் ஆண்டில் விடுதி வசதிகள் கோரிக்கை மற்றும் அனுமதி

விடுதி	விடுதி வசதிக்காக விண்ணப்பித்தோர்	1 ஆம் வருட மாணவர்கள்		இறுதி வருட (3ஆம் மற்றும் 4ஆம்) மாணவர்கள்			மொத்தம்
		க.க. தொடர்	த.மு. தொடர்	க.க. தொடர்	த.மு. தொடர்	மெ.பொ. தொடர்	
ஆண்கள் விடுதி	72	46	26				72
பெண்கள் விடுதி	77	48	29				77
மொத்தம்	**149**	**94**	**55**				**149**

அட்டவணை: 2.1.5.1. - ஆ: விடுதி வசதிகளுக்காகச் செலவிடப்பட்ட நிதிகள்

விடுதி	கொள் திறன்	12 மாதங்கள் வாடகை	பயன்பாட்டுச் செலவு	நிருவாகச் செலவு	பதிவு செய்யப்பட்ட மாணவர்	மாணவர் ஒருவருக்கான செலவு ரூ.
ஆண்கள் விடுதி	35	217,500.00	ஏனையவை: 29,640. நீர்: 8,400.00 மின்சாரம்: 9,600.00	காப்பாளர் படி 6,000.00 உதவி காப்பாளர் படி 9,000.00 கவனிப்பாளர் வேதனம்: 35,398.80	35	**9,015.40.**
பெண்கள் விடுதி	36	900,000.00	ஏனையவை: 32,450.45 நீர்: 24,000.00 மின்சாரம்: 36,000.00 தொலைபேசி: 6,000.00	கவனிப்பாளர் வேதனம்; 6,000.00 Sub Warden Allowance = 12,750.00 கவனிப்பாளர் வேதனம்: 468,000.00	36	**27,734.73**
மொத்தம்					**71**	**36,750.13**

(ஆ) சிற்றுண்டிச்சாலை வசதிகள்

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் ஏனைய பீடங்களின் சிற்றுண்டிச்சாலைகள் மதிய நேரத்தில் நெரிசலானதாக இருக்கின்றமையாலும் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் வளாகத்திற்கு அருகாமையில் இல்லாதிருப்பதனாலும் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் வேறாக அதன் மாணவர்களுக்கு சிற்றுண்டிச்சாலை வசதிகளை வழங்குகின்றது. 2015 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட புதிய சிற்றுண்டிச்சாலை உணவு தயாரிப்பதற்கு ஒரு சமையலறை இன்மையினால் பல்வேறு செயற்பாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், சிற்றுண்டிச்சாலை தற்காலிக ஒழுங்குகளின் கீழ் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் மாணவர் சிற்றுண்டிச்சாலை வழமையாக மு.ப. 7.00 மணிக்குத் திறக்கப்பட்டு கல்வி அரையாண்டுகள் காலப் பகுதியில் பி.ப. 6.00 வரையில் சேவைகள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. சிற்றுண்டிச்சாலையின் முகாமைத்துவம் ஒரு சிற்றுண்டிச்சாலை குழுவினால் கண்காணிக்கப்படுகின்றது, அது சிரேஷ்ட கல்விசார் ஊழியர்கள், நிர்வாகப் பணியாளர் குழாம் உறுப்பினர்கள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கின்றது. இந்தக் குழு கிரமமான இடைவேளைகளில் கலந்துரையாடுவதற்கு கூடுகின்றது அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தில் சிற்றுண்டிச்சாலை சேவைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

திரு. எஸ். அமரசிங்க அவர்கள் சிற்றுண்டிச்சாலை ஒப்பந்ததாராக மாணவர் சிற்றுண்டிச்சாலைக்கு ஒரு வருட காலப் பகுதிக்கு அரசாங்க கொள்முதல் முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டார். கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் மின்சாரம், நீர் மற்றும் சிற்றுண்டிச்சாலை இயக்குவதற்குத் தேவையான பாத்திர பண்டங்களை இலவசமாக வழங்குகின்றது. சிற்றுண்டிச்சாலையின் ஒப்பந்தகாரர் அவர்களுடைய சேவைகளை உடன்படிக்கைகளுக்கு இணங்க வழங்குவர் என கருதப்படுகின்றது. கோவிட்-19 பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக, 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முழு வருடமும் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூட சிற்றுண்டிச் சாலை மூடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகம் வழமையான செயற்பாடுகளுக்குத் திரும்பும் வரை சிற்றுண்டிச் சாலைக்கான விலைமனுக் கோரல் செயல்முறை பிற்போடப்பட்டது.

மாணவர் சிற்றுண்டிச்சாலை சாதாரண செயற்பாட்டு நேரங்களில் நெரிசலாக இருப்பதனால், கட்டடக் கூரையின் மாடியில் ஒரு சிறிய பணியாளர் சிற்றுண்டிச்சாலை கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூட நலன்புரிச் சங்கத்தின் ஊடாகப் பராமரிக்கப்படுகின்றது. இந்தச் சிற்றுண்டிச்சாலையை பணியாளர்களும் விருந்தினர்களும் மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர் அத்துடன் கட்டடத் தொகுதியின் கூரை மாடியில் மதிய உணவுப் பகுதியும் அமைந்திருக்கின்றது.

(இ) இளமாணிப் பட்ட மாணவர்களுக்கான ஆலோசனைச் சேவைகள்

மாணவர் ஆலோசனை கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தினால் அனைத்து இளமாணி மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்ற ஒரு சேவையாகும். கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக எமது அனுபவங்களின் ஊடாக, குடும்ப விடயங்கள், உறவுகள், கற்றல் மற்றும் தொழில்சார் தீர்மானங்கள் போன்ற பல்வேறு சம்பவங்களில் இருந்து விளையும்

மன அழுத்தம் தொடர்ந்து அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் ஆலோசனைச் சேவைகள் உதவியை நாடும் மாணவர்களுக்கு, அவர்களுடைய குறிப்பாக உளவியல் சமூகப் பிரச்சினைகளின் ஆரம்ப கட்டங்களில் இருப்பபவர்களுக்கு உகந்த சூழலை வழங்குவதனைக் கவனத்தில் கொண்டுள்ளது. எமது ஆலோசகர்கள் மாணவர்களின் பிரச்சினைகளைச் செவிமடுப்பதற்கும் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அவர்களே கையாளுவதில் அவர்களுக்கு உதவுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களாக உள்ளனர். எவ்வாறாயினும், ஒரு குறித்த பிரச்சினைக்கு மேலும் உதவி தேவையா என்பதனைத் தீர்மானிப்பதிலும் கூட அவர்கள் பயிற்றப்பட்டு உள்ளனர், மற்றும் அவ்வாறான மாணவர்களை வாரந்த அடிப்படையில் கொ.ப.க.க. க்கு வருகை தரும் ஒரு தொழில்சார் ஆலோசகருக்கு சிபார்சு செய்வர்.

மாணவர் ஆலோசகரிடம் மாணவர்கள் தெரிவிக்கும் அனைத்துக் தகவலும் இரகசியமாக வைக்கப்பட்டு இருப்பதுடன் மாணவர் சம்மதித்தால் ஒரு தொழில்சார் ஆலோசகருக்கு மாத்திரம் தெரிவிக்கப்படும் என்பதனை முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவும். அவ்வாறே, தொழில்சார் ஆலோசகரும் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தினால் மாணவர் ஈடுபட்டுள்ள கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரச்சினை மீதான ஏதாவது தாக்கம் தொடர்பாக யாதாயினும் நடவடிக்கை வேண்டப்படுவதாக இருந்தால் மாத்திரமே கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்திற்குத் திரும்பத் தெரிவிப்பார். தொழில்சார் ஆலோசகர் மேலதிக உதவி தேவையெனத் தீர்மானித்தால் அவர் குறித்த மாணவரை, அவன்/ அவளுடைய சம்பத்ததுடன் ஒரு மருத்துவ உளவியலாளர் அல்லது மன நல மருத்துவருக்குச் சிபாசு செய்வர்.

2021 ஆம் ஆண்டில் அனைத்து மாணவர்களுக்காகவும் இரண்டு மாணவர் ஆலோசகர்களின், முறையே கலா. (திருமதி) ரி.ஏ. வீரசிங்க மற்றும் திரு. ஜி.பி. செனிவிரத்ன ஆகியோரின், சேவைகள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆலோசனைகள் வேண்டப்படுகின்ற மாணவர்களுக்கு வசதியளிப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் ஒரு தொழில்முறை ஆலோசகர் திருமதி நிலானி துஷாந்திகா அவர்களின் சேவையும் நாள் ஒன்றிற்கு 2 - 3 மணித்தியாலங்கள் பெறப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடம் தொழில்சார் ஆலோசகரின் சேவைகளுக்கு மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொண்டது. பொதுவாக, இந்த ஆலோசகர்களிடம் இருந்து சுமார் 30 – 40 மாணவர்கள் கிரமமாகவும், பரீட்சைக் காலங்கள் போன்ற குறித்த சில காலப் பகுதிகளிலும், ஆலோசனைகளைப் பெற்றனர்.

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில், கோவிட்-19 பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக நேரடியாக வருகை தருவது சாத்தியமற்றுப் போனதால் ஆலோசனைச் சேவைகள் இயங்கலைத் தொலைபேசியூடாக வழங்கப்பட்டது, மேலும், ஆலோசகர்களுடனான சந்திப்புக்கள் இணையவழி இயங்கலையில் மேற்கொள்ளப்பட்டன. கோவிட்-19 பெருந் தொற்று காரணமாக மாணவர்களின் பொதுப் பிரச்சினைகள் மற்றும் குறிப்பான பிரச்சினைகள் பற்றி கண்டறிவதற்கு பல்வேறு இயங்கலை ஆய்வுகள் நடாத்தப்பட்டன. தொழில்முறை மாணவ ஆலோசகர் அந்தக் குறிப்பான பிரச்சினைகள் பற்றித் தொடர்ந்து பின்பற்றுமாறு கேட்கப்பட்டிருந்தார், மேலும் பெருந்தொற்று காரணமாக நிதி நெருக்கடி தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொண்ட மாணவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடப் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஆதரவுடன் சிறப்பு உதவியளிக்கப்பட்டனர்.

(ஈ) இளமாணி மாணவர்களுக்கான நிதி உதவிகள்

மாணவர்களுக்கு மகாப்பொல புலமைப்பரிசில், உதவித்தொகைகள், தொழிற்றுறைப் புலமைப்பரிசில்கள், மற்றும் மாணவர் நலன்புரி மற்றும் இடர் நிதி வடிவில் நிதி உதவி வழங்கப்பட்டது. 2021 ஆண்டு காலப் பகுதியில் கல்விசார் நடவடிக்கைகள் இயங்கலையில் மேற்கொள்ளப்படாமையினால், திட்டமிடப்பட்டவாறு இந்த அனைத்துப் புலமைப்பரிசில்களையும் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மகாபொல புலைமைப்பரிசில்

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சின் மகாப்பொல நம்பிக்கை நிதியத்தினால் அநுசரணையளிக்கப்பட்ட மகாப்பொல புலமைப்பரிசில்கள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 317 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. தகுதி மற்றும் சாதாரண புலமைப்பரிசில்களின் பெறுமதி முறையே ரூ. 5,050 மற்றும் ரூ. 5,000 ஆகவிருந்தது (கணினி விஞ்ஞானம் [க.வி.] + தகவல் முறைமைகள்.

அட்டவணை: 2.1.5.1. - ஈ: மகாப்பொல புலமைப்பரிசில் அனுமதி - 2021


உள்ளெடுப்பு ஆண்டு	கற்கை ஆண்டு	தகுதி புலமைப்பரிசில் (க.வி.+ த.மு.)	சாதாரண புமைப்பரிசில் (க.வி.+ த.மு.)	மொத்தம்
2019/2020	ஆண்டு 1			
2018/2019	ஆண்டு 2	6(6+0)	116(95+21)	122 (101+21)
2017/2018	ஆண்டு 3	13(13+0)	117(91+26)	130 (104+26)
2016/2017	ஆண்டு 4	10(10+0)	15(07+8)	25 (17+8)
அனைத்தும்	**மொத்தம்**	**29**	**248**	**277**

மாணவர் உதவித்தொகைகள்

மாணவர் உதவித்தொகைக்காக, மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதனை நிர்வகிக்கும், ப.மா.ஆ. சுற்றுநிருபத்திற்கு இணங்க, உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 49 மாணவர்களுக்கு உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் உதவித்தொகை பெற்றவர்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ளன (கணினி விஞ்ஞானம் (க.வி.) + தகவல் முறைமை (த.மு.).

அட்டவணை: 2.1.5.1 – ஈ: மாணவர் உதவித்தொகை அனுமதி – 2021

உள்ளெடுப்பு ஆண்டு	கற்கை ஆண்டு	முழு உதவித்தொகை (ரூ. 4,000) (க.வி.+ த.மு.)	அரை உதவித்தொகை (ரூ. 3,900) (க.வி.+ த.மு.)	மொத்தம்
2019/2020	ஆண்டு 1	122(74+48)		122 (74+48)
2018/2019	ஆண்டு 2	12(3+9)		12 (3+9)
2017/2018	ஆண்டு 3	24(10+14)		24 (10+14)
2016/2017	ஆண்டு 4	4(2+2)	2(2+0)	6 (4+2)
அனைத்தும்	**மொத்தம்**	**162**	**2**	**164**



தொழிற்றுறைப் புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு ஆண்டும் தேவையுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களுக்கு அநுசரணை வழங்குமாறு தனியார்த் துறை நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன. **IFS R&D Ltd.** 12 மாதங்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 5,000/- ஆக **8 புலமைப்பரிசில்களுக்கு** அநுசரணை வழங்கியது. மாணவர் ஆலோசகரும் துறைத் தலைவரும் நேர்முகத் தேர்வின் மூலம் இந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதில் நேரடியாக சம்பந்தப்பட்டு உள்ளனர்.

அட்டவணை ***2.1.5.1.*** **–** உ**:** தொழிற்றுறை புலமைப்பரிசில்கள் ***2021***

புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையும் புலமைப்பரிசில்த் தொகையும்	முதலாம் வருட மாணவர்களின் எண்ணிக்கை	இரண்டாம் வருட மாணவர்களின் எண்ணிக்கை
08 புலமைப்பரிசில்கள் **– Rs. 5,000/-** மாதமொன்றிற்கு	4 மாணவர்கள்	4 மாணவர்கள்

கொ.ப.க.க. **மாணவர் இடர் மற்றும் நலன்புரிச் சங்கம்**

சில வருடங்களுக்கு முன்பு, கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் கல்விசார் பணியாளர்கள் நிதி நெருக்கடிகள் மற்றும் பெற்றோரின் திடீர் இழப்பு, சுகாதாரப் பிரச்சினைகளை போன்ற எதிர்பாராத தனிப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மாணவர்களின் தேவைகளைக் கண்காணித்தனர். ஆகையால், கல்விசார் பணியாளர்கள் முதுமாணிகள் மற்றும் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்தான 2% இனை ஒதுக்கி அதனை மாணவர்களின் இடர்கள் மற்றும் நலன்புரி செயல்பாடுகளுக்கு பயன்படுத்தத் தீர்மானித்தனர். 2021 ஆம் ஆண்டில், இந்த ஒதுக்கத்தில் இருந்தான நிதியினைப் பயன்படுத்தி பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்வரும் கட்டளை விதியின் மதிப்பீட்டின் அடிப்படையில் மிகவும் தேவையுள்ள மாணவர்களுக்கான விசேட நிதி உதவி:

அ) வருடாந்த பெற்றோரின் வருமானம்

ஆ) உடன்பிறப்புக்களின் எண்ணிக்கை (பாடசாலை செல்லும் மற்றும் உயர் கல்வியைத் தொடரும்)

இ) வீட்டிற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான தூரம்

ஈ) பிற புலமைப்பரிசில்கள் / நிதி உதவி

உ) குடும்பத்தில் விசேட சூழ்நிலைகள்

ஊ) தெரிவுக் குழுவின் சிபார்சு

2021 ஆம் ஆண்டில், 14 மாணவர்கள் மாணவர் நலன்புரி மற்றும் இடர் நிதியத்திலிருந்து புலமைப்பரிசில்களைப் பெற்றிருந்தனர். அவர்களுள், 13 புலமைப் பரிசில்கள் ரூ. 5,000/- இலும் 01 புலமைப்பரிசில் ரூ. 3,000/- இலும் 10 மாத காலப் பகுதிக்காக தெரிவுசெய்யபட்டு இருந்தனர். ஆகையால், 0.6 மில்லியன் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் பிறப்பாக்கப்பட்ட வருமானத்தில் இருந்து நிதி நெருக்கடிக்கு உள்ளான மாணவர்களுக்கு சிறப்புப் புலமைப்பரிசில்களுக்காக செலவிடப்பட்டன.

*அட்டவணை **2.1.5.1. – ஊ (அ):** விசேட நிதி உதவிகள் **2021***

முழுப் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையும் புலமைப்பரிசில்த் தொகையும்	பகுதியளவிலான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையும் புலமைப்பரிசில்த் தொகையும்	2021 ஆண்டிற்கான கூட்டுத் தொகை
13 புலமைப்பரிசில்கள் **–** மாதமொன்றிற்கு ரூ. **5,000/-**	1 புலமைப்பரிசில் - மாணவரொவருக்கு ரூ. 3,000/-	ரூ. 68,000/- *10 ரூ.680,000/-

*அட்டவணை **2.1.5.1. – ஊ (ஆ):** விசேட நிதி உதவிகள் **2021***

பயன்பாட்டு வகை	நிகழ்வு	மாணவர்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை ரூ.
மாணவர் நலன்புரி மற்றும் இடர் நிதியின் பயன்பாடு	பிரதான உழைப்பாளியின் மரணம் காரணமான	1	15,000/-

வெளிநாட்டு நன்கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட புலமைப்பரிசில்கள்

ஒரு தனியார் நன்கொடையாளரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினி கல்விக்கூடம் இந்தப் புலமைப்பரிசிலை அமைப்பதில் தொடக்கமாக 1 மாணவரை தெரிவுசெய்தது, அது தேவையுள்ள மாணவர்களுக்கு உதவுவதில் நீண்ட தூரம் செல்லும், மேலும் அவர்களின் கல்விசார் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல ஊக்கப்படுத்தும்.

*அட்டவணை **2.1.5.1. – எ:** வெளிநாட்டு நன்கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட புலமைப்பரிசில்கள் **2021***

புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	புலமைப்பரிசில்த் தொகை	காலப் பகுதி
1 புலமைப்பரிசில்	மாதமொன்றிற்கு ரூ. 5,000/-	மாணவர்ப்பருவம் முடியும் வரை

*அட்டவணை **2.1.5.1. – எ (ஐ):** ஷோரியா றொபஸ்டா புலமைப்பரிசில் **- 2021 (4**ஆம் வருட புலமைப்பரிசில்**)***

புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	புலமைப்பரிசில்த் தொகை	காலப் பகுதி
3 புலமைப்பரிசில்கள்	2 முழு புலமைப்பரிசில்கள் (மாதமொன்றிற்கு ரூ. 3,000/-) 1 பகுதியளவிலான புலமைப்பரிசில் (மாதமொன்றிற்கு ரூ.. 2,000/-)	10 மாதங்கள்

2.1.6 கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விகூடத்தின் 2002 ஆம் ஆண்டு 01 இலக்க கட்டளைச் சட்டத்தின் உப- பந்தி 25 மற்றும் 26 இன் சரத்துக்களுக்கு இணங்க, 2021 ஆம் ஆண்டிற்கான மாணவர் ஒன்றியத்தின் தேர்தல் நடைபெற்று பின்வரும் உறுப்பினர்கள் மாணவர் ஒன்றியத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

மாணவரின் பெயர்	பதிவு இல.	பதவிநிலை அலுவலர்கள்
பீ.எச்.ஆர். கூரே	2018/க.வி./026	தலைவர்
ஏ.ஏ.என். நிஷாமல்	2019/த.மு./052	உப-தலைவர்
ஆர்.எம்.எஸ்.பீ.வி. ரத்நாயக்க	2019/க.வி./140	செயலாளர்
என்.எஸ். விமலவீர	2019/க.வி./196	பதிப்பாசிரியர்
எஸ்.ஏ.ஏ.டி. மைத்திரிபால	2019/த.மு./043	கணிஷ்ட பொருளாளர்
என்.ஜி.டபிள்யூ.டபிள்யூ. பாலசூரிய	2019/த.மு./009	குழு உறுப்பினர்
டி.என்.ஏ.ஏ. திசாநாயக்க	2019/க.வி./039	குழு உறுப்பினர்
எம்.என்.எம். ரஷீன்	2019/த.மு./070	குழு உறுப்பினர்
ஜெ.பி.எம். தாஸ்	2019/க.வி./028	குழு உறுப்பினர்
வி.ஜி.ஏ. இந்துவர	2020/த.மு./048	குழு உறுப்பினர்
ஏ.ஏ. கிவி	2020/த.மு./057	குழு உறுப்பினர்
ரி.ஏ.டி. சானுக	2020/க.வி./023	குழு உறுப்பினர்
எம்.எஸ்.எம். சுரைப்	2020/க.வி./182	குழு உறுப்பினர்

பல்வேறு மாணவர் களகங்கள் மற்றும் சங்கங்கள் இருந்த போதிலும் பல செயற்பாடுகள் மாணவர் ஒன்றியத்தினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக, பல்வேறு பௌதிக நடவடிக்கைகளை நடத்துவது சாத்தியமற்றதாக இருந்த போதிலும், சிங்கள- தமிழ் இயங்கலைப் புத்தாண்டு உள்ளடங்கலாக, பல இயங்கலை நடவடிக்கைகள் 2021 ஆண்டு காலப் பகுதியில் நடாத்தப்பட்டன.

2.1.7 மாணவர் செயற்பாடுகள்

மாணவர் செயற்பாடுகள், பிரதானமாக பண்பாட்டு மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகள், மாணவர் ஒன்றியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. பொருத்தமான விபரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன.

அட்டவணை: 2.1.7.: அ: முக்கிய மாணவர் செயல்பாடுகளுக்கான காலக்கோடு - 2019

நிகழ்வு	திகதி
கொ.ப.க.க. இன் IEEE கிளை - கொ.ப.க.க. இன் IEEE கிளை - அறிமுகம் - 7LinesOfCode - மட்ஹக்/MadHack - RevolUX - ரீட்எக்ஸ் ரீம் ReidXtreme - IEEE தினம்	 14/05/2021 22/05/2021 01/06/2021 05/06/2021 26/09/2021 07/10/2021
IEEE கணினி சங்கத்தின் கொ.ப.க.க. பீடம் - டெக்நோறின்/TECHNORION - டெக்ஷேன்/TECHZEN - தொடங்கிவைத்தல்/Induction - டிசைனெக்ஸ்/DesignX - Intellihack2.0	 24/04/2021 29/05/2021 10/07/2021 18/08/2021 27/08/2021
IEEE பொறியியலிலுள்ள பெண்கள் - ஹக்கதொலிக்ஸ்/Hackaholics 4.0 - தொடங்கிவைத்தல்/Induction - வெப்ஹெக்ஸ்/WebHex	 02/05/2021 13/06/2021 08/08/2021
கொழும்புப் பல்கலைக்கழக கணினிச் சங்கம் - எஸ்கயிபே/Ezkaype - கொம்சொக்-கணினிச் சங்க தொழில்நுட்ப பேருரை	 06/08/2021 02/10/2021
கொ.ப.க.க. ISACA மாணவர் குழு - வருடாந்தப் பொதுக் கூட்டம் - தொழில் வாழ்க்கை வழிகாட்டி அமர்வு - புதியஊடுருவல்/FreshHack 2.0 - iCS 2.0 மின்வெளிப் பாதுகாப்பு செயலமர்வு - iCS 2.0	 29/04/2021 10/07/2021 09/10/2021 27/11/2021 11/12/2021
கொ.ப.க.க. ஆய்வுக் கழகம் - ஆய்வுக் கழகத்தினைத் தொடங்கி வைத்தல் - முதலாம் வருட வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்	 14/11/2021 27/11/2021

இந்த நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் http://ucsc.cmb.ac.lk/events/ என்ற இணையத்தளத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளது, மேலும் அவை கொழும்புப் பல்கலைகழக கணினி கல்விக்கூடத்தின் http://ucsc.cmb.ac.lk/ucsc-calendar/ தளத்தில் உள்ள பொது நாட்காட்டியைப் பயன்படுத்தி அறிவிக்கப்படுகின்றன.

2.1.8 மாணவர் அடைவுகள்

2.1.8.1 பாடவிதானம் சாராத நடவடிக்கைகள்

மாணவர்கள் அவர்களுடைய அறிவு, திறன்கள், மனப்பாங்கு மற்றும் மன-நிலை விருத்திக்காக பல பாடவிதானத்திற்குப் புறம்பான செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில், அத்தகைய பற்கேற்பு கொழும்புப் பல்கலைகழக கணினி கல்விக்கூடத்திற்கும் அதன் மாணவர்களுக்கும் ஒரு சிறந்த வெளிவாரியான கீர்த்தியை வழங்குகின்றன. 2021 ஆம் ஆண்டிலான அடைவுகள் பற்றிய விபரங்களை பின்வரும் பட்டியல் வழங்குகின்றது.

போட்டிகள்	அடைவுகள்
Hacktitutude 2020 99x தொழில்நுட்பத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது	வெற்றியாளர்கள், இறுதிச்சுற்று
RevolUX 2021 (பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான டிசைனதொன்) IEEE இன் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் மாணவர் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.	வெற்றியாளர்கள்
MadHack 2021 கையடக்கத் தொலைபேசி செயலி அபிவிருத்து ஹக்கதோன் - IEEE இன் கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக்கூடத்தின் மாணவர் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.	3ஆம் இடம்


2.1.9 பட்டமளிப்பு விழா 2021

பெருந் தொற்று சூழ்நிலை காரணமாக, 2020 ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டு இறுதியாக 2021 திசெம்பர் 17, 18, மற்றும் 19 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா 2022 ஆம் ஆண்டில் நடைபெறுவதற்கான சாத்தியம் உள்ளது. 267 மாணவர்கள் கணினி விஞ்ஞானம், தகவல் முறைமைகள், மற்றும் மென்பொருள் பொறியியல் ஆகிய 5 - பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பட்டம் பெற்றனர். தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணி மற்றும் தகவல் முறைமைகளில் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்ட நிகழ்ச்சிட்டிட்ட மாணவர்களின் செயலாற்றல் அவர்களின் உ/த கற்கை தொடர் சார்பாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன (அட்டவணைகள் 2.1.9. ஆ மற்றும் 2.1.9. இ)

(ரூ. 000')

திட்டத்தின் வகை	பாதீடிடப்பட்டது	விலைச் சிட்டை இடப்பட்டது	பெற்றுக் கொள்ளப்பட்டது	செலவினங்கள்
ஆராய்ச்சித் திட்டங்கள் (உள்ளூர் நிதியிடப்பட்டது)	-	-	632	182
ஆராய்ச்சித் திட்டங்கள் (வெளிநாட்டு நிதியிடப்பட்டது)	-	-	6,554	300
ஆலோசனை மற்றும் மென்பொருள் மேம்பாட்டு வகைத் திட்டங்கள்	6,000	6,576	5,649	4,048
மொத்தம்	**6,000**	**6,576**	**12,835**	**4,530**

அரசாங்க அதிகாரத் தரப்புக்களினால் தரப்பட்ட சேவை ஒப்படைகள்

பல்வேறு பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் வேவைப்பாடுகளுக்கு இணங்க, காலத்திற்குக் காலம் சேவைகளை வழங்குமாறு கொ.ப.க.க. கேட்டுக்கொள்ளப்பட்டது. எண்ணியல் தடயவியலுக்கான நிலையம் (எ.த.நி.) நீதி மன்ற உத்தரவுகள் அல்லது பிற தரப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட நெறிப்படுத்தல்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சில ஒப்படைகளுக்கு ஒரு பெயரளவிலான கட்டணம் செலுத்தப்படுகின்றது, ஆனால் கொ.ப.க.க. இனால் மேற்கொள்ளப்பட்ட செலவு சேவை ஒப்படைகளின் வருமானத்தினை விட அதிகமானதாக இருக்கின்றது.

6.4 நிதி ஆதரவு மற்றும் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தின் பகுப்பாய்வு

அரசாங்கத்தின் ஆதரவு இளமாணிக் கற்கைகளுக்காக மாத்திரம் தரப்படுகின்றது, ஆனால் இந்த ஆதரவு இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து தேவைப்பாடுகளையும் எட்டுவதற்குப் போதுமானதாக இல்லை. பட்டப்பின் மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்களின் குறித்த கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி மாணவர்களிடம் இருந்து நேரடியாக அறவிடப்படுகின்றது. ஆலோசனைச் சேவைகள், திட்டங்கள் மற்றும் வெளியார்த் தரப்பினர்களினால் தரப்பட்ட ஒப்படைகளின் சேவை வகை ஆகியனவற்றிற்கு விலைச் சிட்டையிடப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பின்வரும் அட்டவணை பாதீடு செய்யப்பட்ட மற்றும் கொ.ப.க.க. இன் பல்வேறு செயற்பாடுகளில் இருந்து பெறப்பட்ட வருமானங்களை விபரிக்கின்றது.

அட்டவணை 6.4. அ: நிதிசார் முன்னேற்றம் (பாதீடிடப்பட்டது, விலைச் சிட்டையிடப்பட்டது, பெறப்பட்டது) ரூ. 000'

முக்கிய வருமான மூலங்கள்	பாதீடிடப்பட்டது	விலைச் சிட்டை இடப்பட்டது	பெற்றுக் கொள்ளப்பட்டது	வேறுபாடுகள்
இளமாணிக் கற்கைகள்	6,526	6,526	6,526	-
பட்டப்பின் கற்கைகள்	108,400	108,007	108,007	(393)
ஆலோசனைகள்	6,580	6,576	5,649	(931)
வெளிவாரி பட்டம்	100,343	79,896	79,896	(20,447)
பிற	100,000	91,457	91,457	(8,543)
மொத்தம்	**321,849**	**292,462**	**291,535**	**(30,314)**

6.4.1 நிதிசார் செயலாற்றல் பகுப்பாய்வுகள்

அட்டவணை 6.4.1. அ: நிதிசார் செயலாற்றல் பகுப்பாய்வு – 2017 ரூ. 000'

விடயம்	சூத்திரம்	மாணவர் ஒருவருக்கான செலவினம்
மாணவர் ஒருவருக்கான மீண்டும் வரும் செலவினங்கள் (மீ.செ.)	மீ.செ./ மொத்த மாணவர்கள் எண்ணிக்கை	386,298
மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவினங்கள் (மூ.செ.)	மூ.செ. மொத்தம் / மொத்த மாணவர்கள் எண்ணிக்கை	73,317
மாணவர் ஒருவருக்கான மொத்த செலவினம்		**459,615**

6.4.2 இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி விவரங்களின் பகுப்பாய்வு

ரூ. '000

	2021	%	2020	%	2019	%	2018	%
தனியாள் வேதனங்கள்	326,363		316,053		329,637		228,297	
ஏனைய மீண்டும் வரும் செலவின மானியம்	74,163		53,479		66,441		62,666	
மீண்டும் வரும் செலவினங்களின் கூட்டுத் தொகை	**400,526**		**369,532**		**396,078**		**290,963**	
பெறப்பட்ட மீண்டும் வரும் செலவின மானியம்	392,180	98	357,880	97	337,200	85	198,785	68
மீண்டும் வரும் நடவடிக்கைகளுக்கான தோற்றுவிக்கப்பட்ட நிதி	**8,346**	**2**	**11,652**	**3**	**58,878**	**15**	**92,178**	**32**
மூலதன செலவினம்	**73,171**		**41,585**		**102,030**		**146,829**	
பெறப்பட்ட மூலதன மானியம்	60,000	82	23,000	55	69,000	68	112,250	76
மூலதன நடவடிக்கைகளுக்கான தோற்றுவிக்கப்பட்ட நிதி	**13,171**	**18**	**18,585**	**45**	**33,030**	**32**	**34,579**	**24**

மொத்த செலவினம் (மீண்டும் வரும் + மூலதனம்)	473,697		411,121		498,108		437,792	
மொத்த அரசாங்க மானியம்	452,180	95	380,880	93	406,200	82	311,035	71
இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தோற்றுவிக்கப்பட்ட நிதி	**21,517**		**30,241**		**91,908**		**126,757**	
மொத்த செலவினத்தின் % ஆக தோற்றுவிக்கப்பட்ட நிதிப் பயன்பாடு		**5**		**7**		**18**		**29**

6.4.3 நிதி நிலை அறிக்கை

திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2021 ரூ.	2020 மீளக் கூறப்பட்டது ரூ.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	**1**	105,600,505	100,784,050
கடன் வருமதிகள் - ஓராண்டிற்கு உட்பட்டது	**2**	4,918,068	4,708,464
முதலீடுகள் - ஓர் ஆண்டில் முதிர்வடைவன	**1.1**	1,318,618,278	1,083,916,289
பிற வருமதிகள் மற்றும் முன்-கொடுப்பனவுகள்	**3**	9,557,251	12,989,215
முதலீட்டு வருமதிகள்	**4**	66,042,291	84,799,936
கையிருப்புக்கள்	**5**	3,026,788	1,933,662
நடைமுறைச் சொத்துக்களின் கூட்டுத் தொகை		**1,507,763,181**	**1,289,131,617**
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
கடன் வருமதிகள் - ஓராண்டிற்கு மேற்பட்டது	**2**	12,940,474	13,203,458
முதலீடுகள் - ஓர் ஆண்டிற்குப் பின் முதிர்வடைவன	**1.1**	43,742,158	43,742,158
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்	**6**	40,765,012	39,410,551
நடைமுறையில் உள்ள கட்டுமானப் வேலைகள்	**7**	42,343,666	17,877,561
நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள்	**8**	1,396,658	2,119,153
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	**9**	679,756,392	638,043,775
தொட்டுணர முடியாத (அருவ) சொத்துக்கள்	**10**	8,329,464	14,580,323
நடைமுறைச் சொத்துக்களின் கூட்டுத் தொகை		**829,273,825**	**768,976,980**
மொத்த சொத்துக்கள்		**2,337,037,006**	**2,058,108,596**
பங்குலாபம் மற்றும் பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
ஏனைய திரண்ட மற்றும் கொடுமதிகள்	**11**	29,963,020	42,123,569

கடன் வழங்குனர்கள்		6,539,879	2,566,100
பிடித்துவைத்திருப்புக்கள்		1,913,877	5,942,150
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	**12.1**	116,987,025	120,935,336
நடைமுறை பொறுப்புக்களின் கூட்டுத்தொகை		**155,403,801**	**171,567,155**
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	**12.2**	15,062,500	19,391,667
இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் - பணிக்கொடை	**13**	103,156,667	112,819,428
நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை		**118,219,167**	**132,211,095**
பொறுப்புக்களின் மொத்தக் கூட்டுத்தொகை		**273,622,967**	**303,778,250**
நிகர சொத்துக்கள்/பங்குலாபத்தின் கூட்டுத்தொகை		**2,063,414,038**	**1,754,330,346**
திரட்டப்பட்ட ஒதுக்கங்கள் மற்றும் நிதிகள்			
திரட்டப்பட்ட நிதி - மூலதனம்	**14**	706,160,342	726,439,363
திரட்டப்பட்ட நிதி - நடைமுறை	**15**	913,867,791	703,379,156
திட்ட மானியங்கள்	**16**	12,226,200	5,792,698
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்தான பங்களிப்பு		8,155,714	8,155,714
மீள் மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்கள்	**17**	131,897,080	45,930,497
கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள்	**18**	291,106,911	264,632,918
நிகர சொத்துக்கள்/பங்குலாபத்தின் கூட்டுத்தொகை		**2,063,414,038**	**1,754,330,346**

.....
பிரதி நிதியாளர்

பக்கம் 12 முதல் 27 வரையிலான கணக்கியல் கொள்கைகளும், 28 முதல் 57 பக்கங்களில் உள்ள குறிப்புகளும் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதற்கு முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள் பொறுப்பாவார்கள். இந்த நிதி அறிக்கைகள் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டன.

.....
.....
பணிப்பாளர்

.....
.
பிரதிப் பணிப்பாளர்

25-பெப்பிரவரி-2022

6.4.4 நிதி செயலாற்றல் அறிக்கை

திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2021 ரூ.	2020 கட்டுப்படுத்தப் பட்டது ரூ.
வருவாய்			
பரிமாற்றமற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருவாய் - நடைமுறை			
மீண்டும் வரும் செலவினத்திற்கான அரசாங்க மானியம்		392,180,000	357,880,000
மாணவர் உதவித்தொகைக்கான அரச மானியம்		4,946,100	4,402,400
மொத்த பரிமாற்றமற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருவாய் - நடைமுறை		***397,126,100***	***362,282,400***
பரிமாற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருவாய் - நடைமுறை			
தோற்றுவிக்கப்பட்ட நிதி		45,114,079	33,299,211
வட்டி வருமானம்	27	6,104,264	3,971,048
பிற வருமானம்	28	6,526,299	4,884,758
உண்மையான ஆதாயம்		13,419,164	-
அகற்றல் இலாபம்		417,164	138,498
விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்தான வருவாய்	29	126,840,148	107,454,083
திட்டங்களில் இருந்தான நிகர வருவாய்	30	2,082,828	3,361,113
பரிமாற்றக் கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான மொத்த வருவாய் - நடைமுறை		***200,503,946***	***153,108,711***
மொத்த வருவாய் - நடைமுறை		**597,630,046**	**515,391,111**
பரிமாற்றமற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருவாய் - மூலதனம்			
மூலதனச் செலவினங்களுக்கான அரசாங்க மானியம்		60,000,000	23,000,000
மூலதனச் செலவினங்களுக்கான திட்ட மானியம்		-	9,500
பரிமாற்றமற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான மொத்த வருவாய் - மூலதனம்		***60,000,000***	***23,009,500***
பரிமாற்றக் கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருவாய் - மூலதனம்			
பிறப்பாக்கப்பட்ட வருமானம்		12,000,000	19,371,000
பரிமாற்றமற்ற கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான மொத்த வருவாய் - மூலதனம்		***12,000,000***	***19,371,000***
மொத்த வருவாய் - மூலதனம்		**72,000,000**	**42,380,500**
மொத்த வருவாய்		**669,630,046**	**557,771,611**

செயற்பாட்டு செலவினம் - நடைமுறை			
தனியாள் வேதனங்கள்	31	269,779,146	263,199,576
பிரயாணச் செலவினங்கள்	32	173,702	126,512
விநியோகங்கள்	33	6,408,431	6,558,788
ஒப்பந்த சேவைகள்	34	29,719,386	32,630,031
இணைப்பாற்று நன்மைகள்	35	56,584,275	52,853,604
பிற மீண்டும் வரும் செலவினங்கள்	36	13,809,787	14,164,039
மஹாபொல மற்றும் மாணவர் உதவித்தொகைக் கொடுப்பனவுகள்		4,946,100	4,402,400
அசையாத உருப்படிகள் - பதிவழிப்பு		139,461	-
அகற்றல் இழப்பு -மென்பொருள்		6,181,485	-
அசையாத சொத்துக்கள் பதிவேட்டு - பதிவழிப்பு (NBV)		2,730,344	-
மொத்த செயற்பாட்டு செலவினம் - நடைமுறை		***390,472,118***	***373,934,949***
செயற்பாடு சாராத செலவினம்			
தேய்மானம் மற்றும் கடனழிப்பு செலவினங்கள்	37	95,787,728	101,274,049
செயற்பாடு சாராத மொத்த செலவினங்கள்		**95,787,728**	**101,274,049**
மொத்த செலவினங்கள்		**486,259,847**	**475,208,998**
வருடத்திற்கான மொத்த மிகை/ (பற்றாக்குறை)		***183,370,199***	**82,562,613**
வருடத்திற்கான மொத்த மிகை/ (பற்றாக்குறை) - நடைமுறை		**207,157,928**	**141,456,162**
வருடத்திற்கான மொத்த மிகை/ (பற்றாக்குறை) - மூலதனம்		**(23,787,728)**	**(58,893,549)**

"கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி நிலை அறிக்கையின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்"

6.4.5 பங்குலாபத்திலான மாற்றங்கள் பற்றிய அறிக்கை

2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கானது	செலவிடப்படாத மூலதன மானியம்	செலவிடப்பட்ட மூலதன மானியம்	செலவிடப்படாத திட்ட மானியம்	செலவிடப்பட்ட திட்ட மானியம்	கொழும்புப் பல்கலை. இருந்தான பங்களிப்பு	பொது ஒதுக்கங்கள்	திரண்ட நிதி - நடைமுறை	திரண்ட நிதி - மூலதனம்	மீள் மதிப்பீடு செயப்பட்ட ஒதுக்கம்	கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள்	மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
2020 ஜனவரி 01 ஆந் திகதி அன்று இருந்தவாறு நிலுவை	**1,668,491**	**800,886,824**	**9,389,299**	**8,425,828**	**8,155,714**	**537,273,315**	**-**	**-**	**35,505,497**	**246,464,503**	**1,647,769,471**
SLPSAS11 இன் படி மறுவகைப்படுத்தல் - திரட்டப்பட்ட நிதி - மூலதனம்	(1,668,491)	(800,886,824)	-	(8,425,828)	-	-	25,648,230	785,332,912	-	-	-
SLPSAS11 இன் படி மறுவகைப்படுத்தல் - திரட்டப்பட்ட நிதி - மீண்டும் வரும் செலவு	-	-	-	-	-	(537,273,315)	537,273,315	-	-	-	-
2019 வட்டி வருமதிகள் சரிப்படுத்தல்										1,185,480	**1,185,480**
											-
2020 ஜனவரி 01 ஆந் திகதி அன்று இருந்தவாறான சரிப்படுத்தப்பட்ட நிலுவை	**-**	**-**	**9,389,299**	**-**	**8,155,714**	**-**	**562,921,545**	**785,332,912**	**35,505,497**	**247,649,983**	**1,648,954,951**
வருட காலப் பகுதியிலான மிகை/(பற்றாக்குறை)	-	-	-	-	-		141,456,162	(58,893,549)	-	-	**82,562,613**
வருட காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட மானியம்	-	-	2,100,000	-	-	-	-	-	-	-	**2,100,000**
வருட காலப் பகுதியில் செலவிடப்படாத மானியத்தில் இருந்து வருமானத்திற்கான மாறுதல்கள்	-	-	(5,696,601)		-	-	-	-	-	-	**(5,696,601)**
முந்தைய வருட சரிப்படுத்தல்கள்	-	-	-	-	-		(998,551)	-	-	-	**(998,551)**
வருட காலப் பகுதியிலான மாற்றம்	-	-	-	-	-	-	-	-	10,425,000	16,982,935	**27,407,935**
2020 திசெம்பர் 31 ஆந் திகதி அன்று இருந்தவாறு நிலுவை	**-**	**-**	**5,792,698**	**-**	**8,155,714**	**-**	**703,379,156**	**726,439,363**	**45,930,497**	**264,632,918**	**1,754,330,346**
வருட காலப் பகுதியிலான மாறுதல்கள் மிகை/(பற்றாக்குறை)	-	-	-	-	-	-	207,157,928	(23,787,728)	-	-	**183,370,201**
வருட காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட மானியம்	-	-	8,788,468	-	-	-	-	-	-	-	**8,788,468**

வருட காலப் பகுதியில் செலவிடப்படாத மானியத்தில் இருந்து வருமானத்திற்கான மாறுதல்கள்	-	-	(2,354,966)	-	-	-	-	-	-	-	**(2,354,966)**
வருட காலப் பகுதியிலான மாறுதல்கள்	-	-	-	-	-	-	-	-	92,805,995	26,473,994	**119,279,989**
மீள்- மதிப்பீட்டு ஒதுக்கத்தில் இருந்து திரட்டப்பட்ட நிதியத்திற்கான மாறுதல்கள் – நடைமுறை	-	-	-	-	-	-	3,330,706	-	(3,330,706)	-	-
திரட்டப்பட்ட நிதியத்திற்கான ஒதுக்கம் - மூலதனம்	-	-	-	-	-	-	-	3,508,706	(3,508,706)	-	-
2021 திசெம்பர் 31 ஆந் திகதி அன்று இருந்தவாறு நிலுவை	**-**	**-**	**12,226,200**	**-**	**8,155,714**	**-**	**913,867,791**	**706,160,342**	**131,897,081**	**291,106,911**	**2,063,414,038**

"கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி நிலை அறிக்கையின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்"

6.4.6 பணப்புழக்க (காசுப் பாய்வு) அறிக்கை

திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2021 ரூ.	2020 மீளக் கூறப்பட்டது ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான பணப்புழக்கம் (பயன்படுத்தப்படும்)			
ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை)		183,370,199	82,562,613
க்கான சரிப்படுத்தல்கள் :			
தேய்மானம். மற்றும் கடனழிப்பு		95,787,728	101,354,551
பணிக்கொடைக்கான ஏற்பாடு		15,558,047	12,893,778
பதிவழிப்பு		3,844,841	-
சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான (இலாபம்)/இழப்பு		6,086,328	(138,498)
வட்டி வருமானம்		(64,205,222)	(87,011,494)
பரிமாற்ற நயம்/ (இழப்பு)		171,732	(291,501)
உண்மையான நயம்/(இழப்பு)		(13,419,164)	-
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு		500,000	-
நிலையான வைப்பு மீளப்பெறல் மீதான சரியான எதிரீட்டுக் கட்டணங்கள்		-	284,343
செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன் செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்புழக்கம்		**227,694,490**	**109,653,793**
இருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		(1,232,586)	150,369
அலகுகளுக்கு- இடையிலான நடைமுறைக் கணக்குகளில் (அதிகரிப்பு)/ குறைவு		53,558,775	20,642,589
பிற வருமதிகள் மற்றும் முற்- கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு		2,460,946	(369,079)
பணியாளர் கடன் வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு		53,379	(320,190)
உள்ளபடியான மற்றும் பிற செல்மதிகளில் அதிகரிப்பு/ (குறைவு)		(12,711,236)	(2,049,975)
அலகுகளுக்கு- இடையிலான நடைமுறைக் கணக்குகளில் அதிகரிப்பு/ (குறைவு)		(53,558,776)	(20,642,589)
ஒத்தி வைக்கப்பட்ட வருமானங்களில் அதிகரிப்பு/(குறைவு)		(8,277,479)	71,842,252
செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு பின் செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்புழக்கம்		**207,987,514**	**178,907,170**
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(11,801,644)	(2,492,166)
சணச திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டது		-	(437,178)
செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பிறப்பாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) நிகர பணப்புழக்கம்		**196,185,870**	**175,977,825**
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான பணப்புழக்கம்/(பயன்படுத்தப்பட்டது)			
சொத்து, பொறி & உபகரணங்களின் கையகப்படுத்தல்		(22,958,530)	(14,445,280)
செயற்பாட்டு வேலைகளின் முன்னேற்றம் - கட்டமாணம்		(45,525,433)	(23,754,698)
சொத்து, பொறி & உபகரணங்களின் விற்பனையில் இருந்தான வருமானம்		712,203	224,599
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு		(4,586,474)	(3,384,986)

வட்டியில் பெற்றுக் கொள்ளப்பட்டது		87,983,996	92,690,079
நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட நிதிகள்		(252,034,233)	(228,725,717)
நிலையான வைப்புக்களின் மீளப்பெறல்		17,325,493	27,641,193
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான பிறப்பாக்கப்பட்ட/ (பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்வு		**(219,082,978)**	**(149,754,809)**
நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்தான/ பயன்படுத்தப்பட்ட காசுப் பாய்வு			
பெற்றுக்கொள்ளப்பட்ட திட்ட மானியங்களில் இருந்து வருமானத்திற்கான மாறுதல்கள்		(2,354,966)	(5,696,601)
பெறப்பட்ட திட்ட மானியம்		8,788,468	2,100,000
கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்தான நிகர பெறுதிகள்/ கொடுப்பனவுகள்		21,451,792	6,279,149
நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்தான/ பயன்படுத்தப்பட்ட நிகர காசுப் பாய்வு		**27,885,294**	**2,682,548**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு/ பற்றாக்குறை		**4,988,186**	**28,905,565**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்		100,784,050	71,586,986
பரிமாற்ற நயம்/(இழப்பிற்கான) சரிப்படுத்தல்கள்		(171,732)	291,501
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**1**	**105,600,505**	**100,784,050**

" ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்"

நிதிநிலை அறிக்கைகளுக்கான கொள்கைகள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

1.1 சட்ட மற்றும் வழக்கமான இருப்பிட வடிவம்

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கல்விக் கூடம் (கொ.ப.க.க.), 2002 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கொ.ப.க.க. கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட, இல. 35, ரீட் நிழற்சாலை, கொழும்பு 07, இலங்கையை வழக்கமான இருப்பிடமாகக் கொண்ட கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயர் கல்வி நிலையம்.

1.2 முதன்மை செயல்பாடுகள் மற்றும் செயல்பாட்டின் தன்மை

உள்ளக இளமாணிப்பட்டம், வெளிவாரிப் பட்டம் மற்றும் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களில் கணினியியல் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல், கணினியியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் ஆலோசனைகளை நடாத்துதல்.

1.3 நிதிக் காலம்

கொ.ப.க.க. நிதிக் காலம் ஜனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை பன்னிரண்டு மாத காலத்தைக் குறிக்கிறது.

1.4 **நிதிநிலை அறிக்கைகளை வெளியிட அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுவதற்கு முகாமைத்துவச் சபை அதன் 2022 பெப்பிரவரி 24 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதலளித்தது.

1.5 நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை

1.5.1 இணக்க அறிக்கை

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை நியமங்களுக்கு (SLPSAS) ஏற்ப கொ.ப.க.க. இன் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகள் நிதிநிலை அறிக்கை, நிதி செயலாற்றல் அறிக்கை, பங்குமூலதன மாற்றங்களின் அறிக்கை, பணப்புழக்க அறிக்கை (காசுப் பாய்வு) மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்குவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கணக்கியல் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த கொள்கைகள் நிதி அறிக்கைகளில் வழங்கப்பட்ட அனைத்து காலங்களுக்கும் மாறாது தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

1.5.2 அளவீட்டின் அடிப்படைகள்

பொருத்தமான குறிப்புகள் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்ட நியாயமான மதிப்புத் தொடர்பாக பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதைத் தவிர, நிதி நிலை அறிக்கைகள் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.5.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்பு காலத்தின் நிதிநிலை அறிக்கைகளின் புரிதலை மேம்படுத்துவதற்கும், ஒப்பீட்டை மேம்படுத்துவதற்கும் நிதி நிலை அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளுக்கும் முந்தைய காலம் தொடர்பான அளவு, விவரிப்பு மற்றும் விளக்கத் தகவல் உள்ளிட்ட ஒப்பீட்டு தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

நிதிநிலை அறிக்கைகளில் உள்ள உருப்படிகளின் விளக்கக்காட்சி அல்லது வகைப்பாடு திருத்தப்படும்போது, மறுவகைப்படுத்தல் சாத்தியமற்றதாக இல்லாவிட்டால், ஒப்பீட்டுத் தொகைகள் மறுவகைப்படுத்தப்படும்.

1.5.4 செயல்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது கொ.ப.க.க. இன் செயல்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாகும்.

1.5.5 மட்டந்தட்டல்

நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொகைகள், இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களினால் அனுமதிக்கப்படும் வகையில் சுட்டிக்காட்டப்பட்டாலன்றி, கிட்டிய ரூபாய்க்கு மட்டந்தட்டபட்டுள்ளன.

1.5.6 குறிப்பிடத்தக்க கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் மற்றும் அனுமானங்கள்

இ.பொ.க.நி. களுக்கு இணங்க நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதற்கு முகாமைத்துவத்திற்கு கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையின் அளவைப் பாதிக்கும் தீர்ப்புகள் பற்றி மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை, எதிர்கால காலங்களில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் கொண்டு செல்லும் அளவிற்கு பொருள் சரிசெய்தல் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், அந்த காலக்கட்டத்தை மட்டுமே பாதிக்குமானால் மதிப்பீடு திருத்தப்படும் காலக்கட்டத்தில் அல்லது திருத்தம் நடப்பு மற்றும் எதிர்கால காலங்களைப் பாதித்தால் திருத்தம் மற்றும் எதிர்கால காலகட்டங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன.

1.5.7 தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு

இந்த நிதி அறிக்கைகள் தொடர்ந்து செல்லல் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை.

1.5.8 கணக்கியல் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

கொ.ப.க.க. கணக்கியல் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளை பின்னோக்கிய விளைவாக அங்கீகரிக்கிறது. எவ்வாறாயினும், பின்னோக்கிய பிரயோகம் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக இருந்தால், கணக்கியல் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகள் எதிர்காலத்திற்குரியதாகப் பிரயோகிக்கப்படும்.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டிற்கான அடிப்படைகளும்

2.1.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

a. அங்கீகாரம் மற்றும் அளவீடு

(I) அங்கீகரிப்பின் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடத்திற்குப் பாயுமாயின், சொத்துக்களின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனில் சொத்து, பொறி, மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(II) அளவீட்டின் அடிப்படை

சொத்து, பொறி, மற்றும் உபகரணங்கள். அனைத்து பொருட்களும் ஆரம்பத்தில் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. பின்னர் இது குறைந்த திரட்டப்பட்ட

தேய்மானம் மற்றும் குறைபாடு ஆகியவற்றில் அளவிடப்படும். சொத்தின் குறிப்பிடத்தக்க கூறுகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றன.

ஆ. செலவு

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் விலை அதன் கொள்முதல் விலை மற்றும் அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்காக சொத்தை செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கான எந்தவொரு நேரடியாகக் கூறக்கூடிய செலவு, என்பனவற்றை உள்ளடங்கும். முன்னர் குறிப்பிட்டபடி, பொறி மற்றும் உபகரணங்கள், அன்றாட சேவைக்கான செலவுகள், குறைந்த திரட்டப்பட்ட தேய்மானம் ஆகியவற்றைத் தவிர்த்து, செலவில் கூறப்படுகின்றன. அங்கீகார அளவுகோல்களை பூர்த்தி செய்தால், அந்த செலவு ஏற்படும் போது, சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றுவதற்கான செலவு அத்தகைய செலவில் உள்ளடங்கும். சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் குறித்த இடைவெளிகளில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது, நிறுவனம் குறிப்பிட்ட பகுதிகளை பயனுள்ள ஆயுளைக் கொண்ட தனிப்பட்ட சொத்துக்கள் போன்று பகுதிகளை அங்கீகரித்து அதற்கேற்ப தேய்மானம் செய்கிறது.

இ. **தொடரும் செலவினம்**

சொத்துக்களின் வருவாய்த் திறனைத் தொடர அல்லது அதிகரிப்பதற்காக நிரந்தர இயல்புடைய சொத்துகளைப் பெறுதல், நீட்டித்தல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கத்திற்காகச் செய்யப்படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன. தனித்தனியாக கணக்கிடப்படும் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு கூறு/உதிரிப்பாகத்தினை மாற்றுவதற்காக செய்யப்படும் செலவு, முக்கிய கண்காணிப்புப் பரிசோனை மற்றும் முழுமையாக மாற்றியமைக்கும் செலவு உட்பட, அனைத்துச் செலவுகளும் மூலதனமாக்கப்படுகிறது. இந்த உதிரிப் பாகத்தினுள் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார பலன்கள் கொ.ப.க.க. க்கு பாயும் மற்றும் அதன் செலவை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும் என்றால் மட்டுமே பிற அடுத்தடுத்த செலவினங்கள் மூலதனமாக்கப்படும்.

ஒரு நிறுவனம், சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியை எடுத்துச் செல்லும் தொகையில், உருப்படியின் அன்றாட சேவைக்கான செலவுகளை அங்கீகரிக்கவில்லை. மாறாக, இந்த செலவுகள் உபரி அல்லது பற்றாக்குறையில் ஏற்பட்டதாக அங்கீகரிக்கப்படுகிறது

நியாயமான மதிப்பு

மானியங்களின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் நியாயமான மதிப்பில் அங்கீகரிக்கப்பட்டு உள்ளன.

2.1.2 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் அங்கீகாரத்தை நீக்குதல்

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி அகற்றப்படுகின்ற போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அதன் அங்கீகரம் நீக்கப்படுகின்றது. சொத்தை அங்கீகரிப்பதில் இருந்து எழும் எந்த ஆதாயம்

அல்லது நஷ்டமும் நிகர அகற்றல் வருமானத்திற்கும் சுமந்து செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக கணக்கிடப்பட்டு, அந்த ஆண்டின் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் சேர்க்கப்பட்டு, சொத்தினது அங்கீகரம் நீக்கப்படுகின்றது.

2.1.3 நூலக நூல்கள்

நூலகப் புத்தகங்களின் செலவுகள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு நேர்கோட்டில் பதிவழிக்கப்படுகின்றன.

2.1.4 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் மறு மதிப்பீடு

மறுமதிப்பீட்டின் விளைவாக ஒரு வகை சொத்துகளின் சுமந்து செல்லும் தொகை அதிகரிக்கப்பட்டால், அதிகரிப்பு நேரடியாக மறுமதிப்பீட்டு மிகைக்கு வரவு வைக்கப்படும். எவ்வாறாயினும், அதிகரிப்பானது மிகை அல்லது பற்றாக்குறையில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே வகை சொத்துக்களின் மறுமதிப்பீட்டுக் குறைவை மாற்றியமைக்கும் அளவிற்கு மிகை அல்லது பற்றாக்குறையாக அங்கீகரிக்கப்படும்.

மறுமதிப்பீட்டின் விளைவாக ஒரு வகை சொத்துகளின் சுமந்து செல்லும் அளவு குறைக்கப்பட்டால், குறைவு மிகை அல்லது பற்றாக்குறையாக அங்கீகரிக்கப்படும். எவ்வாறாயினும், அந்த வகைச் சொத்துக்களைப் பொறுத்தமட்டில் மறுமதிப்பீட்டு மிகையில் இருக்கும் ஏதேனும் வரவு மீதி இருப்பின் அதன் அளவிற்கு, குறைப்பு மறுமதிப்பீட்டு மிகையில் நேரடியாகப் பற்று வைக்கப்படும். அகற்றப்பட்டவுடன், குறித்த தொடர்பான ஏதேனும் மறுமதிப்பீட்டு இருப்பு

2.1.4.1 2021 ஆண்டு காலப் பகுதியில் மறுமதிப்பீடு

2021 ஆம் ஆண்டில், கொ.ப.க.க. அதன் முற்றுமுழுதான கணினி வகைகள் மற்றும் வலைக்கட்டமைப்பு உபகரணங்கள், ஆய்வகம் மற்றும் கலைக்கூட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், அலுவலக உபகரணங்கள், மின்சாரம் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள் ஆகியவற்றை உள்நாட்டில் நியமிக்கப்பட்ட ஐந்து மறுமதிப்பீட்டுக் குழுக்கள் ஊடாக மறுமதிப்பீடு செய்தது.
குழுக்கள் மறுமதிப்பீட்டை நிறைவுசெய்து, தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்து, மறுமதிப்பீடு நடைமுறைக்கு வரும் திகதி திசெம்பர் 31, 2021 ஆகவிருந்தது. 2021 ஆம் ஆண்டில், சொத்து பொறி மற்றும் உபகரண மறுமதிப்பீடு நிதிநிலை அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டது.

2.1.5 தேய்மானம்

தேய்மானம் அனைத்து ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் தொடர்பில் அந்த சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பூராகவும் ஒரு இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.பொ.து.க.நி.7) இணங்க அனைத்துச் சொத்துக்களும் அவை பயன்பாட்டிற்குக் கிடைக்கப் பெறும் போது தேய்மானம் செய்யப்படுகிறது, மேலும் சொத்துக்களின் அங்கீகாரம் நீக்கப்படுகின்ற போது சொத்தின் தேய்மானம் நிறுத்தப்படும். சொத்தின் கொள்வனவுத் திகதி அறியப்படாது இருந்தால் சொத்து கையகப்படுத்தப்பட்ட முழு ஆண்டிற்கும் அல்லது சொத்து கையகப்படுத்தப்பட்ட மிகவும் சமீபத்திய மாத்ததின் அடிப்படையில்

தேய்மானம் வழங்கப்படுகிறது. வருடாந்த தேய்மான விகிதங்கள் பின்வருமாறு. தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பாக அரசாங்க அல்லது பிற மானியத் தொகை கடனழிக்கப்படுகின்றது.

தேய்மானம்	ஆண்டு விகிதம்
கட்டிடங்கள் மற்றும் புனர் நிர்மாணங்கள்	5%
அலுவலக உபகரணங்கள்	20%
ஆய்வுகூடம், கலைக்கூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	20%
கணினி மற்றும் வலைக்கட்டமைப்பு உபகரணங்கள்	20%
மின்சார மற்றும் பராமரிப்பு உபகரணங்கள்	20%
தளபாடங்களும் பொருத்திகளும்	10%
நூலக புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள்	20%
மோட்டார் வாகனங்கள்	20%
மின்சாரம்	10%
நீர்	10%

2.1.6 நிலையான சொத்துகள் பதிவேட்டின் மறுசீரமைப்பு

கொ.ப.க.க. இன் நிலையான சொத்துகள் பதிவேடு (நி.சொ.ப.) முகாமைத்துவச் சபையின் ஒப்புதலுடன் பணிப்பாளர் / கொ.ப.க.க. இனால் நியமிக்கப்பட்ட உள்ளக குழுவினால் மீளாய்வுக்குரிய ஆண்டு காலப் பகுதியில் மீள்-கட்டமைக்கப்பட்டது. குழு ஒப்படையை நிறைவுசெய்தது, எனவே, சொத்துத் திட்டம் மற்றும் உபகரணங்களின் சில வகைகள் **2021** முதல் சொத்துக்களை மிகவும் கவனமாக வகைப்படுத்துவதற்காக மாற்றப்பட்டன.

ஆகவே, அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துதல்கள் ஆகியவற்றின் முந்தைய வகைகள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூடம், கலைக்கூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், கணினி மற்றும் வலைக்கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் மின்சாரம் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள் என பின்வருவனவற்றின் பிற வகைகளாக இந்த ஆண்டில் மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை பிற வகைப்பாடுகள் அப்படியே இருக்கும்.

மறு வகைப்பாட்டிற்கு முன் உள்ள வகைகள்	**மறு வகைப்பாட்டிற்குப் பின் உள்ள வகைகள்**
அலுவலக உபகரணங்கள்	அலுவலக உபகரணங்கள்
ஆய்வுகூடம், மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	ஆய்வுகூடம், கலைக்கூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்
தளபாடங்களும் பொருத்திகளும்	தளபாடங்களும் பொருத்திகளும்
-	கணினி மற்றும் வலைக்கட்டமைப்பு உபகரணங்கள்
-	மின்சார மற்றும் பராமரிப்பு உபகரணங்கள்

கட்டிடங்கள் மற்றும் புனர் நிர்மாணங்கள்	கட்டிடங்கள் மற்றும் புனர் நிர்மாணங்கள்
நூலக புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள்	நூலக புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள்
மோட்டார் வாகனங்கள்	மோட்டார் வாகனங்கள்
மின்சாரம் இணைப்புக்கள்	மின்சாரம் இணைப்புக்கள்
நீர் வழங்கல் அமைப்பு	நீர் வழங்கல் அமைப்பு

.

2.1.7 நடந்து கொண்டிருக்கும் மூலதன வேலைகள்

நடந்து கொண்டிருக்கும் மூலதன வேலைகள் செலவுத்தொகையில் கூறப்பட்டுள்ளன. இவை சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் கட்டுமானத்தில் நேரடியாக ஏற்பட்ட மூலதனச் செலவுகள் ஆகும். செயல்பாட்டில் உள்ள மூலதன வேலைகள், பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது, சொத்து பொறி மற்றும் உபகரணங்களில் தொடர்புடைய சொத்து வகைக்கு மாற்றப்படும். அதாவது, அது கொ.ப.க.க. இனால் திட்டமிடப்பட்ட விதத்தில் செயல்படுவதற்குத் தேவையான இடம் மற்றும் நிலையில் இருக்கும் போது.

2.1.8 தொட்டுணர முடியாத(அருவமான) சொத்துக்கள்

கையகப்படுத்தப்பட்ட கணினி மென்பொருள் அதனைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்படும் செலவுகளின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகிறது. இந்த செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட ஐந்து (05) வருட கால பயன்பாட்டின் பின்னர் கடனழிக்கப்படுகின்றன. கணினி மென்பொருள் நிரல்களை பராமரிப்பது தொடர்பான செலவுகள் ஏற்படும் போது அது செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

விவரணம்	**ஆண்டு விகிதம்**
கணினி மென்பொருள்	20%

கொ.ப.க.க. இனால் கட்டுப்படுத்தப்படுகின்ற அடையாளம் காணக்கூடிய மற்றும் தனித்துவமான மென்பொருள் தயாரிப்புகளின் உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடைய செலவுகள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் போது அருவ சொத்துகளாக அங்கீகரிக்கப்படுகின்றன:

1. மென்பொருள் தயாரிப்பைப் பூர்த்தியாக்குவது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானது, அதனால் அது பயன்பாட்டிற்கு கிடைக்கும்;
2. நிர்வாகம் மென்பொருள் தயாரிப்பை முடித்து அதனைப் பயன்படுத்த விரும்புகிறது;
3. மென்பொருள் தயாரிப்பைப் பயன்படுத்துவதற்கான திறன் உள்ளது;
4. மென்பொருள் தயாரிப்பு எவ்வாறு சாத்தியமான எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும் என்பதை நிரூபிக்க முடிகின்றபோது;
5. மேம்பாட்டை நிறைவு செய்வதற்கும் மென்பொருள் தயாரிப்பைப் பயன்படுத்துவதற்கும் போதுமான தொழில்நுட்ப, நிதி மற்றும் பிற ஆதாரங்கள் உள்ள போது; மற்றும்
6. மென்பொருள் தயாரிப்பின் வளர்ச்சியின் போது அதற்கான செலவினத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடகின்ற போது.

மென்பொருள் தயாரிப்பின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படும் நேரடியாகக் கூறக்கூடிய செலவுகளில் மென்பொருள் மேம்பாட்டு பணியாளர்களின் செலவுகள் மற்றும் தொடர்புடைய பராமரிப்புச் செலவுகளின் பொருத்தமான பகுதி ஆகியவை உள்ளடங்கும்.

2.1.8.1 2021 ஆம் ஆண்டில் தொட்டுணர முடியாத சொத்துகள் மதிப்பாய்வு

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில், கொ.ப.க.க. பணிப்பாளர், கொ.ப.க.க. இன் தொட்டுணர முடியாத அருவ சொத்துக்களை மீளாய்வு செய்து, அவற்றின் தேய்மானக் காலத்தையும் தேய்மான முறையினையும் மறு ஆய்வு செய்வதற்கு ஒரு உள்ளக குழுவினை நியமித்தார். அந்தக் குழு மறு ஆய்வினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை செல்லுபடியாகும் திகதி 2021 ஜூலை 01 எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தது. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இந்த மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் நிதி நிலை அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டன.

2.1.9. இருப்புக்கள்

இருப்புக்கள் செலவுத் தொகையில் மதிப்பிடப்பட்டன, செலவுத் தொகை முதல் உள்ளே முதல் வெளியே என்ற முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த செலவுத் தொகை இருப்புக்களை கையகப்படுத்துவதற்கும், அவற்றை அவற்றின் இருக்கும் இடத்திற்கு கொண்டு வருவதற்கும் ஆகும் செலவினை உள்ளடக்குகின்றது. கொ.ப.க.க. இன் இருப்பில் காகிதாகிகள், நுகர்பொருட்கள் மற்றும் பராமரிப்புப் பொருட்கள் ஆகியன உள்ளடங்கும். பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் இருப்புகள் கையகப்படுத்தப்படுகின்ற போது, அவற்றின் செலவுத் தொகை கையகப்படுத்தப்பட்ட திகதியில் அவற்றின் நியாயமான மதிப்பில் அளவிடப்படும்.

2.1.10 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசு மற்றும் காசுக்குச் சமமானவை கையில் உள்ள பணம், கேள்வி வைப்புத்தொகை மற்றும் குறுகிய கால அதிக திரவத் தன்மையுள்ள முதலீடுகள், அறியப்பட்ட பணத்திற்கு உடனடியாக மாற்றக்கூடியது மற்றும் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய ஆபத்துக்கு உட்பட்டது என வரையறுக்கப்படுகின்றன. பணப்புழக்க அறிக்கையின் நோக்கத்திற்காக, காசு மற்றும் பணத்திற்கு சமமானவை கையில் உள்ள பணம், வங்கிகளில் வைப்பு மற்றும் வங்கிகளின் மேலதிகப் பற்று ஆகியவற்றைக் கொண்டிருக்கும். குறுகிய கால முதிர்வு கொண்ட முதலீடுகள் அதாவது கையகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான முதலீடுகளும் பணத்திற்கு சமமானவையாகக் கருதப்படுகின்றன.

3. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

3.1.1 பொறுப்புக்கள்

நிதி நிலை அறிக்கையின் திகதியில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் அவை இருப்பதாக அறியப்பட்ட பொறுப்புகளுக்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, ஆனால் அவற்றின் அளவை துல்லியமாக தீர்மானிக்க முடியாது. கோரிக்கையின் பேரில் அல்லது நிதி நிலை அறிக்கையின் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள்

செலுத்த வேண்டிய கடப்பாடுகள் நிதி நிலை அறிக்கையில் தற்போதைய பொறுப்புகளாக கருதப்படுகின்றன. நிதி நிலை அறிக்கையின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு செலுத்த வேண்டிய பொறுப்புகள் நிதி நிலை அறிக்கையில் நடப்பு அல்லாத பொறுப்புக்களாக கருதப்படுகின்றன.

3.1.2 தற்செயலான பொறுப்புகள்

கொ.ப.க.க. தற்செயலான பொறுப்பை அங்கீகரிக்கவில்லை, ஆனால் பொருளாதார நன்மைகள் அல்லது சேவை திறனை உள்ளடக்கிய வளங்கள் வெளியேறும் சாத்தியம் தொலைவில் இல்லாவிட்டால் நிதிநிலை அறிக்கைகளின் குறிப்புகளில் ஏதேனும் தற்செயல் பொறுப்புக்களை வெளிப்படுத்துகிறது.

3.1.3 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வின் விளைவாக கொ.ப.க.க. க்கு ஒரு கடப்பாடு இருக்கின்ற போது நிதி நிலை அறிக்கையில் ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகிறது**,** பொறுப்பினைத் தீர்ப்பதற்கு சொத்துக்களின் வெளியேற்றம் ஒன்று தேவைப்படுவதுடன் கடப்பாட்டினை நம்பகத்தன்மையுடன் அளவிட கூடியதான சாத்தியம் இருக்கலாம். முடிவு நிச்சயமற்றதாக இருக்கும் விடயத்திலிருந்து எழும் பொறுப்புகள் தொடர்பாக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

3.1.4 ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

கற்கைநெறிகள் மற்றும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான வருமானம், கற்கைநெறிகளின் தொடக்கத்தில் பெறப்படுகின்ற போது, கற்கைநெறிகள் பல மாதங்கள்/ஆண்டுகளுக்குப் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஒத்திவைக்கப்பட்ட வருமானம் ஏற்படுகின்றது. காலாண்டு அடிப்படையில் நிகழும் கற்கைநெறியின் அளவிற்கு நிதிச் செயல்திறனின் அறிக்கையில் ஒத்திவைக்கப்பட்ட வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, மேலும் மீதமுள்ள கற்கைநெறிக் காலத்திற்கான நிலுவைத் தொகையானது வருமானம் அங்கீகரிக்கப்படும் வரை நிதி நிலை அறிக்கையில் பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

3.1.5 ஊழியர் நன்மைகள்

அ. பணியாளர் வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் - பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர, வேலைவாய்ப்புக்குப் பிந்தைய நன்மைத் திட்டமாகும். திட்டவட்டமான அலகு வரவு (PUC) முறையைப் பயன்படுத்தி, வரையறுக்கப்பட்ட பலன் ஒரு சுயாதீன செயலி மூலம் கணக்கிடப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய மதிப்பு, மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் புழக்கங்களைத் தள்ளுபடி செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது, இது நன்மைகள் செலுத்தப்படும் நாணயத்தில் குறிப்பிடப்படும் வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி தொடர்புடைய பொறுப்புகளின் விதிமுறைகளுடன் தோராயமாக முதிர்வுக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய மதிப்பு, தள்ளுபடி விகிதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் இறப்பு விகிதங்கள் பற்றிய பல அனுமானங்களைப் பயன்படுத்தி ஒரு நடைமுறை அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது, பல காரணிகளைப் பொறுத்தது, இந்தத் திட்டங்களின் நீண்ட காலத் தன்மை

காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அனைத்து அனுமானங்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. அதற்கிணங்க, 31 திசெம்பர் 2021 இன் செயல்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் பணியாளர் நன்மைப் பொறுப்பு உள்ளது. கொ.ப.க.க. இன் பணிக்கொடைக்கான கணக்கியல் கொள்கையானது, நிதிச் செயல்திறனின் அறிக்கையில் அவை முழுமையாக நிகழும் காலப்பகுதியில் உண்மையான நயங்கள் மற்றும் இழப்புகளை அங்கீகரிப்பதாகும்.

ஆக்சுவேரியல் அண்ட் மேனேஜ்மென்ட் கன்சல்டன்ட் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனம், தகுதிவாய்ந்த உண்மையான வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தில் உள்ளபடியான மதிப்பீட்டைச் செய்துள்ளது - 31-12-2021 இன் படி பணிக்கொடை, ஓய்வூதிய நன்மைகளின் மதிப்பை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படும் அனுமானங்கள் பின்வருமாறு.

ஓய்வுபெறும் பணிக்கொடை சூத்திரம்: "வெளியேறும்" திகதியின்படி மொத்த சேவைக் காலம் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும் போது, பணி நிறைவுற்ற ஒவ்வொரு ஆண்டுக்கும் அரை மாதச் சம்பளம் மற்றும் படிகள்.

இறப்பு: 1967/70 இறப்பு அட்டவணை

இயலாமை: இறப்பு அட்டவணையில் 10%

பணியாளர்களின் வருவாய் விகிதங்கள்: நிரந்தர பணியாளர்கள்: ஆண்டொன்றிற்கு 2.00% மற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு

ஒப்பந்த பணியாளர்கள்: பணியாளர் புரள்வு விகிதம்

வயது குழு விகிதம்

XV: 18 முதல் 34 25%

XV: 35 முதல் 44 15%

XV: 45 முதல் 54 5%

அதன் பிறகு, பூச்சியம்.

சம்பள உயர்வு விகிதம்

கல்வி ஊழியர்கள் ஆண்டொன்றிற்கு **10.00%**

கல்வி உதவி ஊழியர்கள் ஆண்டொன்றிற்கு **9.00%**

கல்வி சாரா ஊழியர்கள் ஆண்டொன்றிற்கு **8.00%**

சாதாரண ஓய்வு வயது

கல்விசார் ஊழியர்கள் 65 வயது.

கல்வி சாரா ஊழியர்கள் 62 வயது.

தள்ளுபடி விகிதம் ஆண்டொன்றிற்கு 11%

(குறிப்பிட்ட ஓய்வூதிய வயதை விட அதிகமாக இருக்கும் ஊழியர்கள் அந்தந்த பிறந்தநாளில் ஓய்வு பெறுவார்கள் என்று கருதப்படுகிறது)

தற்போதைய சேவை செலவு

வகை	ரூ.
கல்விசார் –நிரந்தரம்	4,328,613
கல்விசாரா - நிரந்தரம்	1,214,61
கல்விசார் ஆதரவு – நிரந்தரம்	196,496
கல்விசார் - ஒப்பந்தம்	498,284
கல்விசாரா - ஒப்பந்தம்	51,300
கல்விசார் ஆதரவு - ஒப்பந்தம்	229,521
இ- கற்றல்	13,659
மொத்தம்	6,532,491

உணர்திறன் பகுப்பாய்வு விகிதங்களுக்குக் கீழே தரப்பட்ட எடுகோளின் அடிப்படையில் அனுமானிக்கப்பட்டது.

- தள்ளுபடி விலையில் ஒரு சதவீத புள்ளி அதிகரிப்பு (+1%) ரூ. 95,400,863

- ஒரு சதவீத புள்ளி குறைவு (-1%) தள்ளுபடி விலை ரூ. 112,019,585

- சம்பளத்தில் ஒரு சதவீத புள்ளி அதிகரிப்பு (+1%).

  அதிகரிப்பு விகிதம் ரூ. 111,975,052

- சம்பளத்தில் ஒரு சதவீத புள்ளி குறைவு (-1%).

  அதிகரிப்பு விகிதம் ரூ. 95,306,514

2021 ஆம் ஆண்டிற்கான உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

பி. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதி (UPF), ஊழியர்களின் நம்பிக்கை நிதி (ETF) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதிக்கு கொ.ப.க.க. மற்றும் ஊழியர்கள் ஒவ்வொரு பணியாளரின் சம்பளத்தில் முறையே 15% அல்லது 07% மற்றும் 10% பங்களிக்கின்றனர். கூடுதலாக, கொ.ப.க.க. ஒவ்வொரு பணியாளரின் சம்பளத்தில் 3% ஊழியர்களின் நம்பிக்கை நிதியிலும், தகுதியான ஊழியர்களின் சம்பளத்தில் 08% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியிலும் பங்களிக்கப்படுகிறது. இவை நிதிச் செயல்திறனின் அறிக்கையில் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

3.1.6 அந்நிய செலாவணி பரிவர்த்தனை

இலங்கை ரூபாய் அல்லாத பிற பரிவர்த்தனை நாணயங்களிலான பரிவர்த்தனை திகதியில் நிலவும் விகிதங்களில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய மாற்றத்தின் விளைவு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட பணச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மாற்றத்தின் விளைவாக ஏற்படும் ஆதாயம் மற்றும் இழப்புகள் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் பணச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இருப்புநிலை திகதியில் நிலவும் மாற்று விகிதத்தில் மாற்றப்படுகின்றன.

3.2 நிதி, மானியங்கள் மற்றும் ஒதுக்க வருவாய் ஆகியவற்றின் பெறுதி மற்றும் பயன்பாட்டு நிதிகள் என்பது அரசாங்க மானியங்கள், ப.மா.ஆ. மானியங்கள், உள்ளக மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் பல்வேறு நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களால் வழங்கப்படும் வெளிவாரி மானியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் அரச வங்கிகளில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படுகின்றன. நிதி நிறுவப்பட்ட குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்பாடு கட்டுப்படுத்தப்படுகிறது.

3.2.1 அறக்கட்டளை நிதியங்கள்

சொத்துக்கள் தீர்ந்துபோகாத நன்கொடையாகப் பெறப்பட்டால், அத்தகைய சொத்துக்களிலிருந்து ஈட்டப்படும் வருமானம் மட்டுமே வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படலாம். சம்பந்தப்பட்ட உடன்படிக்கை அல்லது குறிப்பு வேறுவிதமாக வழங்காத வரையில், மேலே உள்ள ஒவ்வொரு வகைகளின் கீழும் கிடைக்கும் நிதியிலிருந்து பெறப்படும் முதலீட்டு வருமானம் மற்றும் பிற ஆதாயங்கள் பொருத்தமான நிதிகளுக்கு ஒதுக்கப்படும். ஒவ்வொரு குறிப்பிட்ட பரீட்சையிலும் சிறந்த செயல்திறனுக்கான பாடப் பரிசுகள் மற்றும் தகுதிப் பரிசுகளை வழங்குவது நிதியின் நோக்கமாகும்.

4. நிதி செயல்திறன் அறிக்கை

4.1. வருவாய் அங்கீகாரம்

கொ.ப.க.க. க்கு பொருளாதார பலன் பாயும், நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய அளவிற்கு வருவாய் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சேவைகள் மூலம் கிடைக்கும் வருவாயை நிறைவு செய்யும் நிலை தொடர்பாக குறிப்பிடப்படுகிறது. வருவாயை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியாத பட்சத்தில், ஏற்படும் செலவுகள் திரும்பப்பெறக்கூடிய அளவிற்கு மட்டுமே வருவாய் அங்கீகரிக்கப்படும்.

4.1.1 பரிவர்த்தனை அல்லாத பரிமாற்றங்களிலிருந்தான வருவாய் அங்கீகாரம்

பரிவர்த்தனை அல்லாத பரிமாற்றங்கள் என்பது கொ.ப.க.க. மற்றொரு நிறுவனத்திடமிருந்து (எ.கா. ரொக்கம் அல்லது பிற சொத்துக்கள்) மதிப்பை பரிமாற்றத்தில் தோராயமாக சமமான மதிப்பைக் கொடுக்காமல் பெறுகிறது. பரிமாற்றம் அல்லாத பரிமாற்றங்களிலிருந்து வரும் வளங்களின் ஓட்டங்களில், ஒரு சொத்தின் வரையறையைப் பூர்த்தி செய்யும் சேவைகள் தவிர, பிறவற்றில் மட்டுமே சொத்தாக பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்படும்:

— கொ.ப.க.க. இன் பொருளாதார நன்மைகள் அல்லது சேவைத் திறனைப் பெறுவது சாத்தியமாகும் பட்டசத்தில்; மற்றும்

- நியாயமான மதிப்பை நம்பகத்தன்மையுடன் அளவிட

முடிகின்ற போது. சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்ட பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளிலிருந்து வளங்களின் வரவு, அதே வரவுக்குரிய பொறுப்பு

அங்கீகரிக்கப்படாத அளவிற்கு, பரிமாற்றம் அல்லாத வருவாயாக அங்கீகரிக்கப்படுகிறது.

கொ.ப.க.க. அல்லாத பரிவர்த்தனைகள் தொடர்பான குறிப்பிட்ட அங்கீகார அளவுகோல்கள் பின்வருமாறு.

(அ) அரசு மானியங்கள்

அரசாங்க மானியங்களில் இருந்து எழும் சொத்துக்கள் மற்றும் வருவாய், பரிமாற்ற ஏற்பாடு நியாயமான மதிப்பில் பிணைக்கப்படும் காலத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. ஒரு மாற்றம் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையின் விளைவாக தற்போதைய கடப்பாடாக இருக்கும் போது, நிபந்தனைகள் நிறைவேறும் வரை கொ.ப.க.க. ஒரு பொறுப்பை அங்கீகரிக்கிறது. அரசாங்க மானியங்களிலிருந்து எழும் சொத்துக்கள் மற்றும் வருவாய் அங்கீகரிக்கப்பட்ட திகதியில் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகிறது. பண சொத்துக்கள் அவற்றின் பெயரளவு மதிப்பில் அளவிடப்படுகின்றன.

- **மீண்டும் வரும் செலவு மானியம்**

தொடர்ச்சியான செலவினங்களுக்காக பெறப்பட்ட அரசாங்க மானியங்கள் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் கீழ் நிதி செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அரசு மானியம் ரூ. **392.18** மில்லியன் **2021** ஆம் ஆண்டிற்கான தொடர்ச்சியான மானியமாக பெறப்பட்டது.

- **மூலதன மானியம்**

SLPSAS 11 இன் தேவைக்கு ஏற்ப, 2020 நிதியாண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில், பரிவர்த்தனை அல்லாத பரிமாற்றங்களின் வருவாய், மூலதனச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட அரசாங்க மானியங்கள் மற்றும் பிற மூலதனப் பரிமாற்றங்கள் நிதி செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மூலதன மிகை / (பற்றாக்குறை) மூலதன பரிவர்த்தனைகள் திரட்டப்பட்ட நிதியின் கீழ் திரட்டப்படுகின்றன - நிதிநிலை அறிக்கையில் மூலதனம் ஆண்டு காலப் பகுதியில் ரூ. 60 மில்லியன், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறப்பட்ட சிறப்பு மானியமான 10 மில்லியன் உட்பட, அரசாங்க மூலதன மானியமாக பெறப்பட்டது.

(அ) பெறப்பட்ட அன்பளிப்புகள், நன்கொடைகள் மற்றும் பொருட்கள்

அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் என்பது, கொ.ப.க.க. பெறும் ரொக்கம் அல்லது பிற பணச் சொத்துக்கள் மற்றும் பொருட்கள் உட்பட சொத்துக்களை தன்னார்வமாக மாற்றுவது ஆகும், அவை நிபந்தனைகளிலிருந்து விடுபடுகின்றன. அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் மற்றும் பெறப்பட்ட பொருட்கள், அதன் நியாயமான மதிப்பில் பரிமாற்றம் அல்லாத வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றன, அது எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவை உள்ளாற்றல் பல்கலைக்கழகத்திற்கு பாயும் மற்றும் சொத்துக்களின் நியாயமான மதிப்பை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்.

4.1.2 பரிவர்த்னைப் பரிமாற்றங்களில் இருந்தான வருவாய்

(அ) கற்கைநெறிக் கட்டணம்

கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் காலத்திற்கு காலாண்டு அடிப்படையில் கற்கைநெறி கட்டணம் அங்கீகரிக்கப்படுகிறது. வெவ்வேறு நிதிக் காலகட்டங்களுக்கு அத்தகைய ஒதுக்கீட்டைச் செய்வதற்கு போதுமான தகவல்கள் கிடைக்காத பட்சத்தில், கட்டணங்கள் பண அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

(ஆ) கணினியியல் சேவைகளுக்கான கட்டணம்

வழங்கப்பட்ட கணினியியல் சேவைகளுக்கான கட்டணங்கள் வேலை முடிந்ததன் பின்னரேஅங்கீகரிக்கப்படும்.

(இ) முதலீட்டு வருமானம்

கொ.ப.க.க. இன் நிலையான வைப்புத்தொகை தொடர்பான வட்டி வருமானம் திரட்டல் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. நிலையான வைப்புத்தொகையின் வட்டி வருமானம் பயனுள்ள விளைவு முறையைப் பயன்படுத்தி திரட்டப்படுகிறது. நிலையான வைப்புகளிலிருந்து பெறப்பட்ட வட்டிக்கு கூடுதலாக, வட்டி வருமானம் என்பது கடன் மற்றும் முன்பணம் மற்றும் பணச் சந்தை முதலீட்டு வருமானம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வட்டியைக் கொண்டுள்ளது.

(ஈ) சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையில் இருந்தான ஆதாயம் / இழப்புகள்

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவதில் நிகர ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் அப்புறப்படுத்தப்பட்ட வருமானம், அகற்றப்பட்ட பொருளின் சுமந்து செல்லும் மதிப்பு மற்றும் தொடர்புடைய விற்பனைச் செலவுகள் ஆகியவற்றிலிருந்து கழித்த பிறகு அங்கீகரிக்கப்படுகின்றன. மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் விஷயத்தில், மறுமதிப்பீட்டு இருப்புக் கணக்கில் எஞ்சியிருக்கும் இருப்பு பொது இருப்பு அறிக்கைக்கு மாற்றப்படும்.

(இ) பிற வருமானம்

மேலே உள்ள வகைகளின் கீழ் குறிப்பிடப்படாத வேறு எந்த வருமானமும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிற வருமானம் என்பது விநியோகஸ்தர்களின் பதிவு வருமானம், திரும்பப் பெற முடியாத விலை மனுக் கட்டணம், தெரிவுப் பரீட்சைக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் இதர இயல்பு வருமானம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

4.3 செலவு அங்கீகாரம்

நிகழ்ச்சித்திட்டம்/திட்டம்/பொருள் வாரியாக செலவினங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இளங்கலைக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஏற்படும் அனைத்துச் செலவுகளும் அரசின் மீண்டும் வரும் செலவின மானியத்தில் அறவிடப்படுகின்றன. மாணவர்களின் கற்றல் திறனை முன்னெடுத்துச் செல்வதற்காக அல்லது அதிகரிப்பதற்காக நிரந்தர இயல்புடைய சொத்துக்களை கையகப்படுத்துதல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஏற்படும் அனைத்துச் செலவுகளும் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.

(அ) திட்டச் செலவுகள்

கொ.ப.க.க. இன் திட்டங்கள் மற்றும் பிற செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான செலவுகள் அவை மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில் நிதி செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன மற்றும் திட்டச் செலவுகளைக் கண்டறிவதற்கான அடிப்படையானது, பிரதானமாக திட்டத்திற்கான அமைவிடங்கள் மற்றும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் ஆகியன திட்ட முன்மொழிவின் படி உள்ளன.

செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட வருமானப் பொருட்களை ஈட்டுதல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள நேரடி தொடர்பின் அடிப்படையில் நிதி செயல்திறன் அறிக்கையில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) செயல்பாட்டு செலவினங்கள்

கொ.ப.க.க. இனை நடத்துவதற்கும், மூலதனச் சொத்துக்களை திறமையான நிலையில் பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்துச் செலவுகளும், ஆண்டுக்கான மிகையில் வரும் வருமானத்திற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள், கருத்தரங்குகள் மற்றும் கற்கைநெறிகளுக்கான செலவினங்கள் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(இ) நிதிச் செலவு

நிதிச் செலவு, அது செலுத்தப்படும்போது அல்லது பொறுப்புகளை உருவாக்கும் போது, அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

4.4 பணப்புழக்கங்களின் அறிக்கை

பணப்புழக்கங்களின் அறிக்கை இ.பொ.க.நி. இல. 02 இன் படி தயாரிக்கப்பட்டது. பணப்புழக்கத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் முறை "மறைமுக முறை" ஆகும். பணப்புழக்கங்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவை குறிப்பு 01 இல் விளக்கப்பட்டுள்ளபடி அந்த பொருட்களை உள்ளடக்கியது.

4.5 அறிக்கையிடல் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலத்திற்குப் பின்பு நிகழும் நிகழ்வுகளின் உள்ளடக்கம் பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில், கணக்குகளில் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

4.6 வருமதிகள்

வருமதிகள் அவை உணர்ந்து கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன.

4.7 வழுத் திருத்தங்கள்

கொ.ப.க.க. அவர்கள் கண்டுபிடித்ததன் பின்னர் வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் முதல் தொகுப்பில் முந்தைய காலப் பகுதி பிழைகளை/வழுக்களைப் பின்வருமாறு பின்னோக்கி சரி செய்யப்பட்டது:

(அ) பிழை ஏற்பட்ட முந்தைய காலத்திற்கான ஒப்பீட்டுத் தொகைகளை மீளக் கூறுதல்; அல்லது

(ஆ) முன்வைக்கப்பட்ட முந்தைய காலத்திற்கு முன் பிழை ஏற்பட்டிருந்தால், முன்வைக்கப்பட்ட முந்தைய காலத்திற்கான சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் நிகர சொத்துகள்/பங்கு ஆகியவற்றின் தொடக்க நிலுவைகளை மீளக் கூறுதல்.

4.8 ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள்

2002 ஆம் ஆண்டின் 01 இலக்க கட்டளைச் சட்டத்தின் இன் கீழ் நிறுவப்பட்ட அலகுகள் / மையங்களின் அனைத்து கணக்குகளையும் ஒன்றிணைத்து கொ.ப.க.க. அதன் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்துள்ளது. இந்த அலகுகள்/ மையங்கள் இளங்கலைப் பிரிவு **(UG),** முதுகலை பிரிவு **(PG),** வெளிவாரிப் பட்டம் நிலையம் **(EDC),** கணினிச் சேவைகள் நிலையம் **(CSC),** இ கற்றல் நிலையம் **(eLC),** உயர் எண்ணியல் பல்லூடக தொழில்நுட்ப நிலையம் **(ADMTC), ICTer** மாநாடு மற்றும் பொதுவான திட்டங்கள் ஆகும்.

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

குறிப்பு - 01 காசும் காசுக்குச் சமமானவைகளும்

திசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தவாறு	2021 ரூ.	2020 ரூ.
குறுகிய கால முதலீடு		
அழைப்பு நிலையான வைப்புகள் - இளங்கலை	46,294,185	32,000,000
நிலையான வைப்புகள் - பட்டப் பின்/முதுகலை	21,242,288	22,527,817
நிலையான வைப்புகள் - வெ.ப.நி.-EDC	3,000,000	-
நிலையான வைப்புகள் - இ.க.நி.-eLC	947,831	1,404,672
நிலையான வைப்புகள் - ICTer	997,337	2,441,834
நிலையான வைப்புகள் - பொதுத் திட்டங்கள்	-	4,510,348
உப கூட்டுத் தொகை	**72,481,641**	**62,884,671**
வங்கி நடைமுறைக் கணக்குகள்		
வங்கி நிலுவை - இளங்கலை	7,444,445	16,891,607
வங்கி நிலுவை - வெ.ப.நி.- EDC	1,952,427	2,030,635
வங்கி நிலுவை - பட்டப் பின்/முதுகலை	6,078,270	5,667,938
வங்கி நிலுவை - க.சே.நி.- CSC	2,992,966	3,023,032
வங்கி நிலுவை - உ.எ.ஊ.தொ.தொ.- ADMTC	753,590	1,259,822
வங்கி நிலுவை - இ-க.நி. - eLC	1,669,653	1,366,475
வங்கி நிலுவை - ICTer	1,815,969	783,041
வங்கி நிலுவை - பொதுத் திட்டங்கள்	10,411,543	6,876,829
உப கூட்டுத்தொகை	**33,118,864**	**37,899,380**
மொத்த கூட்டுத்தொகை	**105,600,505**	**100,784,050**

குறிப்பு 01.01 முதலீடு

திசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தவாறு	01.01.2021 அன்றிருந்தவாறு மீதி ரூ.	வருட காலப் பகுதியில் வைப்புடன் சேர்க்கப்பட்டது ரூ.	Withdrawals During the Year ரூ.	31.12.2021 அன்றிருந்தவாறு மீதி ரூ.
குறிப்பு 01.01 முதலீடு - ஒரு வருடத்திற்கு உள்ளான முதிர்வு				
இளங்கலை	14,739,444	26,230,043	306,750.00	40,662,737
முதுகலை/ பட்டப் பின்	403,343,700	109,472,919	-	512,816,618
வெ.ப.நி./EDC	421,813,520	88,062,720	4,093,652	505,782,588
க.சே.நி./CSC	41,666,933	5,655,629	-	47,322,562
இ-க.நி./eLC	114,682,812	12,649,925	6,000,000	121,332,737
உ.எ.ப.தொ.நி./ADMTC	15,571,160	890,639	-	16,461,798
பொதுத் திட்டங்கள்	65,747,588	8,194,706	6,931,841	67,010,452
ICTer	6,351,132	877,654	-	7,228,785

உப கூட்டுத்தொகை	**1,083,916,289**	**252,034,233**	**17,332,243**	**1,318,618,278**
குறிப்பு 01.01 முதலீடு - ஒரு வருடத்திற்கு பின்னரான முதிர்வு				
இ-க.நி./eLC	200,000	-	-	200,000
முதுகலை/பட்டப் பின்	43,542,158	-	-	43,542,158
உப கூட்டுத்தொகை	**43,742,158**	**-**	**-**	**43,742,158**
கூட்டுத்தொகை	**1,127,658,447**	**252,034,233**	**17,332,243**	**1,362,360,436**

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

குறிப்பு - 02 கடன் வருமதிகள்

திசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தவாறு	ஒரு வருடத்தினுள் அறவிடப்படுவது ரூ.	ஒரு வருடத்தினுள் அறவிடப்படுவது ரூ.	மொத்தம் 2020 ரூ.
இடர்க் கடன்	4,558,356	12,829,671	17,388,027
கணினி கடன்	18,000	41,000	59,000
வாகனக் கடன்	125,988	302,527	428,515
பணியாளர் கடன்	6,120	30,260	36,380
விசேட கணினிக் கடன்	-	-	-
கூட்டுத்தொகை	**4,708,464**	**13,203,458**	**17,911,922**

திசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தவாறு	ஒரு வருடத்தினுள் அறவிடப்படுவது ரூ.	ஒரு வருடத்தினுள் அறவிடப்படுவது ரூ.	மொத்தம் 2021 ரூ.
இடர்க் கடன்	4,416,456	11,306,964	15,723,420
கணினி கடன்	12,000	28,500	40,500
வாகனக் கடன்	77,988	93,372	171,360.00
பணியாளர் கடன்	6,120	24,310	30,430.00
விசேட கணினிக் கடன்	405,504	1,487,328	1,892,832
கூட்டுத்தொகை	**4,918,068**	**12,940,474**	**17,858,542**

நீர் வநியோக அமைப்பு	2,280,840	2,280,840
கணினி மற்றும் வலைக்கட்டமைப்பு உபகரணம்	26,523,394	-
மின்சார மற்றும் பராமரிப்பு உபகரணம்	935,980	-
நூலக நூல்கள் மற்றும் பருவ இதழ்கள்	723,995	713,708
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	3,232,013	3,067,665
வாகனங்கள்	2,290,000	600,000
கட்டிடங்கள்	28,103,434	27,217,786
	93,705,361	**96,458,473**
மென்பொருள் கடனழிப்பு	2,082,367	4,815,576
கூட்டுத்தொகை	**95,787,728**	**101,274,049**

7.கொ.ப.க.க. இன் சிறப்பம்சங்கள் 2021 – புலப்பாடு, நிகழ்வுகள் மற்றும்

7. கொ.ப.க.க. இன் சிறப்பம்சங்கள் 2021 – புலப்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள்

கொ.ப.க.க. இன் இணையத்தளம் நிறுவனத்தின் முக்கிய சிறப்பம்சங்களை அறிவிப்பதற்கான பிரதான நுழைவாயிலாக இருக்கின்றது. 2021 ஆம் ஆண்டில், கொ.ப.க.க. இன் இணையத்தளம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பிரதான தொனிப் பொருளைக் கருத்தில் கொண்டு மேலும் மறுசீரமைக்கப்பட்டு உள்ளது. அது ஒரு இரட்டைத்தள URL இனைக் கொண்டுள்ளது, அதாவது http://www.ucsc.cmb.ac.lk மற்றும் http://www.ucsc.lk. நிறுவனத்தின் முன்னேற்றங்கள் பற்றிய புலப்பாடு மற்றும் பிரச்சினைகளைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் நடைபெறுகின்ற அனைத்து முக்கிய செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவ சபை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக மூதவைக்கு அறிவிக்கப்படுகின்றது. கொ.ப.க.க. இன் இணையத்தளம் நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பொது மக்களுக்கு நாளதுவாக்குவதற்காக ஒரு சமூக வலைத்தளத்துடனும் இணைக்கப்பட்டு உள்ளது. உலகளாவிய பெருந் தொற்றுச் சூழ்நிலை காரணமாக கொ.ப.க.க. இன் கூட்டங்கள், விரிவுரைகள், மற்றும் பிற கல்விசார் நடவடிக்கைகள் ஷூம் செயலி வசதிகளைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆண்டின் ஒவ்வொரு மாதம் தொடர்பான முக்கிய சிறப்பம்சங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

7.1 *மாதாந்த சிறப்பம்சங்கள் - செயற்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்*

மாதம்	செயற்பாடுகள்
ஜனவரி 2021	• 1 ஆம் திகதி - புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் (இயங்கலை) • 16 ஆம் திகதி – கலப்பின கையடக்க செயலி மேம்பாடு குறித்த குறுகிய கால பாடத்திட்டத்தை Flutter உடன் தொடங்கியது • 21 ஆம் திகதி - கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் கலை பீடத்திற்காக 100 ஆண்டுகள் பூர்த்தியை நினைவுகூரும் வகையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி அருங்காட்சியகத்தின் தொடக்க விழா • 24 ஆம் திகதி - இயங்கலைப் பயன்முறை வழியாக JavaSE ஐப் பயன்படுத்தி மேம்பட்ட பல்லூடக வலை வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நுட்பம் மற்றும் ஜாவா பிரயோக மேம்பாடு குறித்த குறுகிய படிப்புகளை வெற்றிகரமாக முடித்த பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. • 27 ஆம் திகதி - கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான தியான திட்டத்தை நடத்த வசதியளித்தமை
பெப்பிரவரி 2021	• 5 ஆம் திகதி - முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் சிறந்த செயலாற்றலுக்கான விருதுகள் மற்றும் ஆசிரிய பீட விருதுகள் மற்றும் இளங்கலை பட்டப்படிப்பில் சிறப்பாக செயலாற்றிய மாணவர்களுக்கான பணிப்பாளர் பட்டியல்

	விருதுகள் ஆகியவற்றிற்கான விருது வழங்கும் விழாக்கள் இயங்கலை ஊடாக நடத்தப்பட்டன • 6 ஆம் திகதி - ஜாவா எஸ்.இ (JAVA SE) பயன்படுத்தி ஜாவா பிரயோக மேம்பாடு மென்பொருள் குறித்த குறுகிய பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த பங்கேற்பாளர்களுக்கு 24 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. • 10 ஆம் திகதி - கொழும்பு பல்கலைக்கழக கணினி அருங்காட்சியகத்தை நிறுவ குறுகிய காலத்தில் தங்கள் சேவைகளை வழங்கிய ஊழியர்களுக்கு அருங்காட்சியக வாழ்த்து விழா மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. • 13 ஆம் திகதி - கலப்பின கையடக்க செயலி குறித்த குறுகிய பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த 19 பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன • 21 ஆம் திகதி - சோதனை தானியங்கிக் கட்டமைப்பைப் பயன்படுத்தி மென்பொருள் தர உத்தரவாதம் குறித்த குறுகிய பாடத்திட்டத்தைத் தொடங்கியமை பிற நடவடிக்கைகள் • வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அரையாண்டு பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன • பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் குறித்த மேற்பார்வையாளர்களுடன் ஜூம் வழியாக உள்ளகப் பயிற்சி கண்காணிப்பு • தொலைதூர தூண்டுதல் அணுகுமுறையைப் பயன்படுத்தி இ-க.நி. இனால் பழைய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட த.தொ.அ. கற்கைநெறிக்கான இ-சோதனைகள்
மார்ச்சு 2021	• 3 ஆம் திகதி - பணியாளர்களுக்கான புதிய பி.ஏ.பி.எக்ஸ். முறைமை குறித்த பொது பயனர் பயிற்சிப் பட்டறை • 10 ஆம் திகதி - சி.வி.சி.டி கூட்டத்தில் பணிப்பாளர்/கொ.ப.க.க. “பல்கலைக்கழக நுழைவாளர்களுக்கான இயங்கலை நிகழ்ச்சித்திட்டங்கள்” குறித்து அளிப்பினை வழங்கியது • 14 ஆம் திகதி - முதுமாணி/பட்டப் பின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தெரிவுப் பரீட்சை - 2020/2021 உள்ளெடுப்பு • 29 ஆம் திகதி - கொ.ப.க.க. பணியாளர்களுக்கு நெருப்புக் குழு செயல்பாடு குறித்த பயிற்சி • 2 ஆம் - உள்ளக இளங்கலை பட்டதாரிகளுக்கான அரையாண்டுப் பரீட்சைகள் பிற நடவடிக்கைகள் • இ.க.நி. இனால் த.தொ.அ. கற்கைநெறி பழைய பாடத்திட்ட பகுதி II க்கான மின்-சோதனை • இ.க.நி. இனால் த.தொ.அ. கற்கைநெறி புதிய பாடத்திட்டத்திற்கான மின்-சோதனை

	• கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணத்தில் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அரையாண்டுப் பரீட்சைகள்
ஏப்பிரல் 2021	• 5th – 9ஆம் திகதிகளில் - இறுதி ஆண்டு திட்ட மதிப்பீடு (இளங்கலை) • 7ஆம் திகதி - ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்புக்காக எஸ்.எல்.டி-மொபிடலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை • 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் - ப.மா.ஆ. இடமிருந்து (350 மாணவர்கள்) இளங்கலை புதிய உள்ளெடுப்பிற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. • 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் - முதுமாணிகள் 1 ஆம் ஆரையாண்டுப் பரீட்சைகள் • 20ஆம்– 22ஆம் திகதிகளில் - இளங்கலை மாணவர்களுக்கான தொழில்துறை வேலைவாய்ப்பு வாய்மொழிப் பரீட்சை (தொ.அ.நி.) - இயங்கலை • 23 ஆம் திகதி- த.தொ.இ. பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி ஆண்டு திட்ட மதிப்பீடுகளைத் தொடங்கியது மற்றும் நேரடியான மதிப்பீட்டை இடைநிறுத்தியது • 27ஆம் திகதி - இளங்கலை நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கம் 2019/2020 (இயங்கலை) பிற நடவடிக்கைகள் • புதிய இளங்கலை மாணிப் பட்ட மாணவர்களுக்கான (இயங்கலை) ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது • 2021 கல்வியாண்டிற்கான த.தொ.இ. பதிவுகள் • த.தொ.அ. புதிய பாடத்திட்டத்திற்கான இ-சோதனை இ.க.நி. நடாத்தப்பட்டது.
மே, 2021	• 1ஆம் திகதி– இயங்கலை குறுகிய கால கற்கைநெறிகளின் தொடக்கம் - வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாடு மற்றும் JavaSE ஐப் பயன்படுத்தி ஜாவா பிரயோக மென்பொருள் மேம்பாடு • 10ஆம் திகதி - உள்ளக இளங்கலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான 2021 கல்வியாண்டு தொடக்கம் • 15ஆம் திகதி - 2021 ஆம் ஆண்டிற்கான தகவல் பாதுகாப்பு முதுகலை மாணி மற்றும் வியாபாரப் பகுப்பாய்வு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான இயங்கலைத் தெரிவு நேர்முகத் தேர்வுகள். • 16ஆம் திகதி - 2021 ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்ப முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கான இயங்கலைத் தெரிவு நேர்முகத் தேர்வு • 22 ஆம் திகதி - 2021 ஆண்டிற்காக கணினி விஞ்ஞான முதுகலை மாணிக்காக இயங்கலை மூலமான தெரிவு நேர்முகத்தேர்வு

	• 22ஆம் திகதி - த.தொ.இ. பரீட்சையின் மட்டம் 1 இற்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டது • 22ஆம் திகதி - கொ.ப.க.க. இன் IEEE WIE மாணவர் கிளை இணைப்புக் குழுவின் வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெற்றது. • 24ஆம் திகதி - த.தொ. இல. டிப்புளோமா இன் (த.தொ.டி.) தகுதி பட்டியல் வெளியிடப்பட்டது • 31ஆம் திகதி - Mobitel மற்றும் Huawei Co. வழங்கிய சேமிப்பக அமைப்பு கொ.ப.க.க. இன் கல்வி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டது. பிற நடவடிக்கைகள் • த.தொ.இ. இறுதியாண்டு கருத்திட்ட வாய்மொழிப் பரீட்சை (இயங்கலை ஊடாக) • புதிய தொகுதிக்கான (இயங்கலை) ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடரப்பட்டது
ஜூன் 2021	• 5ஆம் திகதி - முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டங்களின் 2வது/4ஆம் அரையாண்டுகளின் கல்வி நடவடிக்கைகள் அதிகாரப்பூர்வமாக முடிவடைந்தன • 6ஆம் திகதி - 23 பங்கேற்பாளர்களுக்கு மேம்பட்ட பல்லூடக வலை வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நுட்பங்கள் குறித்த இயங்கலை ஊடான குறுகிய கால கற்கைநெறி தொடங்கப்பட்டது • 12ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 3வது அரையாண்டு தேர்வுகள் இயங்கலையூடாக நடத்தப்பட்டன • 14ஆம் திகதி - கொ.ப.க.க. இன் இளங்கலைப் பட்டதாரி மாணவர்களிடையே ஊக்குவிப்பதற்காக இளைஞர் கண்டுபிடிப்புக்கான உலக உச்சி மாநாடு விருதுகள் (WSA) பற்றி திருமதி பீசாவுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. • 19ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 3வது அரையாண்டு தேர்வுகள் இயங்கலையூடாக நடத்தப்பட்டன. • 19ஆம் திகதி - வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாட்டு (இயங்கலை) குறித்த குறுகிய கால கற்கைநெறியை வெற்றிகரமாக முடித்த 10 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. • 23ஆம் திகதி - நூலகம், கொழும்பு பல்கலைக்கழகம் – வெபினார் தொடர் 2021 – 4 “உயர்கல்வியில் கலப்பின கற்றலை நோக்கி எண்ணியல் மாற்றம்” பேராசிரியர் கே.பி.ஹேவாகமகே, பணிப்பாளர்/கொ.ப.க.க. https://lib.cmb.ac.lk/digital-transformation-in-higher-education-towards-hybrid-learning/

	• 25ஆம் திகதி - கொ.ப.க.க. ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான Dialog இலிருந்து 5 ஆம் தலைமுறை பற்றிய விழிப்புணர்வு அமர்வு https://www.youtube.com/watch?v=_foQWni6tRY • 26ஆம் திகதி - Prof K P Hewagamage delivered a Keynote speech at 'Colombo SIGCHI Research Showcase' organized by the Colombo ACM SIGCHI Chapter • 26ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 3வது அரையாண்டு தேர்வுகள் இயங்கலையூடாக நடத்தப்பட்டன. gpற நடவடிக்கைகள் • புதிய பாடத்திட்டத்திற்கான முன்னோட்ட (விளம்பரம்) காணொளியை உருவாக்கியது, "கலப்பு மற்றும் மின்-கற்றல் படிப்புகளுக்கான காணொளி அடிப்படையிலான கற்றல் உள்ளடக்க மேம்பாடு" IIOE இயங்குதளத்திற்காக (https://www.iioe.org/) • 2021 கொ.ப.க.க. செய்திமடலை வெளியிடப்பட்டது
ஜூலை 2021	• 2ஆம் திகதி - ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான 'டர்னிடின்' குறித்த கருத்தரங்கு- கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட உதவி நூலகரால் நடத்தப்பட்டது. • 3ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 3வது அரையாண்டின் இயங்கலைத் தேர்வுகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. • 7ஆம் திகதி - த.தொ.இ. 4ஆம் அரையாண்டு விடய வல்லுநர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. • 12ஆம் திகதி - Dialog இனால் 5வது தலைமுறை கண்டுபிடிப்பு மையத்திற்கான 5வது தலைமுறைத் தொழில்நுட்பம் குறித்த இயங்கலைக் கருத்தரங்கு. • 16ஆம் திகதி - கொ.ப.க.க. உடன் சாத்தியமான ஆராய்ச்சி ஒத்துழைப்பு தொடர்பாக CelaTa (Pvt) Ltd இன் இயங்கலை ஊடான கருத்தரங்கு • 18ஆம் திகதி - JavaSE ஐப் பயன்படுத்தி ஜாவா பிரயோக மென்பொருள் மேம்பாடு குறித்த குறுகிய படிப்பை வெற்றிகரமாக முடித்த பங்கேற்பாளர்களுக்கு 19 சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. • 24ஆம் திகதி - உ.எ.ப.தொ.நி. (ADMTC) இனால் 11 பங்கேற்பாளர்களுக்கு "வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாடு" என்ற குறுகிய கால கற்கைநெறியின் புதிய தொகுதி தொடங்கப்பட்டது. • 27ஆம் திகதி - UNESCO-ICHEI ஆல் நடத்தப்பட்ட IIOE ஆசிய-பசிபிக் மத்திய ஆண்டு கூட்டம் 2021 இல் "இ-கற்றல் மற்றும்

	b-கற்றலுக்கான காணொளி அடிப்படையிலான கற்றல் உள்ளடக்க மேம்பாட்டிற்கான" விளம்பர காணொளி வழங்கப்பட்டது. ● 30ஆம் திகதி 2020 த.தொ.இ. திட்டத்தின் தரம் II (2வது ஆண்டு) பெறுபேறுகள் வெளியிடப்பட்டது ● 31ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது அரையாண்டின் பரீட்சைகள் தொடங்கப்பட்டன (இயங்கலை ஊடாக) பிற நடவடிக்கைகள் ● கணினியியலில் தத்துவ முதுகலை மாணி புதிய விண்ணப்பதாரர்களின் பூர்வாங்க முன்மொழிவு தற்காப்பு விளக்க அளிப்பு (இயங்கலை ஊடானது). ● இளங்கலை மற்றும் முதுகலை தேர்வுகளுக்கு முன்னோடியான மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட்டன. ● முதுகலைத் திட்டத்தின் 3வது /4ஆம் அரையாண்டுகளுக்கான இயங்கலைத் தேர்வின் செயல்முறையை மேம்படுத்துவதற்கான இயங்கலை ஊடான செயலமர்வுத் தொடர் ● த.தொ.இ. இயங்கலைப் பதிவிற்கான நேர்காணல் நடத்தப்பட்டது
ஆகஸ்ட் 2021	● 5ஆம் திகதி - த.தொ, இல் உயர் டிப்ளமோ (த.தொ.உ.டி.) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. ● 7ஆம் திகதி - 20 மாணவர்களுக்கு PHP & MySQL உடன் மாறும் இணையத்தளப் பிரயோக மேம்பாடு குறித்த குறுகிய கால கற்கைநெறி தொடங்கப்பட்டது. ● 17ஆம் திகதி - தகவல் முறைமைகள் (IS) க்கு இயங்கலை ஊடாக குழு 1,2 மற்றும் 3க்கு உழச்சார்பு மதிப்பீடு நடத்தப்பட்டது - ● 21ஆம் திகதி - தகவல் முறைமைகள் (IS) க்கு Make-Up I மதிப்பீடு மற்றும் எம்ஃபில்/பிஎச்டி பொது கணினி சோதனை இயங்கலை ஊடாக நடாத்தப்பட்டது. ● 21ஆம் திகதி - இணையத்தளப் பாதுகாப்பு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது அரையாண்டின் இயங்கலைத் பரீட்சைகள் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டன. ● 22ஆம் திகதி - JavaSE ஐப் பயன்படுத்தி ஜாவா பிரயோக மேம்பாடு குறித்த குறுகிய கால கற்கைநெறியொன்று 22 மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்டது. ● 25ஆம்– 27ஆம் திகதி - Moodle தொடர்பான பணியாளர்களுக்கான பயிற்சியொன்று இ-க.நி. இனால் நடாத்தப்பட்டது. ● 27ஆம் திகதி - தகவல் முறைமைகள் (IS) Make-Up II க்கான உழச்சார்பு மதிப்பீட்டு இயங்கலை ஊடாக நடாத்தப்பட்டது.

	• 27ஆம் திகதி - கலாநிதி (திருமதி) நமாலி சுரவீர, எண்ணியல் கற்பித்தல் மற்றும் கற்றல் தொழில்நுட்பவியலாளர், தலைவர்/ நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்துறை, களணிப் பல்கலைக்கழகம் அவர்களினால் : திறந்த புத்தக வீட்டுப் சோதனைகள்/வினாத்தாள்கள் தயாரித்தல் மற்றும் நடைமுறைகள் பற்றிய இயங்கலை ஊடான மதிப்பீடு நடத்தப்பட்டது பிற நடவடிக்கைகள் • முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் 1வது & 3வது அரையாண்டு இயங்கலை ஊடான பரீட்சைகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.
செப்தெம்பர், 2021	• 3 ஆம் திகதி - கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் ரணில் ஜயவர்தன அவர்களினால் "ஆராய்ச்சியின் மூலம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தரவரிசையை முன்னேற்றுதல்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. (https://youtu.be/tyZpdqGwDd8) • 8ஆம் திகதி - கொ.ப.க.க. இன் கல்விசாரா ஊழியர்களுக்கு பயனுறுதியான மின்னஞ்சல் தொடர்பாடல் (பகுதி I) குறித்த இயங்கலை ஊடான செயலமர்வு நடத்தப்பட்டது. (https://youtu.be/jCGJxv-HA-U) • 15ஆம் திகதி - கொ.ப.க.க. இன் கல்விசாரா ஊழியர்களுக்கு பயனுறுதியான மின்னஞ்சல் தொடர்பாடல் (பகுதி II) குறித்த இயங்கலை ஊடான செயலமர்வு நடத்தப்பட்டது (https://youtu.be/JIJP-X8vBXk) • 16ஆம் & 17ஆம் திகதிகள் - இளம் கணினி விஞ்ஞானிகளின் இரண்டாம் சுற்று திட்ட மதிப்பீடு 2021 நடைபெற்றது. • 19ஆம் திகதி - புதிய உள்ளெடுப்பிற்கான முகலைமாணி நிகழ்ச்சித்திட்டங்களின் தொடக்க விழா ஜூம் செயலி மூலம் நடைபெற்றது. முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டக் கையேடு 2020/2021 விழாவில் வெளியிடப்பட்டது. URL: https://ucsc.cmb.ac.lk/downloads/Masters_Handbook_2021.pdf • 21 ஆம் திகதி - தகவல் தொழில்நுட்ப இளங்கலை (BIT) 2020 இன் 350 மாணவர்களுக்கான தகுதி பட்டியல் மற்றும் 1151 மாணவர்களுக்கான த.தொ.இ.-BIT நிலை III (அரையாண்டு V மற்றும் VI) பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. • 22 ஆம் திகதி - கொ.ப.க.க. இன் கல்விசாரா ஊழியர்களுக்காக Google Calendar இல் இயங்கலை ஊடான செயலமர்வு நடத்தப்பட்டது (https://youtu.be/hj2sYH3HXJ4) • 24ஆம் திகதி - 1வது மற்றும் 3வது அரையாண்டு முதுகலை மாணி நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவுரைகள் தொடங்கப்பட்டது

	• 27ஆம் திகதி - இரண்டாம் அரையாண்டு இளங்கலை விரிவுரைகள் தொடங்கியது பிற நடவடிக்கைகள் • த.தொ.மு., க.வி.மு. க.வி. இல் வி.மு., வியாபாரப் பகுப்பாய்வில் முதுமாணி ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் தனிப்பட்ட கருத்திட்டங்களில் இறுது மதிப்பீடு நடாத்தப்பட்டது. • முதுநிலை நிகழ்ச்சித்திட்டங்களின் 2ஆம் ஆண்டுக்கான இயங்கலை மாணவர் பதிவு நடத்தப்பட்டது
ஒக்தோபர் 2021	• 1 ஆம் திகதி - உள்வாரி இளங்கலை பட்டதாரி மாணவர்களுக்கான தொழில்துறை வேலை வாய்ப்புத் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம் • 4ஆம் திகதி - வளவாளர்களுடன் பல்கலைக் கழகத்திற்கு முந்தைய ஆற்றுப்படுத்தல் கற்கைநெறி செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. • 4ஆம் திகதி - Itelasoft நிறுவனத்தால் கொ.ப.க.க. இளங்கலைப் பட்டதாரிகளுக்கான "உங்கள் விற்பனைப் படை வாழ்க்கையைத் தொடங்குங்குங்கள்" என்ற தொழில்நுட்பப் பேச்சு அமர்வு • 7ஆம் திகதி - கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் முறைமைகளில் இளங்கலை பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் இறுதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன • 8ஆம் திகதி - கொ.ப.க.க. ஊழியர்களுக்கான Google Calendar இல் இயங்கலை செயலமர்வு https://youtu.be/M5uXEb5jYbU • 9ஆம் & 10ஆம் திகதிகள் - முதுநிலை நிகழ்ச்சித்திட்டத்தின் 4ஆம் அரையாண்டுத் தேர்வுகள் (இயங்கலையில்) நடத்தப்பட்டன • 13ஆம் திகதி - கொ.ப.க.க. ஊழியர்களுக்கான Google Drive இல் இயங்கலை செயலமர்வு https://youtu.be/GGBHv3dRHvA • 15ஆம் திகதி - கொ.ப.க.க. உள்/வெளிவாரி இளங்கலைப் பட்டதாரிகளுக்கான "தனிப்பட்ட வியாபாரக் குறியீடு" குறித்த தொழில்நுட்பப் பேச்சு அமர்வு GAPSTARS • 16ஆம் திகதி - 17ஆம் திகதி மற்றும் 23 ஆம் - 24ஆம் திகதிகளில் - முதுநிலை நிகழ்ச்சித்திட்டத்தின் 4ஆம் அரையாண்டுத் தேர்வுகள் (இயங்கலையில்) நடத்தப்பட்டன • 27ஆம் திகதி - கொ.ப.க.க. ஊழியர்களுக்கான Google Drive மற்றும் Docs இயங்கலை செயலமர்வு (பகுதி 2) https://youtu.be/oJ_HdD7oDJo • 27ஆம் திகதி - பல்கலைக்கழக மாணவர்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி ஆய்வகத்தை (5வது தலைமுறை கண்டுபிடிப்பு மையம்) நிறுவுவதற்கு கொ.ப.க.க. மற்றும் Dialog Axiata PLC இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது

	• 29ஆம் திகதி - Huawei மொபைல் சேவைகளால் (HMS) கொ.ப.க.க. உள்/வெளிவாரி இளங்கலைப் பட்டதாரிகளுக்கான "கையடக்க செயலி மேம்பாட்டு பயிற்சி மற்றும் சான்றழிப்புக் கற்கைநெறி" குறித்த செயலமர்வு பிற நடவடிக்கைகள் • ICTer2021 ஆய்வுக் கட்டுரைகள் மீளாய்வுப் பட்டறைகள்
நவம்பர் 2021	• 10ஆம் திகதி - கொ.ப.க.க. ஊழியர்களுக்காக Google DOCகள் குறித்த இயங்கலைச் செயலமர்வு நடத்தப்பட்டது (https://youtu.be/KlxHW5J_OMI) • 13ஆம் திகதி - உ.எ.தொ.ஊ.நி. (ADMTC) ஆல் வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாடு குறித்த குறுகிய பயிற்சி வகுப்பு ஆரம்பம் • 15ஆம் திகதி - கொ.ப.க.க. தொழில் கண்காட்சியின் தொடக்க விழா 2021 (https://youtu.be/9xEGOuxlSbk) • 25ஆம் திகதி - HUAWEI மொபைல் சர்வீசஸ் (HMS) மூலம் கொ.ப.க.க. இளங்கலைப் பட்டதாரிகள் (உள்/வெளிவாரி) மற்றும் ஊழியர்களுக்கான கையடக்க செயலி மேம்பாட்டு பயிற்சி மற்றும் சான்றிதழ் படிப்பு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. (https://drive.google.com/file/d/1zyguBVdzCWGlm-YwZm4DD67mSdKCNhJx/view?usp=sharing) • 29ஆம் திகதி - 5வது SLCB தலைவரின் MICE பற்றிய கருத்துக்களம் - இலங்கைக்கான அனுபவப் பகிர்வு, கட்டியெழுப்புதல் மற்றும் வெற்றியளித்தல் மற்றும் சர்வதேச மாநாடுகளை பேராசிரியர் கே பி ஹேவாகமகே, பணிப்பாளர்/கொ.ப.க.க. வழங்கினார். பிற நடவடிக்கைகள் ஆங்கில மொழி கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்தது
திசெம்பர் 2021	• 1 ஆம் திகதி - கொ.ப.க.க. இன் ஆராய்ச்சி ஆய்வகம் (4வது தளம்) மற்றும் பல்நோக்கு கணினி ஆய்வகம் (தரை தளம்) ஆகியவற்றின் சம்பிரதாய திறப்பு மற்றும் வளர்ந்து வரும் பிராந்தியங்களுக்கான த.தொதொ. இன் முன்னேற்றங்கள் குறித்த சர்வதேச மாநாட்டின் தொடக்க விழா ICTer2021 • 2 ஆம் - 1 ஆம் நாள் வளர்ந்து வரும் பிராந்தியங்களுக்கான த.தொ.தொ. இன் முன்னேற்றங்கள் பற்றிய சர்வதேச மாநாட்டு ICTer2021 • 3 ஆம் - 2 ஆம் வளர்ந்து வரும் பிராந்தியங்களுக்கான த.தொ.தொ. இல் முன்னேற்றங்கள் குறித்த சர்வதேச மாநாட்டு ICTer2021 • 4ஆம் 5ஆம் திகதிகளில் – ICTer2021 மாநாட்டு சுற்றுப்பயணம் • 9ஆம் திகதி - முக்கிய உரை “எதிர்கால நூலக சேவைகளின் எண்ணியல் மாற்றம்: உயர் கல்வி அமைப்பில் கல்வி நூலகங்களின் புதிய வகிபாகம்” பேராசிரியர் கே.பி. ஹெவாகமேஜ், பணிப்பாளர்/கொ.ப.க.க.

	• 9ஆம் & 10ஆம் திகதிகளில் - கொ.ப.க.க. மாணவர்களுக்காக கோட்ஜென் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட் நடத்திய “தொழில் வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வு பட்டறை” • 9ஆம், 16ஆம் திகதி ^ 23 - “கையடக்கத் தொலைபேசி செயலி மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் சான்றளிப்பு கற்கைநெறி" கொ.ப.க.க. இற்காக ஹுவாவி கையடக்க சேவைகள்/ HUAWEI Mobile Services (HMS) நடாத்தப்பட்டது. • 27ஆம் மற்றும் 29ஆம் திகதி - த.தொ.அ. செய்முறைப் பரீட்சை (இயங்கலை) நடைபெற்றது.

8. கணக்கோய்வு அறிக்வக 2021

8.கணக்கோய்வு அறிக்வக 2021

எச்ஈ/பீ/யூசீஎஸ்சீ/2021/எப்ஏ/04 2022 யூன் 15

பணிப்பாளர்,
கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

பிரதிகள்

01. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
02. செயலாளர், கல்வி அமைச்சு
03. உபவேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்

எச்ஈ/பீ/யூசீஎஸ்சீ/2021/எப்ஏ/04 2022 யூன் 15

பணிப்பாளர்,
கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவின் மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2002 இன் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக செயல்வழிக் கோவையின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவகத்தின் 2021 டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில்

முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படாதென்ற போதிலும் நிறுவனத்தின் வெளிவாரி பாடநெறிகள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூபா 293,954,234 கூட்டுத்தொகையான மொத்த வருமானத்தில் ரூபா 165,031,257 கூட்டுத்தொகையான மொத்த செலவினம் ஈடுசெய்யப்பட்டு ரூபா 128,922,977 ஆன தேறிய வருமானம் நிதிச்செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை குறைத்து அனைத்து வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதித் திகதியிலும் மீளாய்வு செய்யாத காரணத்தால் ரூபா 6,913,358 கிரயமான வாசிகசாலை புத்தகங்கள் (Library Books & Periodicals) மற்றும் வெளியீடுகள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 8,788,468 ஆன செயற்திட்ட நன்கொடைகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணுதல் மற்றும் அளவிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன், அது தொடர்பில் எந்தவித சான்றுபடுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாவது மேலே இனங்காணப்படாத தகவல்களை வாசிக்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் அடிப்படையில் பொருண்மையான அளவில் பொருந்தவில்லையா என்பதை கருத்திற்கொள்வது ஆகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையான தவறுகளாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் அவதானித்தால், அந்த விடயம் என்னால் அறிக்கையிடப்பட வேண்டும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிட எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு இயங்க கணக்காய்வுக்கு அத்தியாவசியமானது என கருதப்படும் அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெற்றதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகள் அதிகாரச்சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு		விபரம்
(அ)	1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை	வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்காக 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 26,399,881 கூட்டுத்தொகையான வெளிநாட்டு மாணியங்கள் நேரடியாக பெற்றுக் கொள்ள

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ)	2009 இன் பெப்ரவரி 05 ஆந் திகதிய 2009/2 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை.	இடர் கடன் செலுத்தப்பட முடியுமான உச்ச எல்லையினை விஞ்சி 41 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 11,305,700 ஆன தொகை இடர் கடனாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 01 முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் பிணைமுறைகளை மீறிய ஐந்து விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,488,865 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட தவறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 01 முதல் 07 வருடங்கள் வரையிலும் பழமையான ரூபா 1,229,330 கடன் பட்டோரிடமிருந்து பணம் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

2022.06.16 பின்னிணைப்பு III

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72,
பொலதுவ வீதி,
பத்தரமுல்ல.

கௌம் ஐயா,

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குறித்து வைத்துக்கொள்கின்றேன்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கணக்காய்வு அவதானிப்பு		**பதில்**
(அ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படாதென்ற போதிலும் நிறுவனத்தின் வெளிவாரி பாடநெறிகள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூபா 293,954,234 கூட்டுத்தொகையான மொத்த வருமானத்தில் ரூபா 165,031,257 கூட்டுத்தொகையான மொத்த செலவினம் ஈடுசெய்யப்பட்டு ரூபா 128,922,977 ஆன தேறிய வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் நிதிச் செயலாற்றல் கூற்றின் வெளிவாரி பாடநெறிகளில் மற்றும் செயற்திட்டங்களிலில் ஈட்டிய தேறிய வருமானம் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 20 தொகுதியின் தகவல்களின் கீழ் விரிவாக வருமான செலவினங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான தொடர்பு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் வருமான செலவினங்கள் ஈடுசெய்தல் இடம்பெற்றிராத போதிலும், கணக்காய்வு பரிந்துரைகளுக்கமைய 2022 ஆம் ஆண்டு முதல் நிதிச் செயலாற்றல் கூற்றில் நிறுவனத்தின் அனைத்து வருமான செலவினங்களை சமர்ப்பிக்க

		நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை குறைத்து அனைத்து வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதித் திகதியிலும் மீளாய்வு செய்யாத காரணத்தால் ரூபா 6,913,358 கிரயமான வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம், நிறுவனத்தின் வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை மீள்மதிப்பீடு செய்தல் நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கையான போதிலும், 2021 ஆம் ஆண்டினுள் அந்த மீள்மதிப்பீடு நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியாதிருந்த போதிலும், அந்த பணிகள் 2022 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்தல் மற்றும் உரிய மீள்மதிப்பீடு பெறுமதிகளை கணக்கு அறிக்கைகளுக்கு சீராக்கம் செய்தல் 2022 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்படும்.
(இ)	மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 8,788,468 ஆன செயற்திட்ட நன்கொடைகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணுதல் மற்றும் அளவிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை.	இந்த கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பில் நிறுவனத்தின் பதில் வழங்குவதற்கு மற்றும் நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடுவதற்கு முடியாதிருந்தால் இந்த கணக்காய்வு அவதானிப்புகள் இறுதிக் கணக்காய்வு அறிக்கைக்கு மாத்திரம் உள்ளடக்கப்பட்டமை ஆகும். நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டினுள் நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 8,788,468 ஆன செயற்திட்ட வருமானத்தில் 2021 ஆம் ஆண்டுக்குரிய வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டு எஞ்சியவை எதிர்காலத்திற்கான செயற்திட்ட வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும், கணக்காய்வு பரிந்துரையில் மற்றும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் செயற்திட்ட பணி மானியங்களை இனங்காணவும் அளவிடவும் 2022 ஆம் ஆண்டு

		முதல் மேற்கொள்ளப்படும்.

1.3 நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

குறித்து வைத்துக்கொள்கின்றேன்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரினதும் பொறுப்புகள்

குறித்து வைத்துக்கொள்கின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

குறித்து வைத்துக்கொள்கின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு		பதில்
2.1	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.1.1	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெற்றதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகள் அதிகாரச்சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.1.2	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(இ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.1.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.2	பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.

	எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	
2.2.1	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.	குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.2.2	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை. (அ) 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை அவதானிப்பு வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்காக 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 26,399,881 கூட்டுத்தொகையான வெளிநாட்டு மாணியங்கள் நேரடியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி கற்கைகள் நிறுவனம் மற்றும் அதன் கல்விசார் பதவியணி சர்வதேச ரீதியில் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஆராய்ச்சி நிதி நன்கொடைகளை பெற்றுக் கொள்வதற்கு சிரத்தையுடன் நடவடிக்கை எடுக்கின்றது. அவ்வாறான நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் குறித்த நிறுவனம் ஒதுக்கிய ஆராய்ச்சி நிதி நன்கொடைகளை நேரடியாக எமது நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

			அவ்வாறான செயற்திட்டங்களுக்காக நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையின் முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த நிதியாண்டின் இறுதியில் இந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உரிய ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும். நிறுவனத்திற்கு கிடைக்கும் அனைத்து ஆராய்ச்சி மானியங்களும் பிரதம முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படும் பாதீட்டின் அடிப்படையில் மாத்திரம் செலவிடப்படும்.
	(ஆ)	2009 இன் பெப்ரவரி 05 ஆந் திகதிய 2009/2 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை.	
		அவதானிப்பு சுற்றறிக்கைக்கு முரணாக இடர்க்கடன் செலுத்தப்பட முடியுமான உச்ச எல்லையினை விஞ்சி 41 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 11,305,700 ஆன தொகை இடர் கடனாக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட நி-றுவனத்தின் முகாமைத்துவ பதவியணி அங்கீகாரத்துடன் 100மூ நிறுவனத்தில் ஈட்டப்பட்ட நிதியினை பயன்படுத்தி நடைமுறைப் படுத்தப்படும் விசேட இடர்கடன் முறைமையாகும். எவ்வாறான போதிலும் இக்கடன் முறைமை தொடர்பில் 2020 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினா தொடர்பில் நிறுவனத்தின் கணக்காய்வு குழுவினதும் முகாமைத்துவ சபையினதும் கலந்துரையாடப்பட்டு இந்த விசேட இடர் கடன் முறைமைக்காக உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையிலும் இடைநிறுத்தப் பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஏப்ரல் மாதம் முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை

			இலக்கம் 2009/02 இன் பிரகாரம் இடர் கடன் வழங்குதல் இடம்பெறும்.
2.2.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.		குறித்து வைத்துக் கொள்கின்றேன்.
2.2.4	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.		குறித்து வைத்துக் கொள்கின்றேன்.

2.3 ஏனைய அவதானிப்புகள்

<table>
<tr><th colspan="2">கணக்காய்வு ஐயவினா</th><th>பதில்</th></tr>
<tr><td>(அ)</td><td>01 முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் பிணைமுறைகளை மீறிய ஐந்து விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,488,865 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடவறவிடப்பட்டிருந்தது.</td><td>கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைமுறிகள் மீறப்பட்டமையால் அறவிடப்பட வேண்டிய தொகை மற்றும் அந்த தொகையில் 2022 ஆம் ஆண்டினுள் அறவிடப்பட்ட தொகை தொடர்பில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
<table>
<tr><th colspan="2">பேராசிரியரின் பெயர்</th><th>2021/12/31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய தொகை</th><th>2022 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அறவிடப்பட்ட தொகை</th><th>தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை</th></tr>
<tr><td>1.</td><td>எஸ்.ஜே.பஹீரதன்</td><td>1,276,862.41</td><td>-</td><td>1,276,862.41</td></tr>
<tr><td>2.</td><td>ருக்மன் சேனாநாயக்க</td><td>1,823,126.13</td><td>-</td><td>1,823,126.13</td></tr>
<tr><td>3.</td><td>எச்.எம்.சிறிவர்த்தன</td><td>5,484,435.15</td><td>-</td><td>5,484,435.15</td></tr>
<tr><td>4.</td><td>ஆர்.எம்.பி.என்.சோமரத்ன</td><td>607,192.96</td><td>-</td><td>607,192.96</td></tr>
<tr><td>5.</td><td>ஆர்.ஏ.எச்.டீ.பெரேரா</td><td>10,297,248.10</td><td>9,134,000.39</td><td>1,163,247.71</td></tr>
<tr><td></td><td></td><td><u>19,488,864.75</u></td><td><u>9,134,000.39</u></td><td><u>10,354,864.36</u></td></tr>
</table></td></tr>
<tr><td></td><td></td><td>மேலே இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எஸ்.ஜே.பஹீரதன் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறிவிடுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கு தொடரப்பட்டுள்ளது.

ருக்மன் திசாநாயக்க அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு அவரின் பிணையாளர்களுக்கு Letter of Demand அனுப்பப்பட்டுள்ளதுடன், அவரின் தற்போதைய வதிவிடம் தொடர்பில் எந்த தகவலும் இல்லை.

திரு எச்.எம்.சிறிவர்த்தன அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய</td></tr>
</table>

		தொகையை அறவிடுவதற்காக, அவர் தற்போது வதியும் நாட்டின் தூதகரத்திற்கு குறித்த பணத்தை அறவிடுமாறு கோரிக்கையொன்று முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் அனுப்பப்படும். திருமதி ஆர்.எம்.பீ.என். சோமரத்ன அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்காக உரிய ஆவணங்கள் பல்கலைக்கழகத்தின் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆர்.ஏ.எச்.டீ. பெரேரா அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய எஞ்சிய தொகை பல்கலைக்கழக நலன்புரி நிதியத்திலிருந்து அறவிடுவதற்காக உரிய ஆவணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.
(ஆ)	2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 01 முதல் 07 வருடங்கள் வரையிலும் பழமையான ரூபா 1,229,330 கடன் பட்டோரிடமிருந்து பணம் அறவிடுவதற்கு தவறியிருந்தது.	கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் ரூபா 709,390.00 தொகை பெற வேண்டியதாக காணப்பட்ட போதிலும், பல்வேறு நீதிமன்ற கட்டளைகளின் அடிப்படையில் (Digital Forensic Services) ஆராய்ச்சி அறிக்கைக்காக நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் ஆகும். இந்த பணத்தை அறவிடுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. I. அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பில் உரிய தரப்பினர், நீதிமன்ற மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு நினைவூட்டற் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. II. நீதிமன்ற அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவிக்கின்றேன். III. 2022 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிடுதல் குறித்த பணத்தை செலுத்திய பின்னர் மாத்திரம் மேற்கொள்ளப்படல்.

கலாநிதி அஜந்த அத்துகோரல

பணிப்பாளர்